Registered as a News Paper
பக்கம் - 24

www.eezhanatham.com


# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 26 | 19 - 25 - ஓகஸ்ட் - 2005





## சந்திரிகாவை ஏமாற்றிய ஆணையாளர்



# சமாதானத்தின் நிலை..?

**வன்னிக் காடுகளுக்கே உரித்தான பாலை மரங்கள் ஆணி வேரோடு விழுவதற்காக நாளை எதிர்பார்த்துக் கிடப்பதும் பல மரங்கள் சரிந்து கிடப்பதனையும் அப்பிரதேசத்தின் தரைத்தோற்றம் தன் இயல்பை இழந்து உருமாறி இருப்பதனையும் அவதானிக்கலாம். இவ்வாறு கிரவல்கள் அகழ்வதன் மூலம் பல ஏக்கர் பரப்பளவுக் காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.**





# கிரவல் அகழ்வுக்காக காடுகள் அழிகின்றன

சுழியன்

வீதிகள் என்பன ஒரு நாட்டின் தலையெழுத்தை தீர்மானிக்கின்றன என்றால் அது மிகையாகாது. ஒரு நகரம் அல்லது பிரதேசத்தின் அபிவிருத்தியில் வீதிகளின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்று. இன்றைய உலக இயக்கத்தில் போக்குவரத்து தொடர்பாடல் ஆற்றும் பங்கு பெரியதே.

ஆனால் அதே நேரம் தன்னுடைய இயற்கை வளங்களையும் எவ்வாறு பேணிப்பாது காத்துக்கொள்கிறது என்பதிலும் அந்நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது என்பதனையும் மறுக்க முடியாததும். மறக்கக் கூடாததும்.

ஒன்றைஇழந்துதான் இன்னொன்றைப் பெறலாம் என்பது நியதி. ஆனால் குறுகிய காலப் பயனைப் பெறும் ஒன்றுக்காக பயனுள்ள வளம் ஒன்றை ஒரு கால இடை வெளியில் மீண்டும் மீண்டும் இழப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதை ஏன் நாம் இங்கு கூறுகிறோம் என்றால் வடக்கு கிழக்கை பொறுத்தவரை குறிப்பாக வன்னியைப் பொறுத்தவரை வீதிகள் புனரமைப்பு அண்மைக்காலமாக பரவலாக இடம்பெற்று வருகின்றது. இந்த இடத்தில் கவனிக்கவேண்டிய விடயம் என்னவெனில் இவ்வீதிகளில் பெரும்பாலா னவை கிரவல்கள் மூலமே புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

இவ்வாறு கிரவல்கள் மூலம் புனரமைப்புச் செய்யப்படும் வீதிகள் ஆறுமாதங்கள் கூட ஒழுங்காக தாக்குப்பிடிப்பதில்லை என இதில் இத்துறையோடு சம்பந்தப்பட்ட ஒருவர் எமக்குக் கூறினார். இதில் போக்குவரத்து மிகக் குறைவாக உள்ள ஒரு புனரமைப்புச் செய்யப்பட்ட வீதி குறைந்தது ஒருவருடம் பயன்படக்கூடிய நிலைமை காணப்படலாம் எனவும் கூறினார்.

இவ்வாறு கிரவல்கள் மூலம் புனரமைப்புச் செய்யப்படும் வீதிகள் ஆறுமாதங்களின் பின் மீண்டும் புனரமைப்புச் செய்தல் வேண்டும். இல்லையெனில் அவ்வீதிகள் மிக மோசமான நிலையை அடைந்து விடும். இந்த நிலையில் கிரவல்கள் மூலம் புனரமைப்புச் செய்யப்படும் ஆறுகிலோமீற்றர் நீளமுள்ள வீதிக்கு மூன்று மில்லியன் ரூபாய்கள் செலவு செய்யவேண்டும். செலவு செய்யவும் பட்டுள்ளது.

எனவே கிரவல்கள் மூலம் புனரமைப்புச் செய்வதற்கு இங்குள்ள காடுகளிலிருந்து கிரவல்கள் அகழப்படுவது தவிர்க்கமுடியா தது. ஆனால் இவ்வாறு அகழப்படுவதன் மூலம் இற்றைவரை ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் காடுகள் அழிக்கப்பட் டுள்ளதும் கவனிக்கவேண்டும்.

அதாவது, கொக்காவில், பழைய முறிகண்டி, மூன்றுமுறிப்பு, கல்மடு, கேப்பாபுலவு, ஊற்றுப் புலம், தம்பனை, மண்ணங் குளம் போன்ற இடங்களிலும் இன்னும் வேறு பல இடங்களிலும் கிரவல்கள் அகழப்பட்டு வருகின்றன.

மேற்கூறப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும் காடுகள் எவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன என்பதை. அதிலும் வன்னிக் காடுகளுக்கே உரித்தான பாலை மரங்கள் ஆணி வேரோடு விழுவதற்காக நாளை எதிர் பார்த்துக் கிடப்பதும் பல மரங்கள் சரிந்து கிடப் பதனையும் அப்பிரதேசத்தின் தரைத்தோற்றம் தன் இயல்பை இழந்து உருமாறி இருப்பதனையும் அவதானிக்கலாம். இவ்வாறு கிரவல்கள் அகழ்வதன் மூலம் பலஏக்கர் பரப்பளவுக் காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அழிக்கப்படப்போகின்றன.

இங்கே நாம் வலியுறுத்த விரும்பும் விடயம் என்னவெனில் இவ்வாறு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எமது காட்டுப் பகுதிகளிலிருந்து கிரவல்கள் அகழப்பட்டு வீதிகள் புனரமைப்பு ஒரு சுற்று வட்டத்தில் தொடர்ந்து நடந்தால் வனவளத்தின் எதிர்காலம்?

சுற்றுச்சூழல் விடயத்தில் இன்றைய உலகமும் சரி எமது பிரதேசமும் சரி அதனைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை செலுத்திவரும் வேளையில் குறிப்பிட்ட ஒரு கால இடைவெளிக்கு அமைய தொடர்ந்து கிரவல்கள் அகழப்பட்டு வீதிகள் புனரமைப்பு செய்வது என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. ஏனெனில் கிரவல்கள் மூலம் புனரமைப்புச் செய்யப்படும் வீதிகள் ஆறுமாதத்திற்குப் பின் மீண்டும் புனரமைப்புச் செய்யவேண் டும். அவ்வாறு மீண்டும் புனரமைப்புச் செய் வதற்கு காடுகள் அழிக்கப்பட்டு கிரவல்கள் அகழப்படல் வேண்டும். இதன் பின்னர் ஆறுமாதங்களின் பின் இதேவேலை மீண்டும் தொடரும். இவ்வாறு தொடர்ந்தால் வன வளத்தின் நிலை?

மேற்படி கிரவல்கள் மூலம் புனரமைப்புச் செய்யப்படும் வீதிகள் மூலம் போக்குவரத்தில் பல சிக்கல் உண்டு. சாதாரண வேகத்தில் வாகனங்கள் சென்றால் அவ்வீதியால் பயணிப்பவர்களின் நிலை பரிதாபகரமானது. மேலும் எழுப்படும் புழுதிகளால் ஏற்படும் நோய்கள் என கிரவல் வீதிகளால் ஏற்படும் அசௌகரியங்கள் ஒரு புறம் இருக்க.

தங்களுக்குக் கிடைக்கும் நிதியினை பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு வீதியின் அரைவாசி நீளத்தையோ அல்லது கால்பங்கு நீளத்தையோ தார் போட்டு புனரமைப்புச் செய்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட நிலைக்கு அப் பால் உள்ள மக்கள் விசனம் அடைவார்கள் என்பதற்காக முழு வீதியையும் கிரவல்கள் போட்டு புனரமைப்புச் செய்வதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இதில் ஒன்றை கவனிக்க வேண்டும். இவ்வாறு கிரவல் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள் பல மில்லியன் ரூபாய்கள் செலவு செய்து ஆறு மாதத்திற்குப்பின்னரும் புனரமைப்புச் செய்ய வேண்டிய தேவை எழுகின்றது.

அப்போது ஒரு புறம் கிரவல்கள் அகழப் படும்போது வனவளம் அழிக்கப்படுகிறது. மேலும் தரைத் தோற்றம் பாதிக்கப்படுகிறது எனப் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

எனவேதான் இந்த இடத்தில் நாம் ஒரு மாற்று வழியை அல்லது திட்டத்தை தேட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அதாவது நாம் எமது இயற்கை வன வளங்களையும் பாதுகாக்கவேண்டும். அதேநேரம் வீதிகளையும் புனரமைக்க வேண்டும் பல மில்லியன் ரூபாய்கள் செலவு செய்து ஆறுமாத காலம பயன்படக்கூடிய ஒரு வீதிப்புனரமைப்புக்கு மீண்டும் மீண்டும் இயற்கை வளத்தை இழக்கமுடியாது.

ஒன்றை பெற இன்னொன்று இழக்கப்படுவதனை தவிர்க்கமுடியாது. ஆனால் பெறப்படும் ஆறுமாதகாலப் பயன்பாடு ஒன்றுக்காக இயற்கையை தொடர்ந்து இழப்பது என்பது சிந்திக்கவேண்டியது. ஆகவே நீண்ட காலநோக்கு அடிப்படையில் எமது திட்டம் இருக்கவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தவேண்டும். இங்கு நிதி வளம் என்பதும் மிகப் பெரும் பிரச்சினைதான். எனவேதான் மாற்று வழிக்கு அல்லது திட்டத்திற்கு செல்லவேண்டிய தற்போதைய தேவையை சம்பந்தப்பட்டவர்கள் மறந்து விடக் கூடாது என்பதுதான் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.



# கண்டல்களைக் காப்போம்!

கடற்கரையை அண்டிய, உலர் காலநிலை உள்ள உவர் சேற்று நிலங்கள் எமது தேசத்தின் தரைத்தோற்ற அம்சங்களில் ஒன்றாகும். தாவரங்கள் இப்பிரதேசத்தில் குடியேறுவதற்கு இன்னும் பின்னடித்துக்கொண்டிருக்கின்றன. காரணம் சேறும், உப்பு நீரும், வரண்ட காற்றும், வெயிலும் அநேக தாவரங்களைப் பயமுறுத்தி அவற்றின் குடியேறல்களை தடுத்து வருகின்றன. தாவரங்கள் குறைந்த இப்பகுதி மேலும் மேலும் காய்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தெரிந்த கண்டல்கள் வெற்றிகரமாக குடியே[illegible]ி, சூழலுக்கு இயைபாக்கி போராடி நிலைத்து வருகின்றன. வெயிலும், உலர்காற்றும் இவற்றை எதுவும் செய்யமுடிவதில்லை. எம்மைப் போலவே கண்டல் தாவரங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் ஏராளம்.

1.நிலம் சேறாக இருப்பதால் வேர்கள் ஒட்சிசன் பெறுதலும் பற்றிப்பிடித்தலும் கடினம்.

2.உலர் காற்றும் வெயிலும் அதிகமாக இருத்தலால் ஆவியுயிர்ப்பின் மூலம் நீரிழப்பு அதிகம்.

3.நன்னீர் பற்றாக்குறை போன்றன.

ஆனால், பிரச்சினையை கண்டும் அசராத கண்டல்கள்

1.பட்டைவாய்கள் மூலம் ஒட்சிசனைப் பெற்றும்.

2.மிண்டிவேர், தாங்கும் வேர் மூலம் நிலையை ஸ்திரப்படுத்தியும்.

3. தடிப்பான தாவர கலச்சாற்றின் மூலம் ஆவியுயிர்பைத் தடுத்தும் குடித்தனம் நடத்திக்கொண்டிருக்கின்றன. கண்டல் தாவரங்கள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டிய தன் முக்கிய காரணம் அதன் பொருளாதார முக்கியத்துவங்களாகும்.

உவர் நீர்க்கரைகளில் அடர்ந்து காணப்படும் கண்டல் காடுகளின் வேர்ச் செறிவுகள் கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்திற்கு சாத்தியமானதும் பாதுகாப்பானதுமான இடமாகும். இங்கு கடல் உயிரினங்கள் பெருமளவில் இனம் பெருக்குகின்றன. அத்துடன் சிறிய அளவில் விறகுத் தேவையையும் பூர்த்தி செய்கின்றன.

இதற்கும் மேலாக கடற்கரைகளில் காற்றின் வேகமும் நீரின் ஓட்ட வேகமும் ஏற்படுத்தும் மண்ணரிப்பு ஆபத்தை தடுத்து நிறுத்துவது கண்டல் தாவரங்களின் சூழலியல் முக்கியத்துவமாகும். இவ்வாறாக பெரும் சேவையாற்றும் கண்டல் தாவரங்களின் முக்கியத்துவத்தை முழுதாக உணராமல் அவற்றை அழிக்கும் செயற்பாடுகள் வேதனைகுரியவையாகும். வலைக்கு சாயமிடவும், வேறு தேவைகளுக்கும் கண்டல்கள் பச்சையாக சாகடிக்கப்படுகின்றன. கண்டல்களை அழிப்பதன் மூலம் எமது அழிவை நாமே தேடிக்கொள்வதா?

திருந்துவோம்! கரையோரங்களை காக்கும் 'கண்டல் காவலாளிகளுக்கு' உதவுவோம். முடியாவிடில் உபத்திரவத்தை யாவது தவிர்ப்போம்.

"கண்டல்களை காப்போம், காக்கப்படுவோம்"
வனவிழிப்புணர்வுப் பிரசாரத்திட்டம் - 2005

# கதிர்காமர் செத்துக்கிடப்பதைக் காண யார்... யார்... விரும்பியிருக்கக் கூடும்?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சு மூலமான அரசியல் தீர்வை காணும் முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்க உறுதி கொண்டிருப்பவர்களும் முரண்பாடுகள் அமைதியான முறையில் தீர்க்கப்படுவதை எதிர்ப்பவர்களுமான "அரசியல் எதிரிகள்" (POLITICAL FOES) வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை கொலை செய்திருக்கிறார்கள் என்று சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தங்கள் உறுப்பினர்கள் மற்றும் தங்கள் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் நிழல் யுத்தத்துக்கு மத்தியிலும் அளப்பரிய பொறுமை காத்து பேச்சு மூலமான தீர்வில் ஆர்வம் காட்டும் புலிகள், கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். அதையும் விட இக்கொலையோடு புலிகளை தொடர்புபடுத்தக்கூடிய சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் கூறியிருக்கிறார்.

கதிர்காமர் புலிகளின் எதிரிதான் சிலகாலத்துக்கு முன்புவரை. ஆனால் செத்தபாம்பை அடிக்கும் வழக்கம் புலிகளிடம் கிடையாது. ஆனானப்பட்ட ஜே.ஆர்.ஐயே இயற்கை மரணம் எய்தி அட்ரஸ் இல்லாமல், கதிர்காமருக்கு கிடைத்த 'துக்கதினம்' மற்றும் 'சுதந்திர சதுக்க தகனக்கிரியை', கௌரவங்கள் கூட இல்லாமல் போகவிட்டவர்கள். இன்னும் ஆகக் கூடியது 4 மாதத்தில் செல்லாக் காசாக (சந்திரிகாவின் பதவிக்கால (முடிவில்) போய்விட விருப்பவருக்காக மூன்று 0.45 ரவைகளை செலவிட வேண்டிய அவசியம் எதுவும் புலிகளுக்கு இல்லை.

அப்படியானால் சந்திரிகா குறிப்பிடும் இந்த " அரசியல் எதிரிகள்" யாராக இருக்கலாம்.

சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரதமர் பதவிக்கு போட்டியிட அநுரா நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னுமொரு கொப்பேகடுவவா (சனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற ஹெக்ரர் கொப்பேகடுவ, அரசியலில் இருந்தே ஓரம் கட்டப்பட்டார்.) என இப்போதே கேள்வி எழுப்பப்படும் அளவுக்கு மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி வாய்ப்பின் அளவு இருக்கிறது. வந்த வெள்ளம் இருந்ததையும் அள்ளிக் கொண்டு போய்விட்டதுபோல் பிரதமர் பதவி ஏற்கனவே பறிபோய்விட்டிருக்கிறது. இதனால் சுதந்திரக் கட்சியின் ஆட்சிப் பீடத்தில் வேறு காத்திரமான பதவிகளைப் பெற கதிர்காமர் நிச்சயமாகவே தடையாக இருப்பார். எனவே கதிர்காமர் செத்துக் கிடப்பதைக் காண மகிந்த ராஜபக்ஷ விருப்பியிருக்கலாம்.

அடுத்தவர் ஜயந்த தனபால ஐ.நா பதவிகளில் கண்வைத்திருக்கும் ஜயந்த தனபாலவுக்கு முதலாம் இலக்க எதிரி கதிர்காமர்தான். இருவருக்குமிடையேயான விரோதம் பகிரங்கமாகத் தெரிந்த விடயம். இருவரும் கதிர்காமர் செத்துக்கிடப்பதைக காணவிரும்பியிருக்கக்கூடும்.

சந்திரிகாவைப் பொறுத்தவரை கதிர்காமர் பயன் விளைவிக்கும் திறன் முடிந்துபோனவர். கதிர்காமரால் ஆகக் கூடிய உச்சப் பயனை, (அதாவது புலிகளை வெளிநாடுகள் தடைசெய்யச்செய்தது) கதிர்காமர் பெற்றுக்கொடுத்து விட்டார். இப்போது கதிர்காமர் ஒரு " காவு கொடுக்கக்கூடிய துருப்பினன்" (EX-PENDABLE TROOP) "செத்தும் கொடுக்கக் கூடிய சீதக்காதி" அவர். அவர் கொலையால் கிடைக்கக கூடிய அனுதாப அலையே இங்கு குறிப்பிடப்படுகிறது. அடுத்த பதவிக் காலத்தை எப்படிக் கைப்பற்றுவது என்று துடிக்கும் சந்திரிகாவுக்கு கதிர்காமர் பல வழிகளைத் திறந்து விட்டிருக்கிறார். எனவே சந்திரிகாவும் கதிர்காமர் இப்போது செத்துக் கிடப்பதைக் காண விரும்பியிருக்கலாம்.

அமைதிச் சூழலைக் குழப்ப விரும்பும் சிங்கள இனவாதிகள் சிறிலங்காவின் ஆயுதப் படைகளினுள் இருக்கிறார்கள். இவர்களில் பலர் ஜே.வி.பி இன் ஊடுருவல் காரர்களாகவும் இருக்கலாம். வெளிப்படையாகவே புலிகளின் எதிராளியாக இருந்த கதிர்காமரை கொல்வதன் மூலம் ஜே.வி.பியினருக்கு ஒரேகல்லில் பல மாங்காய்கள் விழக்கூடும்.

இந்த இடத்தில் 14.8.2005 சண்டே ஐலண்ட்டின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயத்தை குறிப்பிடுவது பொருத்தமாகவிருக்கும்.

"புலிகள் இயக்க கொலையாளிகள் இதற்கு முன் முக்காலி-தாங்கி ஒன்றை பயன்படுத்தியதாக அறியப்படவில்லை. பதுங்கிச் சுடும் றைபிள்களையும் இரவுப் பார்வைச் சாதனங்களையும் பயன்படுத்துவதில் நிபுணத்துவம் கொண்டவர்கள் இந்த நாட்டில் மிக அரிதாகவே இருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப் போனால் புலிகள் இதற்கு முன்பு அவற்றைப் பயன்படுத்தியதாக அறியப்படவில்லை.

"இப்படியான துல்லியமான படைக் கலங்களை பயன்படுத்தக் கூடிய வேறு நபர்களாக பாதுகாப்புப் படைகளிலும் பொலிசிலும் சிறிய எண்ணிக்கையிலான விளையாட்டுக்காக துப்பாக்கி சுடும் கழகங்களிலும் (Sports Shooting Clubs) உள்ள மிகச் சில நிபுணதது குறிபார்த்துச் சுடுவோர் இருக்கிறார்கள்" என்று அவர் தனது கட்டுரையில் கூறியிருக்கிறார்.

அடுத்ததாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெனாண்டோ இருக்கிறார். வெளிவிவகார அமைச்சர் பதவியைக் குறிவைத்தே இவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சுதந்திரக்கட்சிக்கு தாவியவர் இவர். இவருக்கும் கதிர்காமர் கொல்லப்பட வேண்டியதேவை நிறையவே இருந்தது.

இந்தப்பட்டியலில் அண்மையில் அநுராவும் புலிகளுக்கு எதிராக ஒட்டுக்குழுக்களைச் சேர்த்து " உருவாக்கப்பட்ட" துரோகக்கூட்டின் தலைவனான ஆனந்தசங்கரியும் இணைந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனந்த சங்கரியை வெளிவிவகார அமைச்சராக நியமிக்கும் எண்ணம் சந்திரிகாவுக்கு இருப்பதாக அண்மையில் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த எண்ணத்துக்குப் பின்னால் வெளிநாடு ஒன்றின் "அழுத்தம்" இருப்பதான செய்திகளும் வெளிவந்துள்ளதைப் பார்க்கும் பொழுது கதிர்காமர் மீது பாய்ந்த ரவைகளை சுட்ட விரல்கள் மேற்படி நாட்டின் புலனாய்வு அமைப்பினதாக இருக்கவும் கூடும் என்றும் தோன்றுகிறது. கதிர்காமரைப் போல ஒரு 'விறைச்ச தலை' ஆளை தமது நலனகளுக்கு ஏற்ப 'வளைக்க' குறித்த நாட்டுக்கு இயலாமல் போனதால் அவரை ஒழித்துக் கட்டிவிட்டு "எடுப்பார் கைப்பிள்ளையாக" இருக்கும் ஆனந்தசங்கரியை அவரது இடத்தில் அமர்த்திவிடும் உத்தேசத்திலும் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கக் கூடும்.


சங்கரியும் ஒன்றும் குறைந்தவரல்ல. எழுபதுகளிலே பரந்தன் சந்தியில் வைத்து ஐ.தே.க அமைப்பாளர் மணியத்தைச் சுட்டுக் கொலை செய்தவர்கள் பயன்படுத்திய ஜீப்பின் உரிமையாளர் ஆனந்தசங்கரிதான் என சந்தேசம் உண்டு. எனவே அவரையும் "குறைத்து மதிப்பிட" முடியாது.

இந்த அளவிலே தெற்கில் எந்தக் கொலை நடந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு புலிகளின் தலையில் சுமத்திவிடும் வழக்கத்தை கைவிட்டு, சிறிலங்காவின் புலனாய்வாளர்கள் ஆக்க பூர்வமான முறையில் விசாரணைகளை நடத்தி உண்மையான 'சதிகாரர்களை' வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்ப்போமாக.




***இந்த இடத்தில் 14. 8. 2005 சண்டே ஐலண்ட்டின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயத்தை குறிப்பிடுவது பொருத்தமாகவிருக்கும். "புலிகள் இயக்க கொலையாளிகள் இதற்கு முன் முக்காலி– தாங்கி ஒன்றை பயன்படுத்தியதாக அறியப்படவில்லை. பதுங்கிச் சுடும் றைபிள்களையும் இரவுப் பார்வைச் சாதனங்களையும் பயன்படுத்துவதில் நிபுணத்துவம் கொண்டவர்கள் இந்த நாட்டில் மிக அரிதாகவே இருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப் போனால் புலிகள் இதற்கு முன்பு அவற்றைப் பயன்படுத்தியதாக அறியப்படவில்லை"***

***"இப்படியான துல்லியமான படைக்கலங்களை பயன்படுத்தக் கூடிய வேறு நபர்களாக பாதுகாப்புப் படைகளிலும் பொலிசிலும் சிறிய எண்ணிக்கையிலான விளையாட்டுக்காக துப்பாக்கி சுடும் கழகங்களிலும் (Sports Shooting Clubs) உள்ள மிகச் சில நிபுணத்துவ குறியார்த்துச் சுடுவோர் இருக்கிறார்கள்" என்று அவர் தனது கட்டுரையில் கூறியிருக்கிறார்.***









வின்சென்ற்-புளோறன்ஸ்

# நறுக்கென...

## அதிகாரத்தைக் காப்பாற்ற தெரிந்தவர்கள்



சனாதிபதி சந்திரிகாவின் அரசோடு உறவு வைத்திருந்த காலத்திலும் சரிதான், உறவு இல்லையென்றான போதும் சரிதான் சனாதிபதி சந்திரிகாவை தாங்கள் விட்டு வைத்திருப்பதில்லை என கங்கணம் கட்டி செயற்படுகிறார்கள் ஜே.வி.பி காரர்கள்.

சனாதிபதி சந்திரிகாவின் இயலாமைகளை சுட்டிக்காட்டி அவரை அவமானப்படுத்துவதில் விமல் வீரவன்சவிற்கு நிகர் விமல் வீரவன்சவேதான்.

இந்த கேவலத்தில் சனாதிபதித் தேர்தலை இந்த இரண்டு கட்சிகளும் சேர்ந்து சந்திப்பது தொடர்பாக உத்தியோகப் பற்றற்ற முறையில் வேறு பேசி வருகிறார்கள். இந்த கொடுமையெல்லா வற்றையும் சிங்கள மக்கள் சகித்துக்கொண்டு இருக்கவேண்டு மென்பது அவர்களின் தலைவிதி.

பாவம், சிங்கள மக்கள்தான் என்ன செய்வார்கள், சனாதிபதி சந்திரிகாதான் என்ன செய்வார். முடியும் என்றால் முடித்திருப்பார் முடியாது என்றான போதுதானே ஆட்சியை இப்படி இழுத்துக்கொண்டிருக்கிறார்.

அண்மையில் விமல்வீரவன்ச, இணுவிலில் பொலிஸ் அத்தியட்சகரை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாத முப்படைகளின் பிரதம இராணுவத் தளபதியான சந்திரிகா மாணவர்களை தாக்க உத்தரவிடுகிறார் என தெரிவித்துள்ளார்.

முப்படைகளின் தளபதியான சந்திரிகா தனக்கு அடுத்தபடியான பாதுகாப்பை பெற்றிருந்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையே காப்பாற்ற முடியாத நிலையிலிருக்கும்போது எப்படி ஒரு பொலிஸ் அத்தியட்சக்ரை காப்பாற்ற முடியும்.

இப்படியான சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்களின் கைவசம் இருப்பதெல்லாம் மக்களை தாக்க உத்தரவு பிறப்பிப்பது, அல்லது மக்களை காரண காரியமின்றி கைது செய்து சிறையி லடைக்க அனுமதி வழங்குவது அல்லது இருக்கவே இருக்கிறதே அவசர காலச் சட்டத்தை பிறப்பிப்பது.

இவையெல்லாம் வாழையடி வாழையாக சந்திரிகாவின் அப்பா, சந்திரிகாவின் அம்மா, சந்திரிகா, பத்தாததுக்கு ஜே.ஆர், பிரேமதாஸா என தொடரும் சனநாயக விரோதிகளின் சனநாயக விரோத செயல்களாகும்.

சன நாயகத்தின் பெயரால் அதிகாரத்தைக் கொண்டு மக்களைக் காப்பாற்றுவதற்கு பதிலாக மக்களை எப்படி தாக்குவதென்பதை வழி வழியாக கற்று வந்த அதிகார மேதைகளல்லவா இவர்கள்.

எது எப்படியோ அதிகாரத்தைக் கொண்டு தங்கள் கைகளில் உள்ள அதிகாரத்தை பறி போகாமல் பாதுகாக்கத் தெரிந்த நல்ல பாதுகாவலர்கள்.

இந்த கேடுகெட்ட நிலையில் நாட்டின் இறைமைபற்றியும், நாட்டின் தேசியப் பாதுகாப்புப் பற்றியும் பேசுவதெல்லாம் "ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி மகளே' என்பது போலானதே.

## பிக்குகளின் கோஷம்..!



நாட்டின் இறைமையை பாதுகாக்க சனாதிபதி சந்திரிகா உடனடியாக ஐந்து விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்த ஜாதிக ஹெல உறுமய எதற்கெடுத்தாலும் இந்த ஐந்து என்ற இலக்கத்தை வைத்து தீர்மானங்களையும், கோரிக்கைகளையும் மேற்கொள்வதன் மர்மம்தான் என்ன என்று தெரியவில்லை.

முன்பு பஞ்ச சீலக் கோரிக்கை என இப்படித்தான் ஏதேதோ கண்ணா, பின்னாவென்று ஐந்து கோரிக்கை என்ற பெயரில் ஐந்து நிபந்தனைகளை முன்வைத்தார்கள். இப்போது அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு சனாதிபதி சந்திரிகாவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுமே பொறுப்பேற்க வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

அத்தோடு உடனடியாக செய்ய வேண்டும் என ஒருபட்டியலையும் இட்டுள்ளனர்.

* 'விடுதலைப் புலிகள் அமைப்பை சட்டவிரோத அமைப்பாக பிரகடனம் செய்யவேண்டும்.
* அவசரகாலச் சட்டத்தை பயங்கரவாதத்தை தடுக்கும் முயற்சிகளுக்காக பயன்படுத்த வேண்டும்
* பயங்கரவாதச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்யவேண்டும்.
* நோர்வே மற்றும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் அமைப்புகளை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்.
* அண்டை நாடுகளின் உதவியைக் கொண்டு இரணைமடு விமானத்தளத்தை அழிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

புத்தம் சரணம்... கச்சாமி... என பிரித் ஓத வேண்டிய இந்த பிக்குகள் யுத்தம் சரணம்... கச்சாமி.... என ஓதுவதுதான் புத்த மதத்தை நோக்கும்போது தலை குனிய வேண்டியதாகவுள்ளது.


அண்மையில் தான், ஜப்பானிய நகரங்களான ஹிரோசிமா, நாகசாகி போன்ற நகரங்கள் மீது அணுகுண்டு வீசி அறுபது ஆண்டுகள் கடந்த நிகழ்வை ஜப்பானியர்கள் கொண்டாடிய போது ஜப்பானிய புத்த பிக்குகள் அங்கு வரிசையாக அமர்ந்து அமைதிக்காக கோசம் எழுப்பிய நிகழ்வைக் காணக்கூடியதாக இருந்தது.

அவர்கள் பட்டுத் தெளிந்தவர்கள் எனவேதான் அவர்கள் அமைதிக்காக கோசம் எழுப்பினார்கள். ஆனால் சிறிலங்காவிலுள்ள இந்த பிக்குகளோ பட்டும் தெளியாதவர்களாகவே உள்ளனர்.

எல்லாம் அடி உதை உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என்பது இவர்களைப் பார்த்துத்தான் யாராவது சொன்னார்களோ என்னவோ.

இதேவேளை இவர்கள் இறுதியாக கூறியிருப்பது அண்டை நாடுகளின் உதவியோடு தான் புலிகளின் விமானத்தளத்தை அழிக்க வேண்டுமென்று. இவ்வளவும் தான் இவர்களின் துணிவு.

## இதுவொரு இராணுவத்தனம்..!



சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான தாக்குதல் நடைபெறுவதற்கு பாதுகாப்பு குறைபாடே காரணம் என இராணுவ பேச்சாளர் தயாரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தின் திறமையைப் பற்றியும் இராணுவத்தின் சக்தியைப் பற்றியும் பெருமளவில் புகழாரம் சூட்டிக்கொள்பவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் தான் இந்த தயாரத்னாயக்க.

இந்த நிலையில் ஏன் இப்போது பாதுகாப்பில் ஏற்பட்ட பலவீனம்தான் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதான தாக்குதலுக்குக் காரணம் என தெரிவித்துள்ளார்.

ஒருவேளை இதுவும் ஒரு இராணுவத்தனமான அணுகுமுறையாகவே இருக்கும். ஏனெனில், என்னதான் இருந்தாலும் அமைச்சர் கதிர்காமர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அவர்கள் உள்ளுக்குள் இருந்து செய்தவர்களாக இருந்தாலும் சரிதான், வெளியில் இருந்து செய்தவர்களாக இருந்தாலும் சரிதான் அவர்களிடம் மிகப் பெரும் இராணுவக் கெட்டித்தனம் இருந்திருக்கிறது.

இதனை எந்த இராணுவ வல்லுனர்களாலும் மறுதலிக்க முடியாது. இதனால்தான் இராணுவ பேச்சாளர் தயாரத்னாயக்கா பாதுகாப்பில் ஏற்பட்ட பலவீனமே இந்த தாக்குதலுக்கு காரணம் என தெரிவித்திருக்கிறார் என பார்க்கவேண்டும்.

வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலத்திலிருந்து இந்த அரசுக்கும் இந்த இராணுவத்திற்கும் அமைச்சர் கதிர்காமர் வெளிவிவகாரத்தில் இராணுவரீதியாக எவ்வளவு பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்காகவும் பாதுகாப்பு உபகரண கொள்வனவுக்கான பண வசூலிப்புக்காகவும் பாடுபட்டிருப்பார்.

ஆனால், அமைச்சர் கதிர்காமருக்கு உள்ளகரீதியாக வழங்க வேண்டிய பாதுகாப்பில் ஓட்டை இருந்திருக்கிறது என கையை விரிப்பது எவ்வளவு வெட்கக்கேடான விடயம் .

பாவம் இராணுவப் பேச்சாளர் தயாரத்னாயக்காதான் என்ன செய்வார்.

இதெல்லாம் அவரவர் செய்யும் காரியங்களின் அடிப்படையில் தேடி வைக்கும் முடிவு. அமைச்சர் கதிர்காமர் போன்றோர் செய்த காரியங்கள் இந்த ஜெகத்தில் ஒரு தனி மனிதனைமட்டும் பாதித்திருந்தால் பறவாயில்லை. பெரும் மக்கள் சமூகத்தையேயல்லவா பாதித்திருக்கிறது.

இந்த மக்களின் கண்ணீரும் கூச்சலுமே கதிர்காமரை இலக்கு பார்த்திருக்கும்.

சரி இனி என்ன செய்வது இது எப்போதோ முடிந்து போன காரியம்.

எல்லாம் அதர்மம் மேலோங்கி தர்மம் அழியும்போது யுகந்தோறும் நான் அவதாரம் எடுப்பேன் என கீதா உபதேசத்தில் கிருஸ்ணபகவான் உபதேசித்தது போல கதிர்காமரின் அதர்மத்தை தாங்க முடியாது யாரோ தர்மத்தை காப்பாற்ற கதிர்காமர் மீது தாக்குதலை நடாத்த அன்று அவதாரம் எடுத்திருக்கிறார்கள் அவ்வளவுதான். எல்லாம் முடிவில் சுபம்.

## பண்டா பரம்பரைக்கு வாய் கசக்கும்



தற்போது வெற்றிடமாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித் தலைவர் பதவியை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை கட்சியின் ஐம்பத்து நான்காவது ஆண்டு நிறைவு நாள் மாநாட்டில் சமர்ப்பிக்க கட்சியின் மாவட்ட அதிகார சபைகள் தயாராகி வருவதாக அந்தக் கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் சூழலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவர் பதவி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

சனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு பல்வேறு நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு மத்தியில் தான் அவருக்கு சனாதிபதித் தேர்தலில் நிற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மகிந்தராஜபக்ஷவிற்கு சனாதிபதி வேட்பாளர் வெற்றிடத்தை விட்டுக் கொடுக்க முன்வந்த (அதாவது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தால் விட்டுக்கொடுக்க முன்வந்த) சனாதிபதி சந்திரிகா கட்சியின் பிரதித்தலைவர் பதவியைக் கொடுக்க முன்வருவாரா என்பது சந்தேகமே.

ஏனெனில், மகிந்த ராஜபக்ஷவின் கரம் அளவுக்கு அதிகமாக கட்சிக்குள் வலுப்பெறுமாக இருந்தால் அது பண்டாகுடும்பத்திற்கு பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

சில வேளைகளில் மகிந்தராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்று விட்டால் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் சாய்ந்து விடுவார்கள்.

அதாவது சம்பிரதாயபூர்வமான உறவு மூலம் சாதிப்பது! (அதாவது சுருட்டுவது) என்பதைவிட அதிகாரம் உள்ள மகிந்த ராஜபக்ஷவுடன் ஒட்டிக்கொண்டு போகவே பெருமளவானோர் முயல்வார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

எனவே, இந்தக் கட்சிக்குள் உள்ள அதிகாரப் பதவிகளை விட்டுக்கொடுப்பதானது பண்டா பரம்பரைக்கு ஒரு வேளை இதுவொரு 'முடிவின் ஆரம்பமாக' மாறினாலும் மாறிவிடக்கூடும். எனவே தான் மகிந்த இந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்கும் போராடித்தான் ஆக வேண்டும்.

என்ன செய்வது அநுராவின் நிலைமை மோசமாகத்தான் உள்ளது. இனி எப்படி இனிவரும் சனாதிபதித் தேர்தல் முடிவடைந்து அதற்குப் பிறகு வரும் ஆறு வருடங்கள் கழிந்து வரும் அடுத்த சனாதிபதித் தேர்தலில் அநுராவுக்கு வாய்ப்புக் கிடைப்பது என்பது பண்டாபரம்பரைக்கு வாய் சற்று அதிகமாகவேகசக்கும்.

வேழினி



# யாழில் இடதுசாரிகள்

**- அன்பரசு -**

கற்றோர் பல்லாயிரம் தோன்றிய யாழ் மண்ணில் மிகச் சிறிய எண்ணிக்கையில் இடதுசாரித் தலைவர்கள் தோன்றியுள்ளனர். இடதுசாரிச் சிந்தனை தோன்றியிருக்கலாம், அதைச் செயற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. கைவிரலில் எண்ணக்கூடிய இடதுசாரித் தலைவர்கள் யாழ் மண்ணில் பிறப்பெடுத்தாலும் அவர்கள் பார்வை கொழும்பை நோக்கியதாகவே இருந்தது.

இந்த மண்ணில் வாழ்ந்து மண்ணின் நலனுக்காக உழைக்கும் திறனோ மனப்பான்மையோ அவர்களிடம் இருக்கவில்லை. கேரளத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள் யாழ்ப்பாணத்திற்கு நிகரான கல்வி வளர்ச்சிஅங்கு நெடுங்காலமாக இடம்பெறுகிறது.

மிக வலிமையான இடதுசாரிப் பாரம்பரியம் கேரளத்தில் உண்டு. இந்திய மாநிலங்களில் முதன்முறையாக ஒரு கம்யூனிச மாநில அரசை உருவாக்கிய வரலாறு கேரளத்திற்கு உண்டு. மிகக்கொடூரமான சாதிக் கொடுமை மிக அண்மைக்காலம் வரை அங்கு இருந்தது. ஈழவர் எனப்படும் இனத்தவர் சொல்லொணாத் துயரங்களையும் சாதிப் பாகுபாடுகளையும் அனுபவித்தனர்.

சிறி நாராயண குரு (1855-1928) எனப்படும் கேரளத்தின் மிகப் பெரிய சமூக சீதிருத்தவாதி தோன்றியிரலேல் ஈழவர் சமூகம் இன்றும் எளிமை நிலையில் இருந்திருக்கும். இவர் தனது வாழ் நாள் முழுவதும் தீண்டாமையை ஒழிப்பதிலும் பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாட்டிற்காகவும் உழைத்தார். துறவியான இவர் ஈழவர் சமூகத்தில் தோன்றியவர்.

ஆனால் தாழ்த்தப்பட்டோர் யாவரின் நலனில் அக்கறை காட்டியவர். இவர் மத வேறுபாடுகளைக்காட்டாது பணியாற்றினார். "ஒன்றிணையுங்கள், பலம் பெறுங்கள், படியுங்கள், விடுதலை பெறுங்கள்" என்று சுவாமிகள் அடிக்கடி சொல்வார்கள். 1903 இல் அவர் நாராயண தர்ம சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். இன்று தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லப்படுவோர் ஒரு அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக உருவாகியுள்ளனர். சுவாமிகள் ஒரு புதிய மதத்தையோ, மதப்பிரிவையோ உருவாக்கவில்லை. சீர்திருத்தம் ஒன்றுதான் அவருடைய குறி.

***யாழ்ப்பாணத்தில் கூட்டம் போடும்போது பெருந்திரளாக வந்து கரகோசம் செய்கிறீர்கள், தேர்தல் வரும்போது எங்கள் கட்சி வேட்பாளர் களுக்கு ஓட்டுப்போடுகிறீர்களா? இல்லை எங்களை ஒதுக்கிவிடுகிறீர்கள் தமிழர்களுக்காக நாம் ஏன் சிங்கள மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டும். நாங்கள் தனிச்சிங்களத்தை ஆதரிக்கத் தீர்மானித்துவிட்டோம். இவ்வாறு என்.எம். பெரேரா சில தமிழ் நண்பர்களுக்கு கொழும்பில் வைத்து சொன்னதாக நம்பகமான தகவல் உண்டு.*** ★★★

இவரைப் போல் ஒருவர் ஏன் யாழில் தோன்றவில்லை என்று கேட்பது நியாயமே. சிலர் ஆறுமுக நாவலரை சுட்டிக் காட்டுகிறார்கள். ஆறுமுக நாவலர் (1822-1879) தமிழறிஞர், புராண ஆகமங்களைப் பதிப்பித்தவர், சைவம் அழியாமல் பாதுகாத்தவர், தமிழ்க்கல்விச் சாலைகளை நிறுவியவர் என்பது வரலாறு. அவர் மேற்தட்டு மனிதர்களோடு உறவாடியவர், அத்தோடு அரசியலிலும் கால்பதித்தவர். முத்துக்குமாரசுவாமி, பொன் இராமநாதன் போன்றவர்களின் அரசியல் வாழ்விற்கு உரமூட்டியவர். தாழ்த்தப்பட்டோர் பற்றிய அக்கறை அவரிடம் இருக்கவில்லை. சமகால சமூக அமைப்பின் அங்கமாக அவர் அதை நினைத்திருக்கலாம். நாவலர் ஒரு தேசியவாதியா மதவாதியா என்ற வாதப்பிரதிவாதம் இன்றும் முடிவுக்கு வரவில்லை.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி யாழ்ப்பாண சமூக அமைப்புப்பற்றி 'யார் இந்த யாழ்ப்பாணத்தான்' என்ற தலைப்பிட்ட தனது கட்டுரையில் ஆய்வு செய்கிறார். விவசாயப் பொருளாதாரம் காரணமாகவே யாழ்ப்பாணத்து சாதிமுறைகள் தோன்றின என்பது அவருடைய வாதம். உச்சியில் நில உடமையாளர்களும், அடியில் விவசாயத் தொழிலாளர்களும் சாதி அடிப்படையில் வர்க்கமயப்படுத்தப் பட்டுள்ளனர். விவசாயம் தவிர்ந்த பிற தொழில்கள் புவியியல் காரணிகளுக்காக யாழ் மண்ணில் உருவாவது கடினமாக இருந்தது. மீன்பிடி விவசாயத்தோடு தொடர்பில்லாத தொழிற்றுறையாக இருந்து வருகிறது. சாதியத்தின் உடைவுக்கு கல்வி முக்கிய காரணம் என்ற பேராசிரியரின் முடிவு மிகச்சரியானது.

இலங்கையின் கல்வி வரலாறு மிகவும் நீண்டது. ஆரம்பத்தில் குருகுலக் கல்விமுறை சாதி அடிப்படையில் இடம்பெற்றது. தனது பொறுக்கியெடுத்த சீடர்களுக்கு குரு தனது அறிவையும் அனுபூதியையும், சமூக பண்பாட்டுச் செய்திகளையும் தனது வசதிக்கேற்பச் சொல்லிக் கொடுத்தார். குருவின் இல்லத்தைச் சுற்றி அன்றைய கல்வி மையங்கள் அமைந்தன. போத்துக்கேயர் ஆட்சியில் கல்வி நிலையங்கள் முதன் முறையாகத் திறக்கப்பட்டன. போத்துக்கேயருக்குப்பின் ஆட்சி செலுத்திய ஒல்லாந்தர்களும் இதே கல்வி முறையைத் தொடர்ந்ததோடு புதிய நிலையங்களையும் திறந்தனர். ஆனால் இங்கும் சாதி அடிப்படையில் கல்வி வழங்கும் முறை தொடரப் பட்டது.

பிரிட்டிசாரின் வருகைக்குப் பின் நிலைமை சீராகியது என்று சொல்லமுடியவில்லை. அமெரிக்க மிசனரி அமைப்புக்கள் யாழ் தீபகற்பத்தில் கல்விப் பணியில் ஈடுபட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அனுமதித்தார்கள். அவர்கள் சாதியைப் பெரிதுபடுத்தவில்லை என்பது உண்மையாக இருப்பினும் சாதி அடிப்படையிலான சம்பவங்கள் இக் கல்வி நிலையங்களில் நடந்தன. 1910 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தாழ்த்தப் பட்டோன் எனக் குறிப்பிடப்பட்ட ஒரு மாணவன் இப்பள்ளியில் சேர்க்கப் பட்டான். அமெரிக்க வெள்ளையரான அதிபர் இத்துணிச்சலான கருமத்தைச் செய்தார். ஆனால் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பள்ளிப் படிப்பை பகிஷ்கரித்தனர். இதற்கு அடிபணிய பள்ளி நிர்வாகம் மறுத்தது. வெளியேறிய மாணவர்களும் முரண்பாடுகளுக்குக் காரணமான புதிய மாணவனும் பின்பு படிப்பைத் தொடரக் கூடியதாக இருந்தது.

1917இல் ருஷ்யாவில் பொதுவுடமைப் புரட்சி ஏற்பட்டபோது அதன் தாக்கம் உலகெலாம் உணரப் பட்டது. பொதுவுடமை உலகிற்கோர் புதுமை என்று பாரதியார் பாடினார். நாள் ஒரு கம்யூனிஸ்ற், புரட்சி எனது தொழில் என்று மேடை தோறும் முழங்கும் நாகரிகம் அப்போது யாழ்ப்பாணத்தில் தோன்றவில்லை. யாழ்ப்பாணத்தில் கம்யூனிச அலை வரக் காலதாமதமாகியது. அதன்பின் ருஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் மழை பெய்தால் யாழ்ப்பாணத்தில் தோழர்கள் தமது தலைக்குமேல் விரித்த குடை பிடிப்பார்கள்.

பொதுவுடமை என்று வெளிப்படையாகக் கூறாமல் சில மாற்றங்கள் யாழில் நடைபெற்றன. 1920 இல் படித்த சமூகப் பிரக்ஞையுள்ள வாலிபர்கள் யாழ் வாலிபர் சங்கத்தை உருவாக்கினார்கள். தீண்டாமைக்கு எதிரான காத்திரமான நடவடிக்கைகளை இந்த அமைப்பு தீவிரமாக முன்னெடுத்தது.

யாழ் வாலிபர் சங்கத்தைத் தொடர்ந்து 1927 இல் யாழ்ப்பாணத் தமிழ் ஊழியர் சங்கம் நிறுவப்பட்டது. பாடசாலைகள் யாவற்றிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் 'சம ஆசனம், சம போசனம்' என்ற செயற்றிட்டத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று தமிழ் ஊழியர் சங்கம் வலியுறுத்தியது. இத்திட்டத்தை பொ.இராமநாதன் தீவிரமாக எதிர்த்தார். இதற்கு அவர் யாழ் தீபகற்பத்திற்குச் சொந்தமான தேசவழமைச் சட்டத்தை ஆதாரம் காட்டினார். அதாவது தேசவழமை அடிப்படையில் சாதிக் கட்டுப்பாட்டை ஒழிக்கக்கூடாது என்பது எந்த மனிதரின் நிலைப்பாடு. சாதிக் கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பதற்காக இராமநாதன் இருமுறை இலங்கை ஆளுநரைக் கொழும்பில் சந்தித்தார். யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் பதவியிலிருந்த 79 உயர்குடிப் பிறந்த கிராம சபைத் தலைவர்களையும் இச்சந்திப்பின் போது கூட்டிச்சென்றார். தமிழ் ஊழியர் சங்கத்தினரும் ஆளுநரைச் சந்தித்துத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். ஆளுநர் இவர்கள் பக்கம் தீர்ப்பு வழங்கினார். இராமநாதன் தோல்வி கண்டார். அவருடைய வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாக இதைக் கொள்ளலாம்.

இலங்கையின் மிகப் பழமைவாய்ந்த அரசியல் கட்சி என்று 1935 இல் உருவாக்கப்பட்ட லங்கா சமசமாஜ கட்சி (எல்.எஸ்.எஸ்.பி) சிறப்பிக்கப்படுகிறது. கட்சியின் முதலாவது தலைவராகக் கொல்வின் ஆர்.டி.சில்வா தெரிவு செய்யப்பட்டார். சில காலத்தில் தலைவர்ப் பதவியை இக்கட்சி இல்லாமற் செய்தது. ஆகையால் இவர்தான் முதலும் இறுதியுமான கட்சித்தலைவர். பிரிட்டிஷ் ஆட்சிக்கும் அவர்கள் நடத்திய இரண்டாம் உலகப் போருக்கும் எதிர்ப்புத் தெரிவித்த கொல்வினும் இன்னும் மூன்று கட்சிப் பிரமுகர்களும் பிரிட்டிசாரால் கைது செய்யப்பட்டு 1940 இல் அடைக்கப்பட்டனர். ஏப்ரல் 1942 இல் யாவரும் சிறையிலிருந்து தப்பியோடி இந்தியாவில் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். 1945 இல் யாவரும் நாடுதிரும்பினர். ஒருவிதமான புரட்சிகர மாயை இவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் சில தசாப் தங்களில், அதாவது 1964 இல் அவர்கள் தம்மைத் தாமே அழித்துக்கொண்டனர்.

இலங்கை கம்யூனிச கட்சி 1943 இல் உருவாக்கப்பட்டது. ஒல்லாந்துப் பறங்கியர் (DUTCH BURGHER) பீற்றர் கெனமன், சிங்களவரான மருத்துவ கலாநிதி டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, தொழிற்சங்கவாதி மென்டிஸ் ஆகியவர்கள் கட்சியைத் தொடக்கி வைத்தார்கள். நீதியரசர் கெனமனின் சற்புத்திரான பீற்றர் கெனமன் உயர்குடிப்பிறந்தவர். இங்கிலாந்தின் புகழ்பூத்த கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்றவர். அப்போது கேம்பிறிச்சில் கம்யூனிச அலை வீசிய காலம். யாழ்ப்பாணத்திலிருந்து கேம்பிறிச் பல்கலைக்கழகம் சென்றவர்கள் பெயரளவில் கம்யூனிஸ்ருகளாக நாடு திரும்பினர். கெனமன் மேடை தோறும் அழகான ஆங்கிலத்தில் பேசுவார், அது தமிழிலோ சிங்களத்திலோ மொழிபெயர்க்கப்படும். 1964 இல் சிறிமாவோ ஆட்சியில் பங்கேற்றபின் கெனமன் சிங்களத்தில் பேச ஆரம்பித்தார். சிறிமாவோ 1977 இல் ஆட்சியை இரண்டாம் முறையாகப் பிடித்தபோது கெனமன் வீட்டுத் திணைக்களம் உட்பட அமைச்சுப் பதவிபெற்றார். யாழ். வனவள திணைக்களத்திற்கு பின்னால் இருக்கும் பழைய பூங்கா மாடிக்கட்டடம் கெனமன் காலத்தில் கட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடதுசாரி இயக்கங்கள் தோல்வி கண்டதற்கு முக்கிய காரணம் இடதுசாரித் தலைவர்களின் இயலாமையேயாகும். அவர்கள் யாபேரும் மேட்டுக்குடியில் பிறந்தவர்கள். யாழ். நகர வாசியான எம்.ரி.சுப்பிரமணியம் ஒரு அபூர்வ விதிவிலக்கு. தங்கள் வசதியான வாழ்க்கையை விட்டுக்கொடுக்க அவர்களால் முடியவில்லை. நல்ல சீதனம் பெற்றுத் திருமணம் செய்து குடும்பம் நடத்தினார்கள். அவர்களுக்கு அரசியல் ஒரு பொழுது போக்கு, உயர் குடிப்பிறந்த செல்வந்தர்களால் மாத்திரம் கம்யூனிசம் பேசமுடியும் என்ற கேலிப்பேச்சு யாழ் தீவகற்பத்தில் நிலவியதற்கு நிறைய ஆதாரம் உண்டு. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் இடதுசாரித் தலைவர்கள் யாழ். முற்றவெளியில் கூட்டம் போடுவார்கள். அது தொலைக்கட்சி இல்லாத காலம், திரைப்பட அரங்குகள் இருந்தன. கோயில் திருவிழாக்களும் இருந்தன. கொழும்புப் பேச்சாளர்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. என்.எம்.பெரேரா கொஞ்சு தமிழில் மேடைப்பேச்சு நடத்தியபோது, கரகோசம் வானைப் பிளந்தது. ஒரு தாள வாத்திய இசைக்கச்சேரிபோல கொல்வின் தனது தடித்த குரலை மாற்றி மாற்றி ஆங்கிலத்தில் பேசுவார். கெனமன் பேசும்போது தீப்பொறி பறக்கும். கூட்டம் முடிந்ததும் மக்கள் தத்தம் வீட்டுக்குப் போய்விடுவார்கள். அவர்கள் வாழ்வில் யாதொரு பாதிப்பும் ஏற்படாது.

நாங்கள் யாழ்ப்பாணத்தில் கூட்டம்போடும்போது பெருந்திரளாக வந்து கரகோசம் செய்கிறீர்கள், தேர்தல் வரும்போது எங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஓட்டுப்போடுகிறீகளா? இல்லை எங்களை ஒதுக்கி விடுகிறீர்கள் தமிழர்களுக்காக நாம் ஏன் சிங்கள மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கவேண்டும். நாங்கள் தனிச்சிங்களத்தை ஆதரிக்கத் தீர்மானித்துவிட்டோம். இவ்வாறு என்.எம்.பெரேரா சில தமிழ் நண்பர்களுக்கு கொழும்பில்வைத்துச் சொன்னதாக நம்பகமான தகவல் உண்டு.

பொன்.கந்தையா எனப்படும் பொன்னம்பலம் கந்தையா மாத்திரம் யாழ்.மக்கள் நாடாளுமன்றம் அனுப்பிய ஒரே பொதுவுடமை உறுப்பினர். பருத்தித்துறைத் தொகுதிக்கு 1956 இல் தெரிவுசெய்யப்பட்டு 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். மடிப்பிச்சை கேட்பது போல் பலமுறை வீடுவீடாகத் திரிந்து முயற்சி செய்து இவர் இப்பதவியைப்பெற்றார்.

மக்களுக்கு இவரால் யாதொரு நன்மையும் கிட்டவில்லை. இங்கிலாந்தில் படித்து பட்டம் பெற்றவர். வடமொழி இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்றவர், பொருளாதார நிபுணர், நூலகத்துறையில் சாதனைபடைத்தவர் என்றும் பல் திறன் மிக்கவர் என்றும் பொன்.கந்தையா புகழப்படுகிறார். ஆனால் யாழ். மக்களுக்கு என்ன பயன்? அவர்கொழும்பில் தங்கிவிட்டார். அவருடைய உடல் நலம் கெட்டுவிட்டது. நாலு வருடம் எம்.பியாக இருந்தவர் 46வயதில் (1960) மறைந்துவிட்டார். அவரோடு யாழ். இடதுசாரி பாரம்பரியமும் மடிந்துவிட்டது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 19. 08 . 2005
மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com

# ஆபத்தை நோக்கி..!

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருக்கும் புலிகள் இயக்கத்தின் அரசியல் பணிமனைகள் மீதும், அங்கு அரசியற் பணியில் ஈடுபடும் போராளிகள் மீதும் படையினரும், பொலிசாரும், படையினரின் ஒட்டுக் குழுக் களும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான சிறிலங்காவின் முப்படைகளினதும் இத்தாக்குதல்களில் புலிகள் இயக்கத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் உட்பட பல போராளிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

புலிகள் இயக்கத்தோடு இரண்டாயிரத்தி இரண் டாம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிர காரம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியற் பணிபுரியச் செல்லும் போராளிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசிற்கு உண்டு.

இதற்கமையவே வடக்கு-கிழக்கு பிரதேசத்தி லியங்கும் துணைக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமெனவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆனால் இவையாவற்றிக்கும் முரணாக படைத் தரப்பு ஒட்டுக் குழுக்களுக்குத் தேவையான பக்கப் பலத்தை வழங்கியதோடு, அவர்களோடு இணைந்து போராளிகள் மீது தாக்குதல்களையும் தொடுத்து வருகின்றன.

அரசகட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியற் பணியில் ஈடுபடும் போராளிகளின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலேயே ஆரம்பம் தொட்டு அரச படைகள் செயற்பட்டு வருகின்றன.

ஆனால், அரச படையினரின் 'எல்லா இடையூறு களுக்கு மத்தியிலும் அரசியற் பணியினை மேற் கொண்டுவந்த போராளிகள் மீது இப்போது படையினர் காரணங்கள் எதுவுமின்றி கைதுசெய்யும் நடவடிக்கை களை அதிகரித்துள்ளனர்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் அரசியற் பணிமனைக்குள் சென்ற படையினர் ஒரு போராளி உட்பட சில ஆதரவாளர்களையும் கைது செய்திருந்தனர்.

இதன் பின்னர், கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதற்கு வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் உட்பட போராளிகள் கிளிநொச்சிக்கு வருவதற்கு படையினர் அனுமதி மறுத்திருந்தனர்.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் விடுமுறை யில் சென்றிருந்த, போரில் ஒரு கையை இழந்திருந்த போராளி கோபியை அரசபடையினரும், பொலிசாரும் கடத்திச் சென்றுள்ளனர்.

காரணங்கள் எதுவுமின்றி போராளிகளை படையினர் இவ்வாறு கைதுசெய்வதானது அப்பட்டமான போர் நிறுத்த மீறல்களாகும்.

ஆனால், படைத்தரப்போ இவை எதனையும் மதிக் காது போராளிகளின் மீதான தமது நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் முனைப்புக்காட்டி வருகின்றது.

படையினரின் இத்தகைய நடவடிக்கையானது ஒட்டுமொத்த அமைதி முயற்சியை சீர்குலைத்துவிடக் கூடிய செயற்பாடாகவே உள்ளது.

இந்த நிலையில் ஏற்கெனவே கிழக்கில் போராளி களின் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தலான சம்பவங் களின் பின்னணியில் அங்கு போராளிகள் அரச கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு புதிய ஒழுங்கு முறைகளை புலிகள் இயக்கம் பின்பற்றி வருகிறன்றனர்.

இந்த நிலையில் அரசியற் பணியில் ஈடுபட்டுள்ள போராளிகளின் மீதான படையினரின் இலக்கு வைத்த நடவடிக்கைகளானது புலிகள் இயக்த்தை ஆழமாக சிந்திக்க வைக்கும் என்றே நம்பலாம்.

இத்தகைய நிலையில் போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாகச் சிந்திக்கும் புலிகள் இயக்கம் எடுக்கும் நடவடிக்கைகளின் விளைவு கடுமையானதாக இருக்கக் கூடும் என்பதோடு அதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டிவரும்.

# சமாதானத்தின் நிலை..?



சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையடுத்து நாட்டில் அவசரகாலச் சட்டத்தை சனாதிபதி சந்திரிகா பிறப்பித் துள்ளார்.

இந்த அவசரகாலச் சட்டத்தைக் காரணம் காட்டி படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்டுவரும் சோதனை, கைது, சுற்றிவளைப்பு என்பன மக்களை பெரிதும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மீதான தாக்குதலைக் காரணம் காட்டி நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு, அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளிலிருந்து பொது மக்கள் வெளியேறும் சோதனைச்சா வடிகளில் படையினர் கெடுபிடிகளை மேற்கொள்வதுடன் திடீர், திடீரென காரணங்கள் எதுவுமின்றி பாதையை பலமணி நேரம் மூடி பொது மக்களின் பயணத் திற்கும் பெரும் இடையூறு களை ஏற்படுத்துகின்றனர்.

திடீரென பிறப்பிக்கப்பட்ட இந்த அவசரகாலச் சட்டத்தின் மூல மாக பொதுமக்களினதும் திணைக் களங்கள், அரசசார்பற்ற நிறுவனங் கள் என்பனவற்றினது நாளாந்தச் செயற்பாடுகளையும் முடக்குவதில் படைத்தரப்பு குறியாக உள்ளது.

**_ஒப்புக்கு நாட்டில் அமைதி நிலவுகிறதே யொழிய மக்கள் இப்போதும் யுத்தக்கெடுபிடி களை அனுபவிப்பவர்களாகவே உள்ளனர்._**

**_யார், போர் நெருக்கடியின்றி, போரின் அவலமின்றி, நிம்மதியான வாழ்வை அனுபவிக்க வேண்டும் என இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதோ அதே பொதுமக்கள் மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறார்கள்._**

படையினரின் இத்தகைய நடவடிக்கைகளானது ஏற்கனவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அரச உதவிகள் பெருமளவில் வருவதை முடக்கியிருக்கும் நிலையில், இத்தகைய நடவடிக்கைகள் நிச்சயம் பொது மக்களிற்கு துன்பத்தை ஏற்படுத்தும்

அத்தோடு படையினர் அவசரகாலச் சட்டத்தை கையில் வைத்திருப்பதுடன் கைது செய்பவர்களை ஏன் கைது செய்கிறோம் என்று தெரியாமல் காரணங்கள் இன்றி கைது செய்கின்றனர்.

திடீரென எவரையும் கைது செய்துவிட்டு பின்னரே அதற்கான காரணத்தை சோடிப்பதிலும் படையினர் ஈடுபடுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இது தமிழ் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளை முடக்குகின்ற நடவடிக்கை யாகவும் உள்ளது.

ஏற்கனவே யுத்த காலத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கெடுபிடிகளுக்கு சற்றும் குறை வில்லாததாகவே இந்த நடவடிக்கைகள் உள்ளன.

அரசினதும் படையினரதும் இந்தச் செயற்பாடானது நிலவும் அமைதியை சீர்குலைப்பதோடு சமாதானம் தொடர்பான பெரும் ஐயப்பாடுகளையும் தோற்று விக்கிறது.

ஒப்புக்கு நாட்டில் அமைதி நிலவுகிறதே யொழிய மக்கள் இப்போதும் யுத்தக்கெடுபிடிகளை அனுபவிப்பவர்களாகவே உள்ளனர்.

யார், போர் நெருக்கடியின்றி, போரின் அவல மின்றி, நிம்மதியான வாழ்வை அனுபவிக்கவேண்டும் என இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டதோ அதே பொதுமக்கள் மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறார்கள்.

இந்த நிலையில் பொது மக்கள் மத்தியில் சமாதானம் மீதான நம்பிக்கை சீர்குலைந்து போவதானது சமாதான முயற்சிகளை முன்னோக்கி தள்ளுவது என்பது சிக்கல் நிறைந்த தாகவே மாறும்.

நாட்டில் சமாதானமும் அமைதியும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால் முதலில் பொது மக்கள் நிம்மதியாக மூச்சுவிட வேண்டும்.

அப்பொழுது சமாதானம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தக் காரியமும் வெற்றியளிக்கும்.

ஆனால் இதற்கு மாறான காரியங்களை மேற்கொண்டு விட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிப்பதில் அரசு உறுதியாகவுள்ளது என அறிக்கை விடுவதிலும் இராஜதந்திரிகளிடம் உறுதியளிப்பதும் எந்த உருப்படியான விளைவுகளையும் ஏற்படுத்திவிடாது.


எனவே பொதுமக்கள் மீதான கெடுபிடிகளை அரசும் அரசபடையினரும் தொடர்ந்து கடைப்பிடிப்பார் களானால் பொது மக்களின் கோபம் அரசுக்கும் அரச படையினருக்கும் எதிராகத் திரும்புவதை எவராலும் டுக்கமுடியாது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் படையினரின் பொதுமக்களிற்கு எதிரான செயற்பாடுகளினால் யாழ்ப்பாணத்தை பல முறை பொதுமக்கள் ஸ்தம்பித நிலைக்குக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் படையினரின் கெடுபிடிகள் தொடருமாக இருந்தால் மக்களின் கோபங்கள் படையினருக்கு எதிராக வெடிக்கக் கூடிய வாய்ப்புகளே அதிகரித்துக் காணப்படுகின்றன.

இத்தகையதொரு நிலை பெரும் எடுப்பில் நிகழும் பட்சத்தில் சமாதானத்தின் நிலை நிரந்தரமாகவே கேள்விக்குறியாக மாறிவிடும்.

சிறி. இந்திரகுமார்



# பேரினவாதிகளின் விருப்பம்..!

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சராக ஆனந்தசங்கரியை நியமிப்பதற்கு சனாதிபதி சந்திரிகா சிபாரிசு செய்திருப்பதுடன் ஜாதிக ஹெல உறுமயவும் அவரே அதற்குப் பொருத்தமானவர் எனக் கூறியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஜே.வி.பி இது தொடர்பாக கருத்து எதுவும் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அதற்கும் இவ்விடயத்தில் ஆட்சேபம் எதுவும் இருக்கும் என எண்ணுவதற்கில்லை.





ஏனெனில் ஜே.வி.பி க்கும் ஆனந்தசங்கரிக்கும் இடையில் மிகுந்த புரிந்துணர்வு இருப்பது வெளிப்படையான ஒன்றே.

எவ்வாறாயினும் ஆனந்தசங்கரி வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படுகிறாரோ இல்லையோ இவ்வாறான ஒரு சிபாரிசு அவர்கள் மத்தியிலிருந்து செய்யப்பட்டுள்ளதானது பேரினவாதிகளின் சிந்தனை எவ்வாறானது என்பதை புலப்படுத்துவதாக உள்ளது.

கடந்த 10 வருடங்களாக வெளிவிவகார அமைச்சராக தமிழர் என்ற அடையாளத்துடன் மட்டும் கதிர்காமர் புரிந்துவந்தவற்றின் தொடர்ச்சியை அவ்வாறான இன்னொருவரைக்கொண்டு செய்யமுடியுமா? என்றே சிங்கள இனவாதம் சிந்திக்கின்றது.

கடந்த 25 வருட காலத்திற்கும் மேலாக தமிழ் மக்கள் அரச பயங்கரவாதத்தால் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இடைவிடாத கொடிய யுத்தம் அவர்களைச் சூழ்ந்துள்ளது. தமிழ் மக்களின் போராட்டம் ஏன் ஆரம்பமாகியது? ஏன் இவ்வளவுதூரத்திற்கு எத்தனையோ துன்பங்களின் மத்தியிலும் நடைபெற்றுவருகிறது? ஏன் அவர்கள் தொடர்ந்து போராடுகின்றனர்? என்பது மனச்சாட்சியுள்ள எவருமே புரிந்துகொள்ளத் தக்கதாகும்.

இந்தப்போராட்டம் இவ்வாறு நீடிப்பதற்கு அது மக்கள் போராட்டமாகப் பரிணாமம் பெற்றிருப்பதே காரணம் என்பதும் வெளிப்படையான விடயமாகும். அதாவது தமிழ்மக்கள் தமது உரிமைகள் மறுக்கப்பட்டு தமது உயிருக்குக்கூடப் பாதுகாப்பில்லை என்று உணர்ந்தபின்னர்தான் ஆயுதம் ஏந்திப்போராடத் தொடங்கினர் என்பது வரலாறாகும்.

தமிழ் மக்களின் இந்தப் போராட்டத்தை ஒடுக்க அவர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதமானது, அவர்களை மேலும் மேலும் போராடத் தூண்டியதுடன், தமது போராட்டத்தின் வெற்றியே தமது எதிர்காலத்துக்கு ஒரே வழி என்ற உணர்வும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டது.

இதனால் இப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற விடுதலைப் புலிகளை முற்றாக ஆதரித்ததுடன் அவர்களுடன் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்துச்சென்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் மீது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியாளரால் நடத்தப்பட்ட யுத்தம் சிறிலங்காவில் ஏற்படுத்திய நெருக்கடிகள், யுத்தத்தின் மீது சிங்கள மக்களை நம்பிக்கையிழக்கசெய்த வேளையிலேயே சமாதான தேவதையாகத் தன்னை உருவகப் படுத்திக்கொண்டு சந்திரிகா குமாரதுங்க மக்கள் முன் தோன்றினார்.

ஆனால் ஆட்சிபீடமேறியபின் அவர் நடத்திய யுத்தமானது தமிழ் மக்கள் வரலாற்றில் என்றுமே சந்தித்திராத நெருக்கடிக்குள் அவர்களைத் தள்ளியது.

இந்த யுத்தமானது "சமாதானத்துக்கான யுத்தம்" என்றும் "மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிப்பதானது" என்றும் அவர் மேற்கொண்ட பிரசாரத்தை சர்வதேசத்தில் நிலைநிறுத்துவதற்கு அவருக்கு பக்கபலமாக நின்றவர் லக்ஷ்மன் கதிர்காமர்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யுத்தத்தைத் தீவிரமாக நடத்திய காலப்பகுதியில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காம ரின் ஒரே பணியாக இருந்தது இது மட்டுமே.

ஆனால் இந்தப் பிரசாரமானது காலப்போக்கில் எடுபடாமல் சென்றவேளை தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரித்து அதனை சர்வதேச நாடுகளில் நிறுவுவதற்கு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எடுத்த பாரிய முயற்சியானது சிங்கள இனவாதிகள் மத்தியில் அவரை தேசப்பற்றாளராக்கியது.

பின்னர் சனாதிபதி சந்திரிகா நடத்திய யுத்தம் தோல்வியுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் மேற்குநாடுகளின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான சக்திகளைத் திரட்ட கதிர்காமர் செயற்பட்டார்.

மேற்குலக நாடுகளில் கதிர்காமர் மேற்கொண்ட பிரசாரம் விடுதலைப்புலிகளால் தோற்கடிக்கப்பட்ட நிலையில் அண்டை நாடான இந்தியாவை தமிழ் மக்களின் போராட்டத்திற்கு

***இந்த யுத்தமானது "சமாதானத்துக்கான யுத்தம்" என்றும் "மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்து விடுவிப்பதானது" என்றும் மேற்கொண்ட பிரசாரத்தை சர்வதேசத்தில் நிலைநிறுத்துவதற்கு அவருக்கு பக்கபலமாக நின்றவர் லக்ஷ்மன் கதிர்காமர்.***

எதிராக இழுத்துவிடுவதில் லக்ஷ்மன் கதிர்காமர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். எவ்வாறாயினும் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை உருவாக்கிக்கொள்வதில் அவர் தீவிரமுயற்சி எடுத்துவந்தபோதும் வை.கோ போன்ற தமிழ் உணர்வாளர்களால் இது முறியடிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த முயற்சிகளைத் தொடர்வதற்கு ஏற்ற வகையிலேயே ஆனந்த சங்கரியை வெளிவிவகார அமைச்சராக்கும் திட்டத்தைப் பேரினவாதம் கொண்டுள்ளது. இந்தத் திட்டமானது தமிழ் மக்களின் உரிமையை வழங்குவதற்கு தமிழ் மக்களுடன் இணக்கப்போக்குடன் வாழ்வதற்கு பேரினவாதம் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது. அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அது தமிழரை ஒடுக்கிவிடுவதையே வைத்திருக்கின்றது என்பதையே காட்டுகிறது. சுருக்கமாகக் கூறினால் மகாவம்சச் சிந்தனையிலிருந்து இன்னமும் அது மாறிவிடவில்லை என்பதையே இது வெளிக்காட்டுகிறது.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# "பழைய மொந்தையில் புதிய கள்"

வாய்மூடியிருந்த பூனையும் இப்போது வாய்திறந்துவிட்டது.

சனாதிபதி வேட்பாளருக்கான இடத்தை பிடிக்கும்வரை கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக இருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ச இப்போது தன்னுடைய சுயரூபத்தை வெளிப்படுத்திவிட்டார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ச வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதி நிகழ்வு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடந்தபோது அங்கு வருகைதந்திருந்த வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் சனநாயகத்தை அழித்தொளித்து நாட்டைக் கூறு போட முனையும் புலிகளின் திட்டத்தை தடுத்து நிறுத்த அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுத்ததோடு நாட்டைக் காப்பாற்ற வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. இந்த முயற்சிக்கு சர்வதேச சமூகமும் ஒத்துழைக்க வேண்டும் என கோரிக்கையும் விடுத்திருந்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்சவின் இந்தப் பேச்சானது இனவாதத்தில் தோய்ந்துள்ள ஜே.வி.பியினரின் அரசியல் பிரசாரத்தை ஒத்த ஒரு பேச்சாகவே அன்று காணக்கூடியதாக இருந்தது.

ஒட்டுமொத்தத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ச அடுத்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர் என்ற வகையில் அவர் சிங்கள மக்களுக்கு தனது உண்மையான சுயரூபத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு களமாக அதனை பயன்படுத்திக் கொண்டார் என்பதே உண்மை.

சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் வருகின்ற எந்தத் தலைவரும் சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மையை பாதுகாககின்ற அல்லது அதனைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்ற தலைவர்களாகவே இருந்துவருகின்றனர்.

***சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் வருகின்ற எந்த தலைவரும் சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மையை பாதுகாக்கின்ற அல்லது அதனைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்ற தலைவர்களாகவே இருந்து வருகின்றனர்.***



அத்தகையதொரு பாரம்பரியத்திலிருந்து சற்றும் விலகாத ஒரு தலைவராகவே பிரதமர் மகிந்தராஜபக்சவும் தன்னை வெளிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் சிறிலங்காவின் பிரதான கட்சிகளில் ஒன்றான சுதந்திரக் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கையும் இனவாதத்தையும் பேரினவாதத்தையும் நம்பியே முன்கொண்டு செல்லப் போகிறார்கள் என்பதையே மணியோசை வரும் முன்னே யானைவரும் பின்னே என்பது போல வரப்போகும் இனவாத அரசியலையே காட்டி நிற்கின்றார்.

நாட்டின் பொறுப்பு வாய்ந்த பிரதமர் என்ற வகையில் அவருக்கு இருக்கக்கூடிய பொறுப்பையும் மறந்து ஆதாரம் எதுவும் அற்ற நிலையில் புலிகள் மீது குற்றம் சாட்டுவதற்கு முன்னின்றார்.

இது பயங்கரவாதத்தின் பெயரால் இலங்கையில் நிலவும் அமைதி முயற்சியையும், தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் புறந்தள்ளிவிட எடுக்கும் ஒரு முயற்சியாகவுமே காணப்படுகின்றது.

பயங்கரவாதத்தைப் பற்றி பிரஸ்தாபித்த பிரதமர் மகிந்த ராஜபக்ச நாட்டின் அமைதியைப் பற்றியோ முன்னெடுத்துச் செல்லவேண்டிய சமாதான முயற்சி பற்றியோ வாய் திறக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

தமது இனவாத போக்கிற்கு பக்கபலமாக சர்வதேச நாடுகளை அழைக்கும் மகிந்தராஜபக்ச சனநாயகத்தின் பெயரால் சனநாயகத்தைப் பற்றி பேசுவது பெரும் வேடிக்கையாக உள்ளது. ஏனெனில் சனநாயகத்தைப் பற்றி பேசும் பிரதமர் மகிந்த ராஜபக்ச பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இந்த அரசு இந்த நான்கு ஆண்டு கால அமைதி காலத்தில் சனநாயக ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றால் எந்த முயற்சிகளும் இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி புலிகள் இயக்கத்தோடு மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை மிகமோசமான நெருக்கடிகளை சந்திக்கும் அளவுக்கு நிலைமைகளை கொண்டு சென்றது இந்த அரசு என்பது குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில் அடுத்துவரும் தேர்தலிலும் அடுத்துவரும் காலங்களிலும் சிங்கள மக்களை இலக்கு வைத்து அவர்களை திருப்திப் படுத்துகின்ற காரியங்களிலே ஈடுபடப்போகிறார்கள்.

இத்தகைய அரசதலைவர்களிடமிருந்து சமாதான முயற்சி பற்றியும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளையும் எதிர்பார்ப்பது என்பது பிரயோசனமற்றதாகவே இருக்கும்.

தமிழ் மக்களையும் ஏமாற்றி சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றி இனவாத அரசியலை முன் கொண்டு செல்ல பிரதமர் மகிந்தராஜபக்ச துணிந்து விட்டதையே இது காட்டுகின்றது.

**புகழன்**





# சனாதிபதியை ஏமாற்றிய தேர்தல் ஆணையாளர்..!

ஒரு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலைக் கொழும்பின் அரசியற்களம் தற்போது எதிர்பார்த்துநிற்கிறது. காரணம் சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் வாய்திறந்துவிட்டதாகும். சிறிலங்காவின் ஆளுந்தரப்பு எவ்வளவுதான் கரடியாகக் கத்தினாலும், மிரட்டினாலும் தயானந்த திசாநாயக்க அவற்றுக்கெல்லாம் செவிகொடுப்பதாகத் தெரியவில்லை. "என்னிடமும் அரசியலமைப்பின் பிரதியொன்று இருக்கிறது" என்று காட்டமாகப் பதிலளித்திருக்கும் அவர், சிறிலங்காவின் உயர்நீதிமன்றில் சனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது கருத்தை எழுத்துமூலம் பகிரங்கப்படுத்திவிட்டார். இது கொழும்பின் அரசியற் களத்தைச் சூடுபறக்கவைத்துவிட்டது. கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு நடந்தேறிய மரணத்தின் காரணமாக இந்தச்சூடு வெளியாகத் தெரியாதபோதும் பல ஊடகங்கள் இந்தச் செய்திக்கே முன்னுரிமை அளித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

இரண்டாவது பதவிக்காலத்துக்கு சந்திரிகா அம்மையார் சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டபின்னர் செய்துகொண்ட இரண்டு பதவிப் பிரமாணங்களில் முதலாவதையே உத்தியோக பூர்வமானதாகத்தான் கருதுவதாகவும்; அதற்கியைபாக சனாதிபதித் தேர்தலை இவ்வாண்டிலேயே நடாத்துவதற்கான ஏற்பாடுகளைத் தனது திணைக்களம் மேற்கொள்வதாகவும்; அதற்கான அறிவித்தலை உரிய காலத்தில் வெளியிடவுள்ளதாகவும் தனது சட்டத்தரணி மூலம் சிறிலங்கா உயர்நீதிமன்றில் தெரிவித்திருக்கிறார் தயானந்த திசாநாயக்க.

சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஒக்ஸ்ற் 16 ஆம் திகதிக்குப்பின் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கிருக்கிறது. 2005 ஆம் ஆண்டிலேயே தேர்தல் நடைபெறுமாயின் மட்டுமே இது பொருத்தமானது. எனவேதான் தேர்தல் ஆணையாளர் தனது அதிகாரத்தை உரியகாலத்துக்கு முன்பாகவே பிரயோகிக்க முற்படுவதாக சிறிலங்காவின் ஆளுந்தரப்பு குற்றஞ்சாட்டிவருகிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை ஒன்றுமில்லாமற் செய்துவிட்டன தயானந்த திசாநாயக்கா உயர்நீதிமன்றில் தெரிவித்த கருத்துக்கள். சந்திரிகா அம்மையார் 1999 டிசெம்பர் 22ஆம் திகதி செய்துகொண்ட சத்தியப் பிரமாணமே உத்தியோகபூர்வமானதெனத் தான் கருதுவதாக அவர் தெரிவித்திருக்கிறார். இதன்மூலம் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அம்மையார் இரகசியமாகச் செய்துகொண்ட பதவிப் பிரமாணத்தை சவாலுக்கு இழுத்திருக்கிறார் தயானந்த திசாநாயக்க. ஆனால் அந்தப் பதவிப் பிரமாணமோ இன்னமும் சட்டவலுவற்ற, உத்தியோகபூர்வமற்ற ஒரு 'வெறும் சம்பவமாக' மட்டுமே இன்றுவரை இருக்கிறது. காரணம் அது குறித்த எந்தவொரு உத்தியோக பூர்வ அறிவித்தலும் இன்றுவரை விடுக்கப்படாமையாகும்.

ஒரு அரசாங்க அறிவித்தல் எப்போது உத்தியோகபூர்வ அந்தஸ்தைப் பெறுகிறது. அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் போதே ஒரு அறிவித்தல் சட்டரீதியாகச் செல்லுபடியாகும் தன்மையைப் பெறுகிறது. அம்மையார் செய்துகொண்டதாக அவரது தரப்புத் தெரிவிக்கும் இரண்டாவது பதவிப்பிரமாணம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் இன்றுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதால் அது குறித்து சட்டவலுவுள்ள விவாதங்களை முன்வைப்பது அம்மையாரது தரப்புக்கு கடினமாகவே இருக்கும் என்பது ஆய்வாளர்களது கருத்தாக இருக்கிறது.

எனவேதான் ஒரு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் அம்மையார் தனது இரண்டாவது பதவிப்பிரமாணம் குறித்து பகிரங்கப்படுத்தப்படக்கூடும் என வெகுவாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து அம்மையாரின் பிரதான எதிராளியான ஐக்கிய தேசியக் கட்சி இந்தமாத ஆரம்பத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க அச்சகத்தில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் இரகசியமாக அச்சிடப்படுவதாக அது கூறியிருந்தது. இதனையடுத்து அரசாங்க அச்சகர் இதனை மறுத்துரைத்ததுடன், ஒரு வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படுவதற்கான நடைமுறை ஒழுங்குகள் குறித்தும் விளக்கியிருந்தார்.

கடந்த பன்னிரெண்டாம் திகதி நள்ளிரவுமுதல் பத்துநாட்களுக்கு தான் பிரகடனப்படுத்தியிருந்த அவசர காலச் சட்டத்தை மேலும் 30 நாட்களுக்கு நீடிக்க வேண்டும் என சந்திரிகா அம்மையார் கேட்டிருக்கிறார். இந்த அவசரகாலச் சட்டத்தின் நிழலில் பல்வேறுவிடயங்களை அம்மையார் சாதித்துக்கொள்ள முடியும். நாட்டின் கவனத்தை தேடுதல்,கைதுகள், விசாரணை, பாதுகாப்பு, யுத்தநிறுத்தத்தின் நீடிப்புக்கு ஏற்பட்டுள்ள சேதம்...´ என்பதான செய்திகள் மூலம் பதட்டத்திற்கு உள்ளாக்கியபடியே தனது அரசியற் தேவைக்கான வர்த்தமானி அறிவித்தலை அம்மையார் வெளியிட்டுவிடக்கூடும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அம்மையார் செய்தால் அதனைத் தடுப்பது ஐக்கிய தேசியக்கட்சிக்குப் பெரும்பாலும் சாத்தியமாகப் போவதில்லை.

**கடந்த பன்னிரெண்டாம் திகதி நள்ளிரவு முதல் பத்துநாட்களுக்கு தான் பிரகடனப்படுத்தியிருந்த அவசரகாலச்சட்டத்தை மேலும் 30 நாட்களுக்கு நீடிக்கவேண்டும் என சந்திரிகா அம்மையார் கேட்டிருக்கிறார். இந்த அவசரகாலச் சட்டத்தின் நிழலில் பல்வேறு விடயங்களை அம்மையார் சாதித்துக்கொள்ளமுடியும். நாட்டின் கவனத்தைத் தேடுதல்,கைதுகள், விசாரணை, பாதுகாப்பு, யுத்தநிறுத்தத்தின் நீடிப்புக்கு ஏற்பட்டுள்ள சேதம்... என்பதான செய்திகள் மூலம் பதட்டத்திற்கு உள்ளாக்கியபடியே தனது அரசியற் தேவைக்கான வர்த்தமானி அறிவித்தலை அம்மையார் வெளியிட்டுவிடக்கூடும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.**

இதற்கிடையே இந்த விவகாரத்தில் மிகவும் கவனத்தைக் கவரவல்லதொரு விடயத்தை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் செய்திருக்கிறது. தற்போது விவகாரத்துக்கு உள்ளாகியிருக்கும் சந்திரிகா அம்மையாரின் இரண்டாவது பதவிக்காலத் துக்கான இரண்டு பதவிப்பிரமாணங்களின் போதும் தற்போதைய சிறிலங்காவின் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா சம்பந்தப்பட்டிருப்ப தால் சனாதிபதித் தேர்தல் பற்றிய மனுக்களின் விசாரணைகளில் அவர் ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என அந்த நிலையம் கோரியிருக்கிறது.

சந்திரிகா அம்மையார் இறுதியாக நம்பியிருக்கும் இறுதி ஆயுதமான பிரதம நீதியரசரும் களத்தில் இருந்து நீங்குதல் என்பது அவரால் ஏற்படக்கூடிய விடயமல்ல. இந்த விவகாரத்தில் தீர்மானிக்கும் சக்தியை அரசியல் அமைப்பின்படி கொண்டுள்ள தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே எதிர்க்கட்சிக் காரராகிவிட்டார். இப்போது பிரதம நீதியரசர் கோதாவில் இருந்து விலகவேண்டும் என சிவில் அமைப்புக்களின் தரப்பிலிருந்து குரல் எழுப்பப்பட்டிருப்பது சுவாரஷ்யமான விடயம்தான்.

இப்போது பந்து உயர்நீதிமன்றின் கையில் இருக்கிறது. தேர்தல் ஆணையாளர் மூன்றாவது திருத்தத்தின் ஈ(1) சரத்தைக் கையில் எடுத்திருக்கிறார். அத்தோடு அம்மையாரின் இரண்டாவது பதவிப்பிரமாணத்தை சட்டவலுவுள்ளதாக்கும் வர்த்தமானி அறிவித்தலும் இல்லை.

எனவேதான் தற்போது இரண்டு தேர்தல்களையும் ஒரேநாளில் வைப்பது பற்றிய பரிசீலனையில் அம்மையாரின் தரப்பு இறங்கியிருக்கிறது. எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி 2006ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் அதனை நிறைவேற்றிக் கொள்ளும் பெரும்பான்மை அம்மையாருக்குக் கிடையாது. எனவே நவம்பர் மாத முற்பகுதியுடன் பதின்மூன்றாவது நாடாளுமன்றத்தின் ஆயுளை முடிவுக்குக்கொண்டுவருவார் அம்மையார் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

சனாதிபதித் தேர்தலும் இந்தவருடம் நடத்தப்பட வேண்டியதுதான் என்ற யதார்த்தம் கருத்திலுதைக்கத் தொடங்கவே இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக இணைக்க முயல்கிறார் அம்மையார். ஏனெனில் இரண்டு தேர்தல்களுக்கான விடய முன்வைப்புகளும் வெவ்வேறானவை. சனாதிபதித் தேர்தல் விடயம் மட்டும் தனியே முன்வைக்கப்படுகையில், ரணிலை எதிர்கொள்வது அம்மையார் தரப்புக்கு சிரமமானதாகவே கள நிலவரம் உள்ளது. எனவே இரண்டையும் ஒன்றாக நடத்தி குட்டையைக்குழப்பி ஏதாவது மீன் அதிலே கிடைக்காதா என அங்கலாய்க்கிறார் அம்மையார்.

**பு.சத்தியமூர்த்தி**


## கவனியுங்கள்



சுண்டிக்குளக் கடலில் வடமராட்சி கிழக்கு, ஆனையிறவு மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து தொழில் செய்யும் மக்களும், சுண்டிக்குளப்பிரதேசத்திலேயே நிரந்தரமாக வாழ்கின்ற மக்களும் குடிநீரைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்படும் கிணறு தற்போது இதுவாகும்.

இங்குள்ள ஏனைய கிணறுகள் அனைத்தும் சுனாமியின் தாக்கத்தால் உவராகிவிட்ட நிலையில் இக்கிணறு மட்டுமே நன்னீரைக் கொண்டுள்ளது. பழமை வாய்ந்த இக்கிணறு இன்று சேதமடைந்த நிலையிலும் தூய்மையற்றும் காணப்படுகிறது. இதனால் இக் கிணற்றை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லையென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே பல மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கப் பயன்படும் இக் கிணற்றினை புனரமைப்புச் செய்து தருமாறு உரியவர்களிடம் மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

**டா.அருட்செல்வம், பிரமந்தனாறு.**



**தற்கொடைத்தாக்குதலின் வலிமை உணரப்பட்டதும் காஸாப்பகுதியின் யூதக் குடியேற்றக்காரர்களின் வெளியேற்ற நிர்ப்பந்தத்துக்கான வலுவான காரணமாக உள்ளது. அதன் பாதிப்புக்களுக்கு ஷரோன் அரசாங்கம் முகங்கொடுக்க முடியாத சூழலும் பலஸ்தீன மக்களின் நியாயத்திற்கு கட்டுப்பட வேண்டிய சூழலும் தவிர்க்க முடியாததாக மாறியிருந்தது. ஒருவகையில் பலஸ்தீனத் தரப்பு மேற்கொண்ட தற்கொடைத்தாக்குதல்களும் யூத அரசை மட்டுமல்ல சர்வதேச சக்திகளையும் நெருக்கடிக்குத் தள்ளியிருக்கின்றன. எனவே தான் தீர்வை நோக்கிய நிர்ப்பந்தத்திற்குள் உலகம் கட்டுப்பட தற்கொடைத் தாக்குதல் வழிவகுத்ததெனலாம்.**



# காஸாவிலிருந்து யூதர்கள் வெளியேறுகிறார்கள்…


கடந்த நூற்றாண்டுகளில் மட்டுமன்றி இந்த நூற்றாண்டிலும் யூதர்-பலஸ்தீனப் பிணக்கு தீர்க்கப் படாததொன்றாகவே தொடர்கிறது. அரபுக்கள் பக்கமிருந்தும், யூதர்கள் பக்கமிருந்தும் கடந்த நூற்றாண்டு முழுவதும் துயரமும், படுகொலையும் மலிந்திருந்ததுடன் அழிவுகளால் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பமுடியும் என்பதை யூதர்கள் கடந்த 50வருடம் அமுலாக்கிக் காட்டினர்.

முடிந்த 50 வருடங்களிலும் பலஸ்தீனர்களை போரில் வென்றும், தோற்றும், சமாதானத்தில் தந்திரமாக நகர்ந்தும் சாதித்தார்கள். பல நூற்றாண்டுகளில் அனுபவித்த யூதர்கள் 1948இன் பின்பு நிம்மதியாக வாழ முயன்றாலும் அவர்களது அணுகுமுறை அதனை சாத்தியமாக்கத் தவறியது. இதனால் யூதர்கள் மீண்டும் துயரப்படும் நிகழ்வு அரங்கேறி வருகின்றது. இதனை தெளிவாக நோக்குவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

யூதக் குடியேற்றவாசிகள் வெளியேறும் காலம் முடிவடைந்து விட்டது. காஸாப்பகுதியிலிருந்து ஏறக்குறைய 21 குடியேற்றங்கள் இஸ்ரேலிய அரசாலும் இராணுவத்தின் வற்புறுத்தலாலும் வெளியேற்றப்படுகின்றன.

இவ்வெளியேற்றத்துக்கான அடிப்படை மிக நீண்ட காலத்தை ஒட்டியதாக அமைந்தபோதும் உலகத்தினதும் யூதர்களை ஆளும் அரசியல் சக்திகளது நலன்களுக்கும் இசைவாகத் தீவிரம் பெற்றுள்ளது. பலஸ்தீனர்கள் தரப்பில் ஏற்பட்ட தலைமைத்துவ மாறுதல்களும், உலகத்தின் போக்கில் காணப்படும் நிர்ப்பந்தங்களும் யூதக்குடியேற்றங்களை காஸாவிலிருந்து அகற்ற வேண்டும் என்ற சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

காஸா-ஜெரீக்கோ உடன்படிக்கையிலிருந்தே யூதக்குடியேற்றங்கள் அகற்றப்படுவதற்கான காலக்கெடு அரம்பமானது. 1998இல் ஏற்பட்ட காஸா-ஜெரீக்கோ உடன்பாட்டின்படி 1999 டிசம்பர் காலப்பகுதிக்குள் குடியேற்றங்கள் காஸாவிலிருந்து அகற்றுவதென்ற நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிபந்தனையை யூதர்கள் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இழுத்தடித்ததுடன் நிர்ப்பந்தங்களை தமது தந்திரத்தினால் எதிர்கொண்டு வெற்றி



பெற்றுவந்தனர்.அந்தவகையில் தற்போதைய நிகழ்வு உலகளாவிய நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்படவேண்டிய நிலையையே யூதர்கள் பக்கம் உருவாக்கியுள்ளது.

தற்போது காஸாப் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் 21 குடியேற்றங்களிலிருந்தும் பின்னர் திட்டமிடப்பட்டதற்கு இணங்க மீதி குடியேற்றங்கள் அகற்றப்படுமென்பதும் இஸ்ரேலிய-பலஸ்தீனத் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சமாகும். ஏறக்குறைய எட்டாயிரம் குடியேற்றக்காரர்கள் காஸாப்பகுதியில் வாழ்கின்றனர். இவர்களது வெளியேற்றம் 'வைந்தி,'ரோட்மப்'என்கின்ற உடன்படிக்கைகளுக்கு ஏற்ப திட்டமிடப்பட்டதாகும். ஆனால் இவர்களது குடியேற்றம் மிகப் பிந்தியதென்றும் இப்பிரதேசங்களில் குடியேறியவர்கள புதிய உலக ஒழுங்கு தயாரான பின்பு (1989 பின்பு) ரஷ்யா, மற்றும் அதன் குடியரசுகளில் வாழ்ந்த யூதர்கள் என்றுமே கூறப்படுகின்றது.

ஏறக்குறைய 15 வருடத்துக்குட்பட்ட குடியேற்றங்களாகவே உள்ளன. ஆனால் பலஸ்தீனிய 1.4 மில்லியன் மக்களுடன் ஒப்பிடும் போது காஸாப்பகுதியில் வெறும் எட்டாயிரம் யூதர்கள் 2/3 வீதமான நிலப்பரப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. இந்தப் பங்கீடானது மிக மோசமான தாக்கத்தை யூதர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. அநேகமாக பலஸ்தீனர்கள் முகாம்களில் வாழ்ந்தமையாலும் இராணுவக்கெடு பிடியாலும் அதிக நெருக்கடியை அனுபவித்தனர்.

குடியேற்றக்காரரை வெளியேற்றும் நடவடிக்கையை யூத அரசாங்கங்கள் மிக மோசமாகக் கையாள முயலுகின்றன. இதனால் காஸாப் பகுதி யூதர்களிடம் அதிக அரச எதிர்ப்பு ஆரம்பித்துள்ளது. வெளியேற்றப்பட்டவர்களில் கணிசமான எண்ணிக்கையானவர் என்றுமே மறைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அவர்களின் ஆயுதப் பிரிவுகள் உண்டு எனவும் ஆயுத ரீதியாக பதில் நடவடிக்கையை அரசுமீது திணிக்க முயல்வதையும் வெளியேறாத யூதர்களின் திட்டமிடலாக உள்ளதெனக் கூறப்படுகின்றது.

ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்பு காஸாவைக் கைப்பற்றிய யூத அரசு படிப்படியாக தனது இராணுவ அமைப்பையும் பின்னர் குடியேற்றங்களையும் ஏற்படுத்தியது. காஸாவை தனது யுத்த தடுப்புப் பிரதேசமாகவும் பலஸ்தீனர்களை அடக்கிவைப்பதற்குரிய பிரதேசமாகவும் யூத அரசுகள் மாற்றிவந்தன.

ஆனால் இன்று வரலாற்றில் யூத அரசு மேற்கொண்டுவரும் குடியேற்றங்களையும், இராணுவத்தையும் விலக்கிக்கொள்வது இஸ்ரேல்-பலஸ்தீன பிணக்கின் திருப்பமாக அமைய வாய்ப்புண்டு. யூதக்குடியேற்றங்கள் விலக்களிக்கப்படுவதற்கான பின்னணி சர்வதேச மட்டத்தில் எழுந்த நெருக்கடியாக அமைந்த போதும் மறுபக்கத்தில் ஏரியல் ஷரோனின் ஆட்சியும் யூத அரசு எதிர் நோக்கும் நெருக்கடியும் பிரதானமான புள்ளிகளாக உள்ளன.

ஏரியல் ஷரோனின் அரசாங்கம் சீனாவுடன் அண்மையில் ஏற்படுத்திக் கொண்ட உறவும் ஆயுதரீதியான தொழில்நுட்பப் பரிமாற்றமும் யூத அரசாங்கத்தை சுயமாகவும் பாதுகாப்புடனும் அமைக்க உதவும் என்ற வாதம் காணப்பட்டாலும் மறுபக்கத்தில் சர்வதேச ஆதரவை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. வர்த்தக, பொருளாதார ரீதியில் சர்வதேச சமூகம் அதிக நெருக்கடிகளை மேற்கொள்ள முயலும் சந்தர்ப்பமும் அவ்வாறே அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அணுகுமுறையில் ஏற்பட்டுவரும் மாறுதலும் முழுமையான சிக்கல்களை ஷரோன் அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியது.

கடந்த ஒரு தசாப்தகாலமாக இந்தியா, சீனா பக்கம் அதிக நெருக்கத்தை பேண இஸ்ரேல் முயன்றதுடன் சுதேச வளர்ச்சியிலும் அமெரிக்காவிடமிருந்து விலகியிருக்கவும் முயன்றுள்ளது. இத்தகைய போக்கும் அதிகமான நெருக்கடியைக் கொடுத்ததுடன் ஐரோப்பிய-அமெரிக்க தரப்பு பெருமளவுக்கு பலஸ்தீனர் பக்கம் செயல்படுகின்ற போக்கும் காணப்படுகின்றது. இதுவே காஸாவிலிருந்து குடியேற்றக் காரரை வெளியேற்றுவதற்கான காரணமாகவுள்ளது.

குடியேற்றங்களை அகற்றிய பின்பு இஸ்ரேல் தரப்பு பலஸ்தீனர் பக்கம் அதிக சுமையை ஏற்படுத்த, திட்டமிட்டுள்ளது தெளிவாகின்றது. தற்போது 'ரோட்மப்'பை அமுல்படுத்துவதில் ஓரளவு முன்னேற்றத்தை இஸ்ரேல் தரப்பு காட்டியுள்ளது. இது சர்வதேசத்திற்கும் இஸ்ரேலிய தரப்புக்கும் போதுமானது மட்டுமல்ல. பாரிய விடயமும் கூட.

ஆனால் இதற்கு பதில் அளிக்க வேண்டிய பலஸ்தீனத் தரப்பு அதிக விலையை கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படும். அப்படியான சூழலை முகமட் அபாஸ் மட்டுமல்ல காஸாப்பகுதியில் இயங்கி வரும் ஹமாஸ் அமைப்புக்கும் உரித்தானது. தற்கொலைத்தாக்குதல் கள் நிறுத்தப்படுவதென்பது பிரதான சவாலாக பலஸ்தீனத் தரப்புக்குரிய விடயமாக மாறும் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.

தற்கொடைத்தாக்குதலின் வலிமை உணரப்பட்டதும் காஸாப் பகுதியின் யூதக் குடியேற்றக்காரர்களின் வெளியேற்ற நிர்ப்பந்தத்துக்கான வலுவான காரணமாக உள்ளது. அதன் பாதிப்புக்களுக்கு ஷரோன் அரசாங்கம் முகங்கொடுக்க முடியாத சூழலும் பலஸ்தீன மக்களின் நியாயத்திற்கு கட்டுப்பட வேண்டிய சூழலும் தவிர்க்க முடியா ததாக மாறியிருந்தது. ஒருவகையில் பலஸ்தீனத் தரப்பு மேற்கொண்ட தற்கொடைத்தாக்குதல்களும் யூத அரசை மட்டுமல்ல சர்வதேச சக்திகளையும் நெருக்கடிக்குத் தள்ளியிருக்கின்றன. எனவேதான் தீர்வை நோக்கிய நிர்ப்பந்தத்திற்குள் உலகம் கட்டுப்பட தற்கொடைத் தாக்குதல் வழிவகுத்ததெனலாம்.

இதேபோன்று இஸ்ரேலிய அரசாங்கமும் பலஸ்தீன அதிகார அரசாங்கம் போன்று யூத மக்கள் மீது வெறுப்பையும் அதிக எதிர்ப்பையும் காட்டவேண்டிய நிலை ஏற்படும். ஏரியல் ஷரோனின் ஆட்சியில் அதிருப்தி மட்டுமல்ல யூத அரசாங்கங்கள் மீதான நம்பிக்கைக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. பலஸ்தீன அரசாங்கமும் தமது மக்களை தாக்குதல் நடவடிக்கைகளிலிருந்து தற்கொடை முயற்சியிலிருந்து கட்டுப்படவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அரசாங்கங்களையும் ஆட்சியாளர்களையும் திருப்திப்படுத்தும் நிலையே காணப்படுகின்றது. அரசுகளும் ஆட்சியாளர்களும் ஆக்கிரமிப்பை பயனபடுத்தி அதிகாரத்தை தக்க வைக்கும் நடவடிக்கையாகவே இந்த விடயத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இதுவரை இஸ்ரேலிய தரப்பும் பலஸ்தீனத் தரப்பும் வேறுவேறாகவும் எதிர் எதிர்த் தரப்பாகவும் காணப்பட்டநிலை மாறி இணைந்து போகின்ற இசைந்து நடவடிக்கை எடுக்கின்ற அரசியலை காணக் கூடியதாக உள்ளது. முகமட் அபாஸும், ஏரியல் ஷரோனும் ஒரேதிசையில் ஆனால் வேறுபட்ட தளத்திலிருந்து இயங்க ஆரம்பித்துள்ளனர் என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

காஸாப்பகுதியை யூதர்களுடைய ஏனைய பகுதியிலிருந்து பிரிக்கும் சுவர்கள் வலுவானதாக மாறுவதோடு 'ரோட்மப்' இல் உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களும் அவையாகவே உள்ளன. யூதர்கள் மீதான தாக்குதல்களின் பிராந்தியச் சக்திகளின் நிலை பலவீனமடைந்திருப்பதுடன் ஈரான் ஆரம்பித்திருக்கும் அணுவாயுதத்திட்டம் இஸ்ரேலின் அணுகுமுறையின் மாறுதலுக்குரியதாகும்.

ஈரானின் புதிய இஸ்லாமிய அடிப்படைவாதச் சக்தியின் அரசும் ஈரானின் தீவிரமான அணுவாயுத தயாரிப்புக்கான நடவடிக்கை அமெரிக்கத் தரப்பினால் எப்படிக் கையாளப் போகின்றதென்பதை விட இஸ்ரேல் எப்படி எதிர்நோக்கப் போகின்ற

**ஐங்கரன்**

தென்பது அடுத்த பலஸ்தீன யூதக் குடியேற்றங்களை அகற்றுவதற்கான சவாலை சுமூகப்படுத்த எடுத்துவரும் முயற்சியானது பிராந்தியச் சக்தியான ஈரானின் அணுவாயுத பரவலுடன் தொடர்புபட்ட விடயமாகவும் நோக்கப்படுதல் வேண்டும். இஸ்ரேல்- பலஸ்தீன சுமூகத்தன்மை மேற்குலகத்தை மீள இடமளிக்க முயலும் சூழலும் பாதுகாப்பான அணுவாயுதத் திட்டத்திற்கு பதிலளிக்கும் விடயமாகவே அமைந்திருக்கிறது.

எனவே மேற்காசியா மீண்டுமொரு புதிய சூழலுக்கான தயார்ப்படுத்தலை உருவாக்கியுள்ளது. இஸ்ரேலியக் குடியிருப்பாளரை காஸாவிலிருந்து விலக்குவதென்பது பிராந்திய அரசியலில் காணப்படும் கொதிநிலையை கையாளுவதற்கான முயற்சியாக உள்ளது எனலாம்.




# சீனி சாப்பிடும் இயந்திர மனிதன்

ஒருவழியாக நாம் சாப்பிடும் உணவுப்பொருட்களைச் சாப்பிட்டு சக்திபெறும் இயந்திர மனிதனையும் கண்டுபிடித்தாகிவிட்டது.

டாம்பா நகரத்தில் இருக்கும் தென் ∴புளோரிடா பல்கலைக்கழகத்தில் Gastronome என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த இயந்திர மனிதன் ஒரு மீற்றர் நீளமாகவும் 12 சக்கரங் களில் செல்லும் மாதிரிக்கு உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த இயந்திர மனிதனுக்குள் ஈ-கோலி நுண் ணுயிரிகளைக் கொண் டியங்கும் ஒரு எரிபொருளை மின்சாரமாக மாற்றும் என்ஜின் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஈ-கோலி பக்றீரியாக்கள் சர்க்கரையை குளுக்கோஸாகவும் குளுக்கோஸை மறுபடியும் உடைத்து எலக்ட்ரான்களை வெளிப்படுத்துகின்றன. இந்த எலக்ட்ரான்கள் ஒரு பட்டரியில் சேமிக்கப்பட்டு இயந்திர மனிதனுக்கு மின் சக்தியாக உபயோகப் படுகிறது.

இந்த ஈ-கோலி இயந்திரம் சாதாரண தோசை இட்டலியைக்கூட சாப்பிட்டு மின்சாரம் பண்ண உபயோகப்படுத்தலாம். ஆனால் இன்னும் இந்த இயந்திரமனித மலத்தை எப்படி வெளியே அனுப்புவது என்று திட்டமிடவில்லை இவர்கள்.

இந்தச்சாப்பாடு சாப்பிடும் இயந்திர மனிதனைக் கண்டுபிடித்த இயந்திரவியல் உதவிப் பேராசிரியரான ஸ்டுவர்ட் வில்கின்ஸன், இந்த முறையை வைத்து புல்லைத் தின்று சக்திபெற்று



புல்வெட்டும் இயந்திரம் பண்ணலாம் என்று கூறுகிறார். வேடிக்கைக்குச் சொல்லவில்லை இவர்.






# இளம் வயதினர் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை முகப்பரு

இந்தப்பரு ஏற்படுவதை அக்னி வல்காரிஸ் (**Acne Vulgaris**) என அழைப்பர். இது தோலில் இருக்கும் நெய்ச்சுரப்பிகளின் குழாய்கள் (**Pilosebaceous duct**) அடைபடுவதனாலேயே ஏற்படுகின்றது. இது முகத்தில் மாத்திரமல்ல நெஞ்சுப்பகுதிகளிலும் ஏற்படலாம். இது ஆண், பெண் இருபாலாரிலும் ஏற்படும். பெரும்பாலும் இளம் வயதிலேயே ஏற்படும். பருவமடையும் காலங்களில் ஓமோன்களின் தாக்கத்தால் நெய்ச்சுரப்பிகள் வளர்கின்றன. அதிகமாக எண்ணெய் பதார்த்தங்கள் எடுப்பதனாலேயே இளம் வயதினரில் அதிகமானோருக்கு முகப்பரு ஏற்படுகின்றது. அதாவது 14வயது தொடக்கம் 30 வயது வரையுள்ளவர்களுக்கே இது ஏற்படுகின்றது. **Propioni Bacterium Acnes** என்ற பக்றீரியா இந்த நெய்ச்சுரப்பிகளின் குழாய்களில் காணப்படுவதால் இவையும் முகப்பரு ஏற்படுவதற்கு சில பங்களிப்பை வழங்குகின்றன என்று அறியப்பட்டுள்ளது.

முகப்பருக்கள் முகத் தோலில் அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தித் தழும்புகள், குழிகள் போன்றவற்றை ஏற்படுத்தி முக அழகைக் கெடுக்கலாம்.

ஆகவே முகப்பரு ஏற்படாமல் தடுப்பதற்கு நெய்ச்சுரப்பிகளின் குழாய்கள் அடைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த நெய்ச்சுரப்பிகள் இந்தக்குழாய்களினூடாக தோலின் மேற்பரப்புக்கு எண்ணெய் பதார்த்தங்களைச் சுரக்கின்றன. இந்த எண்ணெய்ப் பதார்த்தங்கள் தோல் வரண்டு போகாமல் எண்ணெய்த் தன்மையுடையதாக வைத்திருக்க உதவும். இக்குழாய்கள் அடைபடுவதனால் எண்ணெய்ப் பதார்த்தங்கள் தோலினுள் தங்கி கிருமித் தொற்றுதல் ஏற்பட வாய்ப்பளிக்கும்.


இந்த நெய்ச்சுரப்பிக் குழாய்கள் அடைபடாமல் இருப்பதற்குப் பல்வேறு முறைகள் இருக்கின்றன. காலையும், மாலையும் முகத்தை சுடுநீரை உபயோகித்து சவற்காரம் போட்டுக் கழுவிக்கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் நெய்ச்சுரப்பிக்குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கிக் கொள்ளலாம். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை முகத்துக்கு சுடுநீர் ஆவியைப் பிடித்துக் கொள்வதன்மூலமும் இந்தக் குழாய்களை அடைப்பின்றி வைத்திருக்கமுடியும். தலையணை உறைகளையும் படுக்கை விரிப்புக்களையும் சுத்தமாக வைத்திருப்பதன்மூலம் முகப் பருக்களில் கிருமித்தொற்றுகையைத் தடுக்கமுடியும்.

இந்த முறைகளை 3-4 வாரங்களுக்கு தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டும். இவற்றின் மூலமும் முகப்பரு கட்டுப் பாட்டுக்குள் வராவிட்டால் பல்வேறு வகையான முகப்பூச்சு மருந்துகள் இருக்கின்றன. இவை நெய்ச்சுரப்பிகளின் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதுடன் கிருமித் தொற்றுதலையும் தடுக்கின்றன.


# உலகத்தை வாழவைக்கும் ஐந்து அதிசயங்கள்

## 01. துவிச்சக்கரவண்டி

இதுபோன்ற அற்புதமான ஒரு பொருள் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்னமும் சீனாவிலும் இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழீழத்திலும் துவிச்சக்கர வண்டிதான் முக்கிய ஊர்தியாய் ஆட்களையும், பொருட்களையும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுசெல்கிறது. பெட்ரோல் விலை ஏறிவிடும் என்ற பயம் இல்லை. நிறுத்திவைக்க பெரியஇடம் தேடி அலையவேண்டியதில்லை.



பழுதுபட்டால், டாக்டர் பட்டம் பெற்ற மெக்கானிக்கைத் தேடி அலைய வேண்டியதில்லை. காற்றைச் சுத்தமாய் வைத்திருக்க இது போன்ற ஓர் ஊர்தி வேறுகிடையாது. புகையைக் கக்குவதில்லை. கிட்டத்தட்ட 85கோடி துவிச் சக்கரவண்டிகள் உலகத்தில் இருப்பதாகக் கணக்கு. இன்னொரு ஆச்சரியமான புள்ளி விபரம் அமெரிக்காவில் தலைக்கு உள்ள துவிச்சக்கர வண்டி விகிதம் சீனாவைவிட அதிகம். ஆனால் பிரதான ஊர்தியாய் பயன்படுத்துவதில்லை. இதில்லாமல், உடம்புக்கு நல்ல ஆரோக்கியம் தரும் உடற்பயிற்சி அல்லவா இது.



## 2. மின்விசிறி

வெயில் நாளில் ஒரு மின் விசிறியைச் சுழலவிட்டு உட்கார்ந்தால்... ஆகா சொர்க்கம்தான். ஆனால், அதற்குப்பதிலாக குளிர்சாதன வசதி என்று ஏர்கண்டிஷனரைப் போட்டால் முடிந்தது கதை... பெரும் மின் சக்தி சேதம். அதில்லாமல் சி.எ∴.வ்.சி என்கிற நச்சுவாயு வெளிவந்து சுற்றுப்புறச் சூழலை நாசம் செய்யக் காத்துள்ளது. எனவே எளிமையாகப் பழுது பார்க்கக்கூடிய பெரிதும் சிக்கலற்ற ஒரு பொருள் மின் விசிறி.

## 3. துணிகள் காயப்போடும் கயிறு

ஊரில் துணி காயப்போடும் கம்பியைப் பார்க்கும்போது அதன் முக்கியத்துவம் உணரப்படுவதில்லை. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், துணியை உலர்த்துவதற்காக செலவிடும் மின் விரயத்தைப்பார்க்கும் போதுதான் இந்தச் செலவில்லாத உலர்த்தி எவ்வளவு பெரிய பயனுள்ளவிஷயம் என்று புரிகிறது. சூரிய சக்தியின் மிக எளிமையான ஆனால் மிகப் பயனுள்ள உபயோகம் இது.




## 4.தொலைபேசி.




பேச்சைச் சுமந்துசெல்லும் கருவிபோல வேறு எதுவும் பயனுள்ளதாய், தனிப்பட்ட ஒரு முக்கியத்துவம் உள்ளதாய் எதுவுமே இன்னும் தோன்றவில்லை என்று சொல்லவேண்டும். அந்தரங்க மொழியால் ஒருவருடன் மற்றொருவரைப் பிணைக்கும் ஒரு மாயக்கயிறு இது. கணினி, இணையம், தொலைக் காட்சி எல்லாம் வந்தபின்னும் கூட இதன் முக்கியத்துவம் மாறாமல்தான் இருக்கிறது.

## 5. பொது நூலகம்.

மிகச் சிறப்பான கருத்துக்கள் எல்லாமே அடிப்படையில் மிக எளிமையானவை தாம் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் பொதுநூலகம் என்கிற கருத்து ஆகும். குறியீட்டளவில் தெரிந்துகொள்ள ஆர்வமுள்ள எவருக்குமே அறிவு எட்டக்கூடிய தூரத்தில் தான் இருக்கவேண்டும் என்கிற உன்னத சனநாயகக் கோட்பாட்டின் நடைமுறைப்படுத்தல் இது. இந்த நூலகக் கருத்தை விரிவுபடுத்தித்தான் வீடியோ வாடகைக்கு, துவிச்சக்கர வண்டி வாடகைக்கு என்று பல கருத்துக்கள் நடைமுறையிலும் உலா வருகின்றன.



# காரசாரம்



# சேமிப்பு இல்லாத குடும்பம் முன்னேற முடியாது

**எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் இடர்களின் பின்னும் எமது மக்களின் பொருளாதாரத் தன்னிறைவை மேம்படுத்தும் முகமாக தமிழீழவைப்பகம் இயங்கிவருகிறது. அன்பான சேவைக்கும் நம்பிக்கைக்கும் கூட நமது வைப்பகம் எடுத்துக் காட்டாக உள்ளது.**

மக்கள் வாழ்க்கையில் முன்னேறச் சேமிப்பு அவசியம். சேமிப்பு இல்லாத குடும்பம் முன்னேறமுடியாது. ஒரு பழங்கதையில் முனிவரொருவர் தன் சீடனுக்கு உபதேசம் செய்கிறார். "இரவுக்கு தேவையானதைப் பகலிலும், மாரிக்குத் தேவையானதைக் கோடையிலும், வயோதிபத்தில் தேவையானதை வாலிபத்திலும், மறுமைக்குத் தேவையானதை இம்மையிலும், (மறுமை-மரணத்தின் பின்-இம்மை- இக்காலம்) தேடிவைக்க வேண்டும்" என்று சொல்லியோ சொல்லாமலோ, மக்கள் சேமிக்கிறார்கள் அது அவர்கள் பண்பு. குடிகாரன் கூட நாளாந்தம் வேலை செய்யும்போது ஒரு தொகையைக் குடித்தாலும் வீட்டுக்கென்று பணங்கொடுக்கும் போது நாளை குடிப்பதற்கென்று சில ரூபாய்களை சேமிக்கிறான். சிறுபிள்ளைகள் கூட கிடைக்கும் மிட்டாய்களில் சிலவற்றைப் பிறகு உண்ணலாம் எனச் சேமிக்கிறார்கள். மாரிகாலத்துக்கு தேவையானதை எறும்பு சேகரிக்கிறது. பிறக்கப் போகும் தன் குஞ்சுகளுக்காக தேனீ தேன் சேர்க்கிறது. இந்தவகையில் பெண்கள் மிகவும் கெட்டிக்காரிகள் என்று தான் சொல்லவேண்டும். அந்தக்காலத்தில் என் பாட்டனார் ஒரு கதை சொல்வார். பாட்டியின் முந்தானை (தாவணி) முடிச்சில் காசில்லையென்றால் உலக வங்கியில் காசில்லை என்றுதான் அர்த்தம்.

பெண்கள் அன்றாடம் சமையலுக்குத் தேவையான பொருட்களில் சீட்டுப்பிடிப்பார்கள் அரிசிச் சீட்டு, சீனிச்சீட்டு, மிளகாய்த்தூள் சீட்டு, காசுச்சீட்டு என்று பலவகைச் சீட்டுக்களை உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் பெண்கள்தான். எந்தவித எழுத்துப் பத்திரமுமில்லை. வாக்கு நாணயம் தான் இதன் காப்பு. நாகரிகம் மாற மாறியது நாணயம் மட்டுமல்ல, மனிதநாணயமும்தான். நா+நயம்=நாணயம் ஆகிவிட்டது. வள்ளுவரே இதைப்பற்றிக் குறள் எழுதியிருக்கிறார் என்றால் அந்தக் காலத்திலும் நாக்குத் தவறுபவர்கள் இருந்திருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்.

"யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" எது எப்படியோ சீட்டுகள் வாக்கு மாறுபவர்களால் குழம்பிவிடும், சீட்டுப்பிடித்த தாச்சிக்கு நஷ்டம்வரும். ஆனால் எப்போதும் முதல் சீட்டு கழிவில்லாமல் தாச்சிக்குத்தானே கொடுக்கிறார்கள். அதனால் அவர் சீட்டு எடுப்பவர்களுக்கு காசு கொடுக்கவேண்டிய பொறுப்பில் இருக்கிறார். இப்படி நாணயம் அற்றவர்களை சீட்டுக்கு சேர்த்ததால் ஒட்டாண்டி ஆனவர்கள் அதிகம். ஊரை விட்டோடியவர்கள் அதிகம். இன்னும் மீளமுடியாத கடனில் மூழ்கியவர்கள் என்று வரலாறே இருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைப்பதற்கே வைப்பகங்கள் தமது பணியை ஆரம்பித்தன. சேமிப்புப் பணத்துக்கென விசேட வட்டியை வழங்கி சேமிப்பவரின் பணத்துக்கும் ஒரு பாதுகாப்பை வழங்கும் நிறுவனமாக இருந்தது. தமது கைகளில் பணம் வைத்திருப்பவர்களும் பெரும் பணக்காரர்களும் பதுக்கி வைத்த பெருமளவு பணத்தை வெளியே கொண்டுவர சிறிமாவோ அம்மையார் ஒரு தந்திரமான வழியைக் கையாண்டார். புழக்கத்திலிருந்த ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபாத்தாள்கள் செல்லாது எனவும் அவற்றை ஒரு மாத காலத்துள் வங்கியில் கொடுத்துப் புதிய நோட்டுக்களைப் பெறுமாறும் அறிவித்தார். அந்த மாதத்துள் மட்டும் அரசாங்கம் பல மில்லியன் ரூபாய்களை வருமான வரியாகப் பெற்றதுடன் வங்கி நடவடிக்கைகளிலும் மக்கள் ஈடுபட ஆரம்பித்தனர்.

கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை அறிவித்து மக்களின் சேமிப்பை மட்டுமன்றி கடனையும் வழங்கி மக்களைக் கவர்ந்த வங்கி இலங்கை வங்கி. இதுதான் இலங்கையின் முதல் வங்கியும் கூட. இதன் பின்னர் புற்றீசல்கள்போல ஏராளமான வங்கிகள் வந்துவிட்டன.

ஒரு காலத்தில் இந்த வங்கிகளில் பணவைப்புச் செய்த தமிழ்க் குடிமக்களும், நகைகளை அடகு வைத்த மக்களும், வடக்குக் கிழக்கின் வங்கிகளில் பணத்தை மீளப்பெறவும், நகைகளைப் பெறவும் முடியாமல் பெரும் அவதிப்பட்டதுண்டு. இனப்பிரச்சினையைக் காரணங்காட்டி மக்களின் பணத்தையும் பொருளையும் ஒட்டுமொத்தமாகச் சுருட்டிக்கொண்டு போய் கொழும்பில் வைத்தன இந்த சிறிலங்கா வங்கிகள்.

மேலும் இவ்வங்கியில் பெருமளவு தமிழர்கள் வைப்புச் செய்த பணத்துக்கு எந்த உத்தரவாதமும் இல்லாதிருந்தது. ஐம்பது லட்சம் ரூபாய்களை வைப்புச் செய்தவரும் ஐயாயிரம் ரூபாமட்டுமே கேட்டவுடன் பெறக்கூடியதாகவிருந்தது. இதன் பின்னும் இந்த வங்கிகளை மக்கள் சரணடையவேண்டிய தேவையிருந்தது. காரணம் ஏராளமானவர்கள் வெளிநாடுகளில் தங்கியிருப்பவர்களாக மாறிவிட்டதால் அங்கிருந்து பெற்றார் உற்றாருக்கும் பணம் அனுப்ப வேண்டியிருந்தது. அதற்கான ஊடகங்களாக இந்த வங்கிகளே விளங்கின.

வாழ்க்கையில் மிகத் தாழ்ந்த பொருளாதாரச் சிக்கலில் இருப்போர் மத்திய கிழக்கில் வேலை செய்கிறார்கள். இவர்களது ஊதியமென்னவோ விளம்பரங்களில் அறிவிப்பதுபோல பன்னிரண்டாயிரம் அல்ல. அங்குள்ள நாணயத்தை இலங்கை ரூபாவுக்கு மாற்றியதும் ஒன்பதாயிரம் ரூபாய்களுக்கும் சற்று அதிகமாகவரும். அதையும் இலங்கை வங்கியின் கணக்குக்கு இலங்கை நாணயமாகவே அங்கிருந்து அனுப்பினால் ஆயிரம் ரூபாவுக்கு எழுபத் தைந்து ரூபா தரகுக்கூலியை வங்கி எடுக்கிறது.

பின்னர் அந்தக்காசையும் மீள எடுக்கும்போது ஆயிரத்துக்கு ஒரு ரூபா தரகு வட்டி கிடையாது. நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவருக் குத்தான் இந்த வைப்புக்கு கழிவு என்பது முன்பிருந்த நடைமுறை. இப்போது சேமிப்பிலிருந்தே வரி அறவிடுகிறது வங்கி. தேசவிடுதலைக்காக வரிப்பணத்தை வாரி வழங்கும் மக்களுக்கு இந்தச் சிங்கள அரசின் வங்கிகளில் பணத்தை இழப்பது பெரிதல்ல.

ஆனால் சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல நமது மக்களின் பணம் அரச வங்கிகளுக்குள் முடங்கிப் போகிறது என்பதல்ல. அவர்களின் அபிவிருத்திக்கே பயன்படுகிறது. இப்போதெல்லாம் நிவாரணப் பணிகளுக்கெனப் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் பணமும் வங்கிகளினூடாகவே வழங்கப்படுகிறது. தொடர்ந்து வங்கியில் பணம் போடுகிறார்களோ இல்லையோ- ஒவ்வொருவரும் புத்தகத்துக்கான நிலையான வைப்பு ஐநூறு ரூபாவும் வங்கியில் நிற்கும் சிறுதுளி பெருவெள்ளம். ஐயாயிரம் பேர் ஐநூறு ரூபா கட்டினால் இருபத்தைந்து லட்சமாகிவிடும்.

எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் இடர்களின் பின்னும் எமது மக்களின் பொருளாதாரத் தன்னிறைவை மேம்படுத்தும் முகமாக தமிழீழ வைப்பகம் இயங்கிவருகிறது. அன்பான சேவைக்கும் நம்பிக்கைக்கும் கூட நமது வைப்பகம் எடுத்துக்காட்டாக உள்ளது. ஆனால் ஏனோ அரசவங்கிகளில் இந்த அனுசரணை இல்லாமல் இருக்கிறது. கொஞ்சம் கூட ஆதரவில்லாமல் அவர்கள் நடந்து கொள்வதன் மர்மம் என்ன.

அண்மையில் முல்லைத்தீவு வங்கியொன்றிலிருந்து அதே வங்கியின் கிளிநொச்சிக்கிளைக்கு கணக்கை மாற்ற ஒருவர் முயன்றார். அது பற்றி முல்லைத் தீவுக்கிளையில் கேட்டபோது, கிளிநொச்சி தபாற்கந்தோர் ஊடாக அனுப்பிவிட்டதாக கூறினர். அவர் அப்படிக் கூறியபின் கணக்கை வைத்திருப்பவர் கிளிநொச்சிக் கிளையில் கேட்டால் வரவில்லை என்றார்கள். இப்படியே கிளிநொச்சியும் முல்லைத் தீவுமாக அலைந்த அவர் கிளிநொச்சிக் கிளையில் அதை விசாரிக்கப்புகுந்த போது அங்கு முகாமையில் இருந்தவர் அலட்சியமாக நாங்கள் அனுப்பிற நேரம் அனுப்புவம் வாறநேரம்வரும். நீங்கள்தான் வந்து வந்து பார்க்கவேணும் என்றாராம்.

அவர் இது பற்றிக் கதைக்கும் போது என்ர காசு இவயளட்டப் போட்டிட்டு இப்ப நாய் பேயெண்டு பேச்சுக்கேக்க வேண்டியிருக்கு என்று சலித்தார். உள்ளுக்குள் பலவிதசந்தடி எழுந்தது. பார்த்தால் கொஞ்சம் செல்வாக்குள்ளவர்கள் உள் நுழைந்து சமார்த்தியமாக தமது அலுவல்களை முடித்துவிட்டு வெளியேறிச் சென்றனர். முடியாத அப்பாவிகள் அலைந்தனர். கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ளவங்கள் கூட தமிழ் மக்களைக் கிண்டல் செய்யுமளவுக்கு நாம் தாழ்ந்துவிட்டோமா?

-மாயா-

---



## விசுக்விசுக் விசாலாட்சி

கேட்டியோடா கதைய... ஐயோ அவனாரெண்டாலும், ஊசலாடித் திரிஞ்சா நாமளும் நம்மட கண்ணால பாக்கலாம். பேசிறதக் கேக்கலாம். ஐயோ... என்ர ராசா நீ ஊரூரா ஓடி-சேர்த்த பலகோடி-இண்டைக்கு ஊருவந்து சேரமுன்னம் நீ போனதெங்கயோடி... ஆளான ஆளிருந்து அம்மாவ காத்து நிண்டாய்-இண்டைக்கு ஆலாப் பறந்ததென்ன. அம்மணியத் தான் மறந்தும்... ஆ... அ...

ஒப்பாரி வைச்சுத் தீருறகதையே அ... மாபாவி ஒண்டா ரெண்டா நீ ஊருக்கு செய்ததெல்லாம் என்ன... கிழவி இருந தாப்போல ஒப்பாரிவைக்குதெண்டு பாக்கிறியே... என்னடா செய்ய-இவன் கதிர்காமனை மறக்க முடியேல்லயே.

நான் நினைப்பேன் திடுக்கிடுவேன் நான் நினைவு வந்த நேரமெல்லாம். ஒரு நாள் கூட சனத்துக்கு முன்னால வந்து லெச்சன்கேக்காம மந்திரியா வாழ்ந்த பெருமை இவருக்குமட்டும்தான் உண்டு. மகிந்தர சனாதிபதியாப் போட்டிட்டு அநுராவப் பிரதமராப் போட்டாலுமடா அநுராவுக்கு திருப்தியில்ல. பின்ன இதுக்காக பிள்ளையளப்போல வளர்த்த கட்சித் தொண்டருகளையும் பகைக்கேலாது.

போனமுறை தேர்தல் முடிய, கதிராமரப் பிரதமராக்கிற முடிவு இருந்ததுதானே. ஆனா அவர் தமிழனாப் பிறந்தபாவம் மகிந் தருக்கு அடிச்சது அதிஷ்டம். இப்பவும் பதவியளுக்கு பங்குபோடேக்க அங்கிளமறந்தே போச்சினம். ஆரோ எவரோ, எப்பவோ எடுக்க வேண்டிய முடிவை இப்ப எடுத்துப்போட்டினம். அதுசரி காமாலைக் கண்ணனுக்கு காணுறதெல்லாம் மஞ்சளெண்டு-எங்க சூடு நடந்தாலும் புலியள். அதென்ன புலியளுக்கு ஆருஞ்சுட்டா இனந்தெரியாத நபர். இவயளில ஆரும் பிரண்டா புலியளெண்டு அவ்வளவு சரியாகச் சொல்லுகினம். உதெல்லாம் கேக்க மேய்க்க ஆளில்லாத குணம். ஆர்சுட்ட ஆர்சுட்டதெண்டு அலையிறவைக்கு ஏன் உந்தச் சூடுகளெல்லாம் நடக்குதெண்டு தெரியேல்லையே.

ங... அறப்பேசி உறக்கொள்ளவேணுமெண்டு சும்மாவே சொல்லுற. ஆடிக்கொரு பேச்சு ஆவணிக்கொரு பேச்சு, உந்தப் பேச்சுவார்த்தைய முடிச்சு பிரச்சினையத் தீர்க்க எவள காலஞ்செல்லும். ஒப்பந்த காலத்துக்க பேச்சு வார்த்தைக்கான முயற்சியே நடக்குது. ங... அவை வாற லெச்சனுக்கு... "என்ன வடிவெடுப்போம். காத்தலிங்கசாமியெண்டு!" ஆரோடகூட்டு, ஆரோட பேசிற, ஆராருக்கு பதவியெண்டு தங்கடபாடு. சுனாமியடிச்சும் பத்துமாசமாகப்போகுது. அந்தச் சனத்துக்கு வந்த காசுக்கு முடிவில்லை. ஏதோ ஆத்தில போற தண்ணி அண்ணகுடி தம்பி குடியெண்டு மகிந்தர் ஒருபக்கம் வீரவன்ச ஒருபக்கமெண்டு கூட்டிக் கொண்டே ஒதுக்கியாச்சு.

இனி பொதுக்கட்டமைப்ப சாக்காட்டிப்போட்டமெண்டு ஓலம் வேற-பின்ன கதிராமுவும் தன்ர பக்கத்துக்குக் கொஞ்சந் திரட்டினதுதான். அ.. வந்து சேரமுன்னம் வழியனுப்பி வைச்சினமே... நிக்கப் பதைக்க உப்பிடிச் செய்து போட்டாங்கள்.


புலியளட்ட ஆயுதங்களப் புடுங்கி ஊர்காவல் படையளட்டக் குடுக்கக் கனவு கண்டமனிசன். ஒருதரங்கூட லெச்சனில நில்லாம மூண்டுதரம் மந்திரியா வந்த மகிமை இவருக்குத்தான் இருக்கு. ஒருக்கா ஒரு அமைச்சர், அதுதான் ரத்துவத்தை ஐயா இவரக் கேட்டவர்தானே கெட்டித்தனமிருந்தா இவர் லெச்சனில நிண்டு சனத்திட்ட ஒரு ஆயிரம் வோட்டு வாங்கிப்பாக்கட்டன் எண்டு. ம... யாழ்ப்பாணத்தப் பிடிச்சு உந்த ரவுணுக்க கொடியேத்தின மாமா, அதே புளுகில ஒட்டுசுட்டானுக்கு கொடியேத்த வந்து ஓடினமாமா இண்டைக்கு எங்க? "சப்புமல் குமாரயா" எண்டு வீரப்பதக்கத்த வெண்ட மாமா-இப்ப ஒடுங்கிப்போய் கிடக்க எங்கயோ கிடந்து வந்த தமிழன் கதிராமனுக்கு அடிச்ச யோகம். கையடியில, கமக்கட்டுக்க நிண்டு யோசனை சொன்னது அவர், ஹாயாப் பறந்து வெளிநாடுகளுக்குத் திரிஞ்ச தமிழனுக்கு வெளியுறவு அமைச்சர் பதவி. மருமோளின்ர கட்சி வெல்லவேணுமெண்டு தானே கொல்லவெளிக்கிட்டவை. இப்ப பிலாச்சுளைபோல ரெண்டு மக்களுந்தானும் அவதிப்பட மருமோள் கதிராமனோட கதைபேசித் திரியவோ, அவருக்கும் இப்பதான் கொஞ்சம் ஆறுதல்-மகிந்தர சனாதிபதியாக்கி அநுராவை பிரதமராக்கிறனெண்டு சொன்னாலும் கதிராமருக்கு ஒரு காத்திரமான இடத்தை அக்கா தேடாமவிடமாட்டா.

அப்பிடி ஒண்டு நடந்தாலும் அநுராவ சனாதிபதியாக்கிற அளவுக்கு சனங்கள் விவரங்கெட்டதுகளில்லை. எப்பிடியும் கதிராமருக்கு ஓய்வு குடுத்திட்டா கதிரையள் மிஞ்சும்-அவைக்கும் இப்ப கொஞ்சம் நிம்மதி-எதிர்க்கட்சியில இருந்தாலும் தங்களுக்கெதிரா நாடு நாடாப்போய், நிதிதிரட்டி, பட்டங்களும் வாங்கிவந்து "அம்மாவே தெய்வம் உலகினிலே" எண்டு அபசுரத்தில பாடித் திரிஞ்ச ஊர்க்குருவி, எண்டைக்கு வெளியிலயிருந்து வலசைவாற குருவியளுக்கு பச்சைத் தோட்டத்தை மறக்கவைச்சு நீல மேகத்தையே காட்டினதுதான் வரலாறு. இப்ப தோட்டக்காறருக்கும் கொஞ்சம் மூச்சுவிடலாம்- ஆனா, எங்கயோ தூரத்தில எங்களுக்கெண்டொரு படையும் கொடியும் வச்சிருக்கிற எங்களைப் பாத்து. ஒரு நாட்டுக்குள்ள ரெண்டு இராணுவம் இருக்க முடியாது எண்டதால எங்களுக்கென்ன மனவருத்தம்-இல்லைக்கேக்கிறன்.




# வர்ணம் கலைந்த வானவில்

திருமதி. ரேணுகா செயறூபன்



மனதிற்குள் சராசரியாக ஏதோ நிறம் பிரிபடாத வலி வாரடித்துப் போன நிலமாக வக்கரித்துக் கொல்லித்து ஓய்ந்திருந்தது நெஞ்சு. தெளிவில்லாத ஏதோ உணர்வால் அந்த அதிகாலையின் ஏராளமான குளிரிலும் வியர்த்தது அனுவிற்கு.

எழுந்து சில அடி நடந்து திரும்பி வந்தாள். சவுக்குத் தோப்புக் காற்றில் ஊய்ங்... என்ற ஒருவித விசில் சத்தமிருந்தது. ஒரேயொரு வெள்ளி நட்சத்திரப்பொட்டு. மழைவரலாம். கிழக்கு மூலையிலிருந்து காற்றுக் கலைத்த வேகத்தில் கறுப்பு மேகங்களின் அவசர ஓட்டத்தில் விடிநிலவு நிறமிழந்து போனது. அம்மா அடிக்கடி சொல்லுவா கள்ளன் உறவையும் காலை மப்பையும் நம்பேலாது.

ஓடும் மேகத்தின் அவசர தூறல்களாய் சில மழைப்புள்ளிகள். சீ... சட்டென்று கண்களை மூடிக்கொண்டு முதுகுமடித்து உட்கார்ந்தாள். இடுக்கிய வயிற்றுக்குள் சின்னக் குழந்தை மாதிரி அணைத்த சின்னத் துப்பாக்கி. ரவைப்பட்டியை இளக்கி நகர்த்திவிட்டாள். சில நிமிடங்களுக்குள் இரைச்சலோடு தூரப் போனது மழை. அப்பாடா விடியும் நேரமும் கிட்டத்தில்.

கறுப்பு வர்ணத்தைக் குழைத்துக் குழந்தை வரைந்த சித்திரம் மாதிரி சவுக்குமரத்தின் தலைக்கோடுகள். அனு எழுந்தாள். முகாமில் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் அவரவர் வேலையோடு மூழ்கியிருந்தனர். மும்மரமாய் அனு ஒற்றை ஒற்றையாய் நின்ற மரங்களினூடே நடந்தாள். அவள் வைத்த கலியாண முருங்கை இலைகளேயில்லாமல் ஏர்ாளம் ஏராளமாய் ரத்தப் பூக்கள் பூத்தும் உதிர்ந்தும்... அக்கான்ரை கலியாண நாளன்றைக்கு இந்தத் தடியை நட்டனான். என்ன மாதிரி வளர்ந்து தழைத்து... ஆனால் அக்கா பாவம்...

அம்மா பட்ட கஷ்டம் ம்... அது கொஞ்சமோ நஞ்சமோ "ஐயான்ரை கொடுமை தாங்கேலாமல் நாலு பிள்ளையளோடை அம்மா இரவிரவாக ஓடிவந் தாளே. கனவு மாதிரி ஒரு ஞாபகம் வீட்டை விட்டு வந்த பிறகுமென்ன ஐயா அம்மாவைச் சும்மாவே விட்டவர்.

" எடியே தங்கம் வீட்டை விட்டு வெளியிலை வந்திட்டாய் ஏன் வந்தனியெண்டு எனக்குத் தெரியும். ஓடுகாலி நினைச்சபடி ஆட்டம் போடலாமெண்டு நினைக்காதை வெட்டிப் புதைச்சிட்டுத்தான்ரி மற்றவேலை.

ஒவ்வொரு இரவும் தெரு விழித்துக்கொண்டு இந்தக் கொச்சை களையெல்லாம் கேட்டது. அம்மா நிறைய அழுதாள். பிறகு கண்ணீர் வற்றிப் போட்டுதோ என்னவோ அம்மா அழவில்லை.

அம்மா செய்யாத வேலையெண்டு எது இருந்தது. மா இடிக்க, களைபிடுங்க, நாத்து நட, பழம் ஆய... அரிவுவெட்ட மாய்ஞ்சு மாய்ஞ்சு அம்மா உழைச்சது அஞ்சு வயித்தைக் கழுவியது மட்டும் உண்மை. சாயும் பொழுதில் உலை வைத்துக் காத்திருக்கும் அக்கா. வழமையாக மூலைக் கடையிலை அம்மா வாங்கும் உளுத்த அரிசி, கத்தரிக்காய், சிலநேரம் சூடைக்கருவாடு. அக்கா சமைத்து முடிப்பதற்குள் அம்மா கொஞ்சம் தூங்கி எழுந்து விடுவா. அம்மாவைப் பார்க்கப் பாவமா இருக்கும். ஓடிப்போய் கலியாணம் செய்திட்டா எண்டு உறவுப்பக்கமும் ஒட்டுதலில்லை. அம்மான்ரை ரோஷம் அண்ணன் தம்பியெண்டு யாரோடயும் அண்டவும் விடேல்ல.

அண்ணன் தலையெடுத்துத் தொழில் செய்யிற நேரம் போர். இடப்பெயர்வு... வேற்று இடம அம்மாக்கும் கூலி வேலை கிடைக்கவில்லை. நிவாரண அரிசி உப்புக்கஞ்சி... பலநாள் பட்டினி. விளக்கெரிக்கச் சொட்டு எண்ணெயில் லாமல் பொழுதோடை சாப்பிட்டு பொழுதோடை படுத்தம். அப்பதான் அண்ணா அந்த முடிவுக்கு வந்திருப்பான். அம்மா அழுத போதெல்லாம் அனு இப்படித்தான் தன்னை ஆறுதல்படுத்திக்கொள்வாள் அவனாவது மூன்று வேளையும் சாப்பிடட்டும். ஒழுக்கில்லாத இடமாப் பார்த்து படுக்கட்டும். அந்தச் சிறிய துளியுண்டு மனத்திற்குள். இதைவிட அகலமாக யோசிக்கத் தெரியவில்லை.

அண்ணா போனவன் போனவன்தான் மூன்று வருடங்களுக்குப் பிறகு ஒரேயொரு ரெட்டைப் பக்கக் கடிதம் கைமாறிக் கைமாறிக் கசங்கி பிரிக்க முன்னரே கிழிந்துபோன காகிதமாய் வந்துசேர்ந்தது. அம்மாவும் அவளும் அக்காவும் எத்தனை தரம் படித்திருப்பார்கள். கடைசியாக அழுத கண்ணீரில் அதுவும் குழைபட்டுப் போனது.

தம்பி காணாமல் போனான். ஒரு போர்க்காலத்தில் ஐம்பது கிராம் சீனிக்காகச் சில்லறைகளை எண்ணியபடி தெருவிற்கு வந்த அவனை நாயைப் பிடிப்பது போலப் பிடித்துப் போனார்களாம்... அம்மா அம்மா என்று அவன் அழுதானாம். வைரமுத்து மாமா சொன்னார்.

அப்போதுதான் அனு நிறைய அழுதாள். கிணற்றுக்குள் விழப்போன அம்மாவை கண்ணீரால் இழுத்து வந்தாள். "அம்மா பொறு... பொறு அவசரப்படாதே. இது காலத்தின் கட்டாயம்" பெரிய மனிசி மாதிரி அரசியல். மனம் வெதும்பிய சொற்கள் சுட அம்மா பிரமித்துப் போனது மட்டும் உண்மை. தம்பி இந்தப் பன்னிரெண்டு வயதிலும் அம்மாவின் முந்தானை சூப்பி நீ தூங்கிய நாட்களை முற்றத் துக்கொடி மல்லி கைக்கு எப்போதும் பேய்ப்பட்டம் கட்டும் உனது இரவுகளை வரவு வைத்துக் கொள் செலவுகளை எழுதிக்கொள்வோம். இறுதியாக ஒருநாள் அவனின் காகிதமும் ஒளித்து வந்தது."அம்மா வரும்போது சோத்துக்குள் நஞ்சைப்போட்டுக்கொண்டுவா" அம்மா அழவில்லை.

கடைசியாக அவர்கள் ஊர் பெயர்ந்தபோது ஆண்டு மாறிய ஒரு கடிதம் உருக்கமாகக் கடைசியாக ஒரு வரி. நாளையோ மறுநாளோ தப்பிவிடப் போகிறானாம். தப்பியிருப்பான். எங்கேயிருக் கிறானோ எப்படியிருக் கிறானோ தப்பியிருப்பான் இடையிலே ஒரு வருடம் அனுவும் பள்ளிப் புத்தகங்களை அம்மாவின் கையில் வைத்துவிட்டுத்தான் வந்தாள் அம்மா அழவில்லை அழமாட்டாள்.

இந்தியா அமைதி காத்த ஒரு நாடகம் நடந்ததே. அப்போது ஒருநாள் அர்த்த சாமத்தில் அம்மாவிடம் வந்திருந்தான். நிறையக் களைப்பு அம்மாவின் முகத்தில் ஏகமாய் சந்தோஷம். அக்காவிலும் கூட. உட்காரப் பொழுதில்லை. அண்ணா இப்போது பெரிய பொறுப் பாளராயிருக்கிறார். ஆ... அண்ணா உயிரோடிருக்கிறார். அக்காவுக்கும் கலியாணமாம். மாப்பிள்ளை அண்ணாவின் நண்பர். இன்னும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு போர் வீரனொருவனுக்கான கலியாணமாம் அக்கா வெட்கமாய் சொன்னாள். என்னால வரமுடியுமோ என்னவோ நீ சந்தோஷமாய் இருந்தால் சரி. கொஞ்சம் கண்ணீர் இமை விளிம்பில் பாசத்தின் கனம். இமை விசிறிக் கண்ணீரைச் சிதறவிட்டாள்.

"அனு லேஞ்சியை உருவிக் கண்ணீரை ஒற்றிவிட்டாள். அம்மா அக்கா என்ன நடந்திருக்கும் கலியாணத்திற்கு மூன்றே நாட்களும் சில மணிகளும் மிகுதியாயிருக்க அண்ணாவோடு அத்தானும் வீட்டுக்கு வந்திருந்த போது அம்மாதான் "மோனை கோதம்பமாப் புட்டும்... இறைச்சிக் கறியும் காய்ச்சித்தாறன் கொஞ்சம் பொறுங்கோ என்றாள்." அத்தான் பனை... வரிச்சுக்குள்ளால் விஜியைத் தேடியிருப்பார். அண்ணா காற்றில் வாசனை பார்த்து உட்காரப் போன மணித்துளிக்குள் வீடு சுற்றி வளைக்கப்பட்டது.

சடுதியாகக் காற்றில் வாசனை பிடித்து அத்தான் காதோடு சொல்லத் தப்பிக்கும் அவசரத்தில் அண்ணா எடுத்த முடிவு மின்னல் வேகம். அண்ணா மட்டும் எப்படியோ தப்பி விட்டிருக்கிறான் பொறுப்புகளினால். அத்தான் குப்பிகடித் துச்சாக அம்மா, அக்காவைக் கற்பழித்துக் கொன்றார்களாம் அப்படித்தான் தகவல்.

அண்ணா அவனைத் தெரியாது. தம்பி தப்பியிருப்பான். ம்கும் அவனையும் தெரியாது. அடையாளப்படுத்த முடியாத கால இடைவெளி. ஆனாலும் யாரைப் பார்த்தாலும் கூர்ந்து பார்க்கத் தூண்டியது. அண்ணாவாகவோ தம்பியாகவோ இருந்து அந்த ஆச்சரியம் மட்டும் நடந்து விட்டால்... கடவுளே நான் செத்து முடிவதற்கிடையில்...

இப்போதெல்லாம் தனிமை மட்டும் தேவையா யிருந்தது. வாய்க்காலில் கூழாங்கற்களை ஒன்றொன் றாய் போட்டபடி உட்கார்ந் திருக்கும் தனிமை மல்லாந்து படுத்து வானத்து நடசத்திரங்களைக் கோர்த்துப் பார்க்கும் தனிமை சாப்பாட்டுத் தட்டோடு மரத்தடி தேடி ஒதுங்கியிருக்கும் தனிமை.

போர் உக்கிர மடைந்திருந்தது புதிது புதிதாகப் போராளிகள் இணைந்துகொண்டிருந்த நேரம் நாளும் நாளும் சண்டைகள். வெற்றிகள் தோல்விகள் கனதியான இழப்புக்கள். அடிக்கடி முகாம் இடம் மாறும். ஓய்வேயில்லாத ஓட்டம். நித்திரையேயில்லாத இமைகள். கூட இருந்தவர் களை ஒன்றொன்றாகக் காவு கொடுத்துக்கொண்டிருந்த பட்டியல், பார்த்துச் சிரித்தபடி போராடச் சென்றவர்கள் திரும்பி வராமல் போன கனமாக நாட்கள். அதற்காக அழ முடியாத மறுநாளுக் கான அவசரப்பட்டியல்.

இறுதியாக ஒருநாள் ஒட்டப்பட்ட வெள்ளைத் தாளின் இறுதியில் அனு. வெகுநாளைக்குப் பிறகு நெஞ்சு லேசாகிச் சிரிப்பு வந்தது. அமைதியாக அவசரமேயில்லாமல் நிதானமாக ஒன்றொன்றாகச் செய்து முடித்தாள். கறுப்பு டயரி பிரித்து கவிதையாய் சில வார்த்தைகள் எழுதி முடித்தாள். இரைச்சலோடு புறப்பட்ட வாகனத்தில் கடைசியாகப் பந்து போலத் துள்ளியேறிய அவனைக் காரணமில்லாமல் மீண்டும் மீண்டும் பார்த்தாள்.

இரவு அத்தனை போராளிகள் கூடியிருந்தாலும் சுத்தமான அமைதி. பனைவெட்டையின் சின்னத்திடல் அவசரமில்லாத சண்டைக்கு முந்திய இரவுச் சாப்பாடு முடிய இறுதி விபரங்கள் வழங்கப்பட்டு நிலவைப் பார்த்து நேரம் சொல்லி வாழ்த்தும் சொல்லி வழிவிட்டுப்போனானே ... ஒரு காலைக்கொஞ்சம் விந்தியபடி... ஏதோ ஈர்ப்போடு பார்த்தாள்.

அனு... மற்றைய நாட்பகல் முடிந்த பிறகு தேடிப்பார்த்ததில் கணக்கீட்டில் இடைவெளி கண்ட ஐந்து போராளிகளில் ஒருத்தியாக பகைக்குடிலுக்குள் எடுத்துக் கொள்ள முடியாத எட்டத்தில் மார்போடு மண் அணைத்தபடி மிக அருகில்... அவளின் அந்தத் தம்பி. கடைசிவரை சேர்ந்து நின்ற அக்காவும் தம்பியும் அந்த உறவை அறியாமலே நிகழ்ந்துவிட்ட மரணங்கள்.

நாளையப் போர் நிச்சயம் இவர்களை மீட்பதற்காக நடக்கும். தூரத்து வடலி வெட்டைக் குள் மீண்டும் ஒரு ஒன்று கூடல் சிலரை இறந்த பிறகு. இப்போது கூட கோலை ஊன்றியபடி ஒருகாலை விந்தியபடி அவன் கொஞ்சம் கவலையோடு ஒவ்வொரு வராய் உன்னிப்பாய் பார்த்தபடி... இரு உதிரச் சொட்டுக்கள் உயிரோடு இல்லை. ஒரு வேளை இந்தப் போரின் முடிவில் அவர்கள் திரும்பியிருந்தால் அவன் நிச்சயமாக அவர்களுக்காகக் காத்திருப்பான் இப்போது அவனே தளபதியாக தலைமையேற்று.......

# துளித்துளியாய்...

ஆவரங்கால் சுதன்



## ஏவல் கேட்டு...

ஆரம்பத்திலேயே நன்கு திட்டமிட்டு பசளையிட்டு நட்ட சர்க்கரைப்பூசணி முளைவிட்டு புதிய மூச்சுடன் கிசு கிசுவென கிளர்ந்து நான்கு பக்கங்களிலும் புல் பூண்டுகளின் மீதெல்லாம் ஏறி அமர்த்தி கிளை வீசி படர்ந்திற்று.

பூசணிக்கொடியின் மதாளிப்பிலும், வளர்ச்சியிலும் பக்கத்துக் காணியில் இருந்த ஈஞ்சுக்கு எரிச்சல், பகைமை.

நிமிர்ந்து நிற்கும் தன்னிடம் கூரிய முட்கள் இருந்தாலும் படர்ந்துசெல்லும் பூசணிக்கொடியை நசுக்க நெருஞ்சிதான் உகந்தது எனக் கருதிற்று ஈஞ்சு. எப்படியாவது சிதைத்து நலிவுறச் செய்ய வேணுமெனக் கங்கணம் கட்டியது.

தானும் தன்பாடும் என தெற்கு வரம்பிலிருந்த நெருஞ்சியை வசப்படுத்திக்கொண்டு தண்டிற்குத் தண்டு உன்னில் இருக்கும் கொடிய முட்களைப் பயன்படுத்தி பூசணிக் கொடியின் கணுக்களை, பூக்கள், பிஞ்சுகளையெல்லாம் கீறிக்காயப்படுத்து என்றது ஈஞ்சு.

ஈஞ்சினது வார்த்தை ஜாலங்களில் மயங்கி உடுக்கின் ஓசைக்கு ஆடும் கலையாடிபோல உருக்கொண்டது நெருஞ்சி.

பூசணிக்கொடியின் மேல் தாவி பூக்களையும், பிஞ்சுகளையும் கீறிக் கீறி காயப்படுத்திற்று. தண்டுகளை பிறாண்டி நசுக்க முயற்சித்தது.

நெருஞ்சி காயப்படுத்தக் காயப்படுத்த மூர்க்கமாய் பெருத்த பூசணிக்காய்களின் கீழ் அகப்பட்ட நெருஞ்சிகளின் கூர் மழுங்கி விழிபிதுங்கி பரிதாபமாய் தவித்தன நெருஞ்சிகள்.

இதனை அவதானித்த வெண்டித் தோட்டத்திலிருந்த கொண்டைக்குருவி இவ்வாறு கூறிற்று.

"அடுத்தவன் சொல்கேட்டு கெடுக்க நினைப்பான் மிடுக்கையும் இழந்து நடக்க தவிப்பான்"



## மயில் தலைகளின் திமிர்...

ஹாய்... அனுசியா...

ஹலோ... ரம்மியா எங்கை இஞ்சை.

என்ன இப்பிடிக் கேக்கிறாய், சந்தைக்கு வந்தனான். எப்பிடி சுகமாய் இருகிறியே?

ம்... சுகத்துக்கு என்ன.

என்னடி கலியாணம் முடிஞ்சுதாமெண்டு கேள்விப்பட்டன் ஏன் எனக்குச் சொல்லல?

ஐயோ! ரம்மி அது... வந்து... திடீரெண்டு ஒரு பட்டதாரியாய் கிடைச்சாப்பிறகு டப்பெண்டு கலியாணம் முடிஞ்சுது.

அப்ப "கஸ்பென்ற்" எங்க "வேக்" பண்றார்?

இன்னும் வேலை கிடைக்கல இப்ப பட்டம் மட்டும்தான்.

காசு மட்டும் 31 லட்சம் தந்ததெண்டு கேள்விப்பட்டன் உண்மையோ?


ஓமடி என்ர வயசுக்கு தந்தவர் அப்பா.

இஞ்சை கிட்டவா காதுக்க சொல்லுறன்.

இன்னும் கொஞ்சக்காலம் இருந்து நாப்பது வயசில முடிச்சிருக்கலாமே

...!??

## "சின்னத்திரை வசியம்"



தேவகி... கடுமையாப் பசிக்குதப்பா. கால் மேல் கழுவிப்போட்டு வாறன் சாப்பாட்டைப் போடப்பா.

எனக்குத் தொந்தரவு தராமல் போட்டுச்சாப்பிடுங்கோ. எனக்கு நேரமில்லை. நான் இஞ்ச மணியக்காவோட முக்கியமான அலுவல் கதைச்சுக்கொண்டிருக்கிறன்.

அதென்னப்பா எனக்குச் சாப்பாடும் தராம அவசரமான கதை?

"கணவருக்காக" தொடர்ல நடிக்கிற சந்தியா பற்றியும் "கோலங்கள்" தொடர்ல வாற அபி பற்றியும் மிகவும் சீரியசாகக் கதைக்கிறமப்பா.

## படித்ததில் பிடித்தது

தமிழில்:- றஜித்
ஆங்கிலத்தில்:- மெகாசால்மன்

விண்ணுக்கும் மண்ணுக்கும்
பிரயாணப்படும் நீருக்கோர் இடமில்லை
தாயோடு உறவாடி யமனோடு
விளையாடும் வாழ்க்கைக்கு நிலையில்லை.

மண்ணோடு மக்கிய
மடபிணத்திற்கும் உயிரில்லை
உழைப்போடு உருகிய
ஏழைக்கோ வாழ்வில்லை.

கள்ளம் இல்லை~பிள்ளை
நெஞ்சுக்குள் கபடமில்லை
கல்நெஞ்சக் கயவர்
கூட்டத்திற்கிங்கே பஞ்சமில்லை
மன்னிக்கவேண்டும்
மனித சமுதாயத்திலேனோ நியாயமேயில்லை.

# எங்கள் முகவரி

ஆழப்பதிந்தும்
குருதித் துணிக்கைகளால்
நிரம்பப் பெற்றதுமான
பாதச் சுவடுகளில்
முகவரி தந்தவரைத் தேடுகின்றேன்.

நீண்ட வரிசையாய்
விதைக்கப்பட்டவர்
விதைத் தொட்டில்களில்
முகவரி தந்தவரைத் தேடுகின்றேன்.

ஆகாயம் தொட நீளும்
அழகிய வீட்டுத்தொடரில்லை....
பூக்கள் தூவியே
வாசனை பரப்பிய
அரச மஞ்சத்திலுமல்ல....
பல நூறு படையல்
புசித்து மகிழும் தட்டிலுமல்ல
இவை எங்கனுமல்ல
எதிலுமல்ல இவர்களது ஜீவிதம்.

முட்களின் நடுவே
கரடு முரடு பாதையிலே
தோள் தனில் பாரச்சுமையுடனே.
ஆறாய்ப் பெருக்கெடுத்த
வியர்வைக் குளிப்புடனேயே.
குருதி வழியும்
புண் சுமந்த மேனியுடனேயே.
இவர்களது ஜீவிதம்.
இவர்களது கனவும்
அதை எண்ணியே விரிந்தது.

அப்படியாயின் இவர்கள்
பாவப் பிறவிகளா?
முகவரியே அற்றவரா?
தொண்டாற்றவே பிறந்தவரா?
இல்லை இல்லை
தமிழ் எனும் முகவரிக்கே
முழுவடிவம் தந்தவர் இவர்.
எங்கள் ஆதி முதல்வன்
அடியொற்றியே வாழ்ந்து
வரலாற்றைப் பரிசாகப் பெற்றவர்.
"தமிழுக்கு நிமிர்வும்"
முழுவடிவமும்
இவராலே கிடைத்தது.
தமிழெனும் அமுதை
உயிரீய்ந்து செதுக்கிய
சுதந்திரச் சிற்பிகள் இவர்கள்.

மென்னா

# தமிழனை தொட்டுப்பார் உயிரை விட்டுப்பார்!

சர்வ சாதாரண பிறவி
தமிழன் என்று
கர்வம் கொள்ளாதே
பகைவனே...
அப்பாவிகள் ரத்தம் குடித்ததால்
சண்டியன் ஆனவன் நீ.

துப்பாக்கி தொடாத
தன் கைகளால்
சோறள்ளித் தின்னாதவன் தமிழன்.
பகையே
தெரியுமா உனக்கு?

ரொட்டி சுடத் தெரியாத
தமிழிச்சிக்கும்
துப்பாக்கி தூக்கிச் சுடத் தெரியும்.

எங்கள் பிள்ளைகள்
கணக்குக் கற்றதெல்லாம்
எதிரிகள் சடலங்கள்
எண்ணித் தான்.

போருக்குள் வாழ மட்டுமல்ல
போர் கொண்டு வருவோரைப்
பந்தாடவும் கற்றுள்ளோம்.

இப்போ...
இனுவில் உங்கள்
கண்ணில் மட்டுமல்ல
கனவிலும் தெரியும்
தமிழனைத் தொட்டுப்பார்.
உயிரை விட்டுப்பார்.
இது முடிவுரையல்ல
இறுதி வெற்றிக்கான
எங்கள் எழுச்சிக்கான
முகவுரை....

காக்கிச் சட்டைக்கு
அஞ்சி நடுங்கிய
அன்றைய தமிழன் பாண்துண்டு.
இன்றைய தமிழன் வெடிகுண்டு.

பகையே உனக்கு
இப்போ விளங்கியிருக்கும்
புண்ணாக்குத் தின்னும்
மாடுகளல்ல...
புலிப்பால் குடிக்கும்
பூனைகள் தமிழர் என்று.


வேலணையூர் சுரேஸ்

# வீடு

# அன்பு காட்டுங்கள்..!

**உலகத்தை முழுமையாக அறியாத சிறிய குழந்தை தொடக் கம் முதியவர்கள் வரை விரும் புவது மற்றவர் களிடமுள்ள அன்பையே**

மனிதர்களின் மனங்கள் பலவகைக் கோணங்களைக் கொண்டன. ஆனால் எல்லோரும் நாடுவது அன்பு என்ற ஒன்றையே. நண்பர்களிடையேயான அன்பு, கணவன் மனைவியிடையேயான அன்பு, பெற்றோர் பிள்ளைகளிடையே யான அன்பு இப்படியே ஒரு மனத் திற்கும் இன்னொரு மனத்திற்கும் எல்லோரும் விரும்புவது அன்பு வைக்கிற உறவையே.



உறவுகளுக்கு ஏற்றவாறும் அன்பின் தன்மைக்கேற்றவாறும் பல வகையில் சொல்வார்கள். ஒருவர் இன்னொருவரிடம் அன்பான வார்த்தை களையே எதிர்பார்ப்பார். கடும் சொற் களால் கடுமையான முறையில் உரையாடினால் உடனே மனம் உடைந்து விடுவார்கள். அவர்களில் வெறுப்பும் கொள்வார்கள். ஒரு வன் துன்பப்படும் போது ஒன்றை மட்டுமே எதிர்பார்ப் பான். அன்பான அரவணைப்பையே.

சில பேர் சொல்லுவார்கள் அன்பிற்கு அடிபணிவேன் அதிகாரத் திற்கு இடம்கொடேன் என்று. யதார்த்த நிலையும் அப்படித்தான் உள்ளது. வேலைத்தளங்களில் சில ரிற்கு பணிச்சுமை கூடுவது வழமை. இன்னொரு பணியாளரிடம் கடுமை யாகக் கேட்டால் போதும் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு போய் விடுவார்கள். அதே உதவியை பணி வாக அன்பு கனிந்த குரலில் கேட்டால் மறுக்கக்கூடியதையும் மறுக்காமல் செய்துகொடுப்பர். சிறிய வயதுடைய பிள்ளைகளை அன்பாகக் கண்டித் தால் திருந்திக்கொள்வார்கள். கடுமை யாக நடந்துகொண்டால் எதிர்மாறாக செய்வதுடன் எம்மீது தம் மனதில் வெறுப பையே காட்டுவார்கள்.

உலகத்தை முழுமையாக அறியாத சிறிய குழந்தை தொடக் கம் முதியவர்கள் வரை விரும் புவது மற்றவர் களிடமுள்ள அன்பையே. அன்பு ஒரு சிறந்த ஆயு தம். அன்பான முறை யில் எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகுபவர்கள் காரியங் களை இலகுவாகச் செய்து விடுவார்கள். அத்தோடு எல்லோருடைய மனங் களிலும் இடம்பிடித்துவிடுவார்கள். அதைத் தவிர்த்து எதற்கெடுத்தாலும் கடிந்துகொண்டால் அவர்களை எவரும் நாடமாட்டார்கள். அத்தோடு அழகான பட்டமும் (சுடுதண்ணியடா) சூட்டி விடுவார்கள். ஆகவே அன்பைக் காட்டுங்கள். வாழ்வில் மலர்ச்சியே என்றென்றும்.

**பா.கஸ்தூரி**



நாம் எவ்வளவுதான் திறமைசாலி களாய் இருந்தபோதும் எம்முடைய வாழ்க்கை யில் ஏற்படும் துன்பங்கள், தோல்விகள் என்பவற்றுக்கான காரணத்தை ஆராயும் மனப்பக்குவத்தை இழந்துவிடுகின்றோம்.

இவ்விடயத்திற்கான தீர்வை எடுப்ப தற்கு முன்பு நாம் சில மணித்தியாலங்கள் தனிமையில் இருந்து கடந்தகால வாழ்க்கை யையும் இத்தோல்வி ஏற்பட்டதற்கான வழிவகைகளையும், நாம் இதற்கு ஏன் இடம் அளித்தோம் என்பதனையும் நன்கு சிந்திக்க வேண்டும்.

நாம் வாழும் வாழ்க்கை வாழ்வதற்கு. நாம் இறக்கும் போது ஒரு சாதனையா ளராகவோ அல்லது இந்த மண்ணில் வாழ்ந்த தற்கான வரலாறு உள்ளவர்களாக வாழ வேண்டும். இதனை விட்டு "கானல் நீராய்" வாழுவதைவிட்டு எமது வாழ்வை அர்த்தமுள்ள வாழ்வாக மாற்ற வேண்டும்.

எமக்கு ஏற்படும் இழப்புக்களைக் கண்டு துவண்டுவிடக்கூடாது. பெரியவர்கள்

*எமக்கு ஏற்படும் இழப்புக்களைக் கண்டு துவண்டு விடக்கூடாது.*

# முயற்சி செய்யுங்கள்..!

சொல்லும் அறிவுரைகளைக் கேட்டும், நல்வழிப படுத்தப்பட்டவர்களைப் பார்த்தும் நாம் அதன்படி நடக்கவேண்டும்.

நாம் எமது வாழ்வில் சில தவறுகளை விட்டிருக்கலாம். அதனை நினைத்து மனம் நொந்து போய் முடங்கிவிடக்கூடாது. "தவறு களை அனுபவங்களாகக்கொண்டு திருந்திக் கொள்பவன்தான் முழுமனிதன் ஆகின்றான்"

எனவே எமக்கு யார் தெளிந்த நீரோ டையைக் காட்டுகின்றார்களோ அவர்களின் ஆலோசனைகளை மதிக்கலாம்.

நாம் பயணிக்கும் பாதையில் பல முட்கள் குத்தலாம். அதற்காக பாதைகளை மாற்றமுடியாது. பாதையில் இருக்கும் முட்களை அகற்றலாம்.

எனவே நாம் ஒவ்வொருவரும் எமக்கு ஏற்பட்ட துன்ப துயரம், நாம் விட்ட தவறுகள், இதனால் எமக்கு பெரியோர்கள் யாரும் ஏசியிருந்தால் அவற்றையெல்லாம் மறந்து மனதை ஒருநிலைப்படுத்தி மனதை தூய்மையாக்குவோம்.

தூய்மையாக்கிய மனதைக்கொண்டு வாழ்க்கை என்னும் ஏணிப்படியில் கால் பதித்து வளமான வாழ்வைப் பெற மீண்டும் மீண்டும் முயற்சி செய்வோம். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"

**த.செந்தமிழ்**



# திட்டமிடுங்கள்..!

மனித செயற்பாட்டிற்கு திட்டமிடலென்பது முக்கியப்படுத்தல் வேண்டும். எவ்வேலைகளா யிருந்தாலும், திட்டமிட்டுச் செய்வதன்மூலம் சிறந்த பயனை பெற்றுக்கொள்ளமுடியும். சிலவேலைத் திட்டங்களை நீ செய்கையில், முடங்கிப் போகின் றாய். சில வேளைகளில் அதனைக் தோல்விகளாய் மட்டும் ஏற்றுக்கொண்டு அடுத்த படியில் ஏறுவதா? அல்ல அடுத்தபடியில் இறங்குவதா? என ஓர் படியில் நின்று தவிப்பது நிலையாகிவிட்டதென்பதுதான் உண்மை.

**மனிதா! எதனை நீ செய்ய முற்படுகின்றாய் அதனைபற்றி நீயே திட்டமிட்டுக் கொள்!**

இவ்வாறு திட்டமிட்டுக் கொண்டு செயற்படு வாயின் வேலைப்பளுவினைப் போக்கி சிக்கனம், விரைவு என்று பல்வேறுபட்டவை மேற்கொள்வாய். திட்டமிட்டுக் கொள்ளாது நடக்கின்றபோது கஷ்டம், நஷ்டம் ஏற்பட வாய்ப்புண்டு. இதன் மூலம் நீ மனதை முடக்கி விடுவாய். எத்தனை சுமைகள் ஏற்படுவதற்கு திட்டமிடல் கூட ஓர் காரணமாகலாம்! இலக்குகளை அடைவதற்கு திட்டமிடல் கொள்வதுதான் முக்கியம். இல்லையாயின் கடலில் துடுப்பில்லாத படகுபோல் காற்றடிக்கும் திசையெங்கனும் நீ செல்வாய். வாழ்க்கை யின் இலக்கை அடை வதற்கு நீயே திட்ட மிட்டுப் பயணிக்க வேண்டும்.

தோல்வி களை ஓர்பாட மாகக் கொண்டு அடுத்த படியாய் உன் ஆரம்பமுனையில் திட்டமிடலை மேற்கொள். காலம் காலமாய் உன்னில் சுமைகள் ஏற்படுவதற்கு உன் சரியான திட்டமிடல் இல்லாது இருக்கலாம். தவறுகள் மனித வாழ்வியலில் பிழையல்ல பிழைகளை தினம் பின்னிவைத்துக் கொள்ளாதிருப்பதால் தான் உன்னில் பிறக்காதிருக்கின்றது சந்தோஷங்கள். சிலவேளைகளில் நீயே நினைப்பாய் இப்பாரினிலே பிறப்பெடுத்ததே? பிழையானதென்று. பின்னர் நான் விடும் பிழைகளை ஏன் மாற்றீடு செய்ய வேண்டும். இந்நோக்கு உன்னில் வேண்டாம். மனிதா உன் வாழ்வு நடுக்கடலில் தத்தளிக்கும் படகுபோல் தானுள்ளது. கரையை அடைய நீயே எதிர் நீச்சல் போட வேண்டும்.

**"வறுமையுன் வாழ்வின் முனையில வாழ்வதற்காய் நீயே போராடு!**

உன்னில் இறுகப் படிந் திருக்கும் கஷ்டங்களை சிறுதுளி யேனும் அலசி ஆராய்ச்சி செய்! உன்னில் அவ்வப்போது பிறக்கும் ஓர் திட்டம். அதனை மனதில் வைத் துக்கொள்ளாது அதனை முன் னெடுத்துச் செல். நாளும் நல்ல திட்டம்செய். அதனை செயல் திட்டம் செய்து நடைபோடு திடமாய்த் தினமும்.

**எஸ். மதீஸ்**

## கடலைப்பருப்பு சுசியம்




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| கடலைப் பருப்பு | -500கிராம் |
| சீனி | -200கிராம் |
| தேங்காய் | -1/2 பாதி |
| கோதுமை மா | -250கிராம் |
| ஏலப்பொடி | -அளவாக |
| உப்புத்தூள் | -அளவாக |
| மஞ்சள்தூள் | -அளவாக |
| தே.எண்ணெய் | -1போத்தல் |
| தண்ணீர் | -2கப் |

**செய்முறை:-**

★கடலைப் பருப்பை ஊறவைத்து அவித்து ஈரலிப்பு இல்லாது சுண்டவிட்டு அகப்பையால் மசித்துக்கொள்ளவும்.

★தேங்காய்ப் பூ, சீனி, ஏலப்பொடி இவற்றைக் கலந்து அளவாக உப்பையும் சேர்த்துக் குழைத்து சிறு உருண்டையாகப் (தேசிக்காய் அளவு) பிடித்துக் கொள்ளவும்.

★மாவுடன் உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து தண்ணீர்விட்டு ஓரளவு இறுக்க மானதாகக் கரைத்து அதில் உருண்டைகளைத் தோய்த்துக் கொதித்த எண்ணெய்யிற் பொரித்து எடுக்கவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்க ங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—61

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

## சொற்சிலம்பம் - 100

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | பி | ட | டு | ன | தூ | பூ |
| மா | கு | ல் | பா | ந் | மி | ல |
| க | ரி | த | ரோ | னி | ண் | வ |
| ஜெ | னா | ப | லி | னை | சீ | இ |
| ம | ட் | தா | ஷி | ர் | லி | கே |
| ற் | ர் | ய | க் | ஸ் | க | வு |
| ங் | வ | கே | ன் | கி | த் | ஷி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -98 இன் விடைகள்

01. டிஸ்கவரி.

02. வவுனியா.

### சொற்சிலம்பம் - 98 இன் பரிசுக்குரியவர்

லி.சுஜன்,
மு/பாலிநகர் ம.வி,
வவுனிக்குளம்,

### சொற்சிலம்பம் - 98 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. இ.குயின்சலா, கிளி/பூ.மகாவித்தியாலயம், பூநகரி.
02. அ.துவாரகன், யா/சாவகச்சேரி, இந்துக்கல்லூரி.
03. ஜெ.நிறோஜனா, தரம்-6A, மு/உடையார்கட்டு ம.வி.
04. க.கபதரன், தரம்-3A, மு/சிவநகர் தமிழ், வித்தியாலயம், புதுக்குடியிருப்பு.
05. வ.யுதர்சன், மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.
06. செ.நிவதாந் தரம்-4B, பாண்டியன்குளம் ம.வி.
07. பி.நிதுலா தரம்-5C, மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு.
08. ம.குமுதன், பண்டாரிக்குளம், வவுனியா.

01. அண்மையில் நடந்த முக்கோண தொடர் கிரிகெட் போட்டியின் தொடர் ஆட்ட நாயகன்?

01) ......................................

02. மைக்ரோசொப் நிறுவனத்தின் உரிமையாளர்?

01) ......................................

சொற்சிலம்பம்-100
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ......................................

முகவரி :- ......................................

......................................

......................................

## நகைச்சுவை



"குரைக்கிற நாய் கடிக்காது. ஏன் தெரியுமா?"
"தெரியலையே!"
"ரெண்டு வேலையையும் ஒரேநேரத்தில அதால செய்யமுடியாது!"




## கடல் வெளவால்



வெளவால்களின் பறக்கும் பாலூட்டிகள் என்பது தெரியும். நிலவுலகின் விசித்திரப் பிறவி இது. இதேபோல் நீருலகிலும் ஒரு வெளவால் இருக்கிறது. ஆனால் இது பாலூட்டி அல்ல. ஒருவகை மீன். இந்த மீனிற்கு வெளவால் மீன் என்று பெயர். கடல் வெளவால் என்றும் குறிப்பிடுவதுண்டு. கடலில் நீந்தும் போது வெளவால்கள் போல் தோற்றமளிப்பதால் இதற்கு இந்தப் பெயர்.

தூண்டில் மீன் வகைகளில் ஒன்றான இது 20 முதல் 30 செ.மீ. நீளம் வரை வளரக் கூடியது. வெப்ப நீரோட்டங்களிலும் குறிப்பாக வட அட்லாண்டிக் கடலிலும் இது காணப்படும். இது லோபி.:.போர்மெஸ் வரிசையில் ஓகோகெபாலிடே குடும்பத்தைச்சேர்ந்தது.

இதன் அகன்ற முதுகுப் பரப்பில் எலும்புப் புடைப்புகள் அடர்ந்திருக்கும். தன்னை இரை வேட்டையாட வரும் பிராணிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள அமைந்த கவசம்இது. உடலின் இருபுறங்களிலும் மார்புப் பகுதி அல்லது பக்கவாட்டில் அகன்ற தசைத் துருத்திகள் உள்ளன. அதில் துடுப்புப் போன்ற அமைப்புக்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துடுப்புகளைப் பின்னங்கால்களாகவும் வயிற்றுப் புறத்திலுள்ள சிறிய துடுப்புக்களை முன்னங்கால்களாகவும் இது பயன்படுத்துகிறது.

கடலின் தரைப்பரப்பில் நடந்தோ அல்லது தவளைகளைப் போலத் தாவித் தாவியோ செல்லும். இதன் சில இனங்களின் முன் தலைப்பகுதி துருக்கிக் கொண்டு தொப்பி போல் அமைந்திருக்கும் . சிலவகைகளின் மூக்குப் பகுதி சப்பையாக இருக்கும். அவற்றைச் சப்பை மூக்கு வெளவால் மீன் என்பார்கள். இதன் தொப்பி போன்ற பகுதியிலிருந்து சிறிய பற்றிழை துருத்திக் கொண்டிருக்கும். இந்தப் பற்றிழையைத்தான் இரை பிடிக்கும் தூண்டிலாக இது பயன்படுத்துகிறது.

## விடுகதைகளும் விடைகளும்

01. வாலுள்ளவன்; காற்றுக்குப் பறப்பான். அவன் யார்?


02. வாழ்நாள் முழுக்க வாயைத் திறந்தபடியே இருப்பான் அவன் யார்?

03. உயிரில்லா மனிதன் தொட்டாலும் விட்டாலும் பிடிக்கிறான் அது என்ன?


04. பட்டப் பகல் கடல் கொள்ளையன் உடல் குளிர்ந்தால் ஊரெல்லாம் நீர் தெளிப்பான் அவன் யார்.

விடைகள்
01.பட்டம்
02.தபால்பெட்டி
03.முட்கம்பி
04.மேகம்

## வரைந்து பழகுங்கள்



## விலங்குகளின் விவசாயம்




(முற்றும்)

# ஈழத்தமிழர் பண்பாட்டடையாளம்

பேராசிரியர் பொ.ரகுபதி

(கடந்தவாரத் தொடர்ச்சி...)

'தமிழ் கூறும் நல்லுலகு' என்ற அடையாளத்தினுள் ஈழத் தமிழர் உள்ளடங்கியிருந்தனரா என்பது ஆராயப்படவேண்டியது. இருப்பினும், இலங்கையின் முதல் எழுத் தாதாரங்களான பிராமிக் கல்வெட்டுக்களின் காலத்திலிருந்து மொழி சார்ந்த அடையாளத்தால் ஈழத்தமிழர் இனங்காணப்பட்டுள்ளனர். இலங்கையில் தமிழர் பண்பாட்டின் தொன்மை. பற்றி இங்கு நான் குறிப்பிட வேண்டியதில்லை. அது அறியப்பட்ட விடயம். ஆயினும் ஈழத்தமிழர் தம் அடையாளத்தை வெளிப்படுத்திய

***ஈழத்தமிழ் பண்பாட்டு அடையாளம் இன்று எதிர்நோக்கும் பெருஞ்சவாலொன்று உண்டு, ஈழத்தமிழர் தம் தாயகம் விட்டு உலகளாவிப் பரந்திருக்கையில் எவ்விதமாக, எவ்வகையான, பண்பாட்டு அடையாளத்தைப் பேணப்போகிறார்கள் என்பதே அந்தக் கேள்வி.***

சந்தர்ப்பங்களில் அந்த அடையாளத்தின் மையக்கரு காலத்திற்குக் காலம் மாறியிருப்பதைக் காணலாம்.

நாகதீவு, நாகநாடு போன்ற தொல் இன- பிரதேச அடையாளங்களில் இருந்து யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் அடையாளத்தின் முனைப்பு சைவசமயத்திற்கும் சாதிக்கும் மாறியதை ஈழத்து தமிழ் வரலாற்றியல் இலக்கியங்களால் அறிந்துகொள்ளலாம். காலனித்துவ காலத்தில், கிறிஸ்தவத்திற்கெதிரான சைவம் அடையாளத்துக்குக் கருப்பொருளானது. அதுவரை சைவத்திற்கு முதலிடம் கொடுத்த நாவலரே தமிழை முன்னிறுத்தி, ஈழத்தமிழர் அடையாளத்தை நிறுவ வேண்டிய சந்தர்ப்பமும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் ஏற்பட்டது. நாவலர் இந்த அடையாளத்தை சிங்கள- பௌத்தருக்கெதிராக முன்வைக்கவில்லை தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கெதிராகவே முன்வைத்தார் என்பதை முக்கியமாக இங்கு குறிப்பிடவேண்டும்.

தமிழ் நூற்பதிப்புத் தொடர்பான முரண்பாடுகளின்போது, வீராசாமி முதலியாருக்கு நாவலர் எழுதிய கண்டனமொன்றிலேயே 'ஓஹோ யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலை

***இன்றைய காலம் வேறு. சனத்தொகையில் பெரும்பான்மையை வெளியே அனுப்பிவிட்டுச் சிறுபான்மை உள்ளூரில் இருப்பது முன்னெப்போதும் நடவாத விடயம். முன்போலல்லாது இன்று மாறியுள்ள உலகச் சூழலில் புலம் பெயர்ந்தோரை ஏற்றுக்கொண்ட பெரும்பாலான நாடுகள் அவர்களைத் தம்முடன் கரைந்துபோகும்படி சொல்லவில்லை. மாறாக, தங்கள் தங்கள் பண்பாட்டு அடையாளங்களைப்பேணி, நிறுவிக்கொண்டு வாழும்படி சொல்கிறார்கள்.***

யேனுஞ் செய்திராத தேசம் எனறீரே' என்று தொடங்கி, யாழ்ப்பாணம் தனக்கெனத் தனிப் பாரம்பரியமுள்ள தமிழ்த்தேசம் என்ற கருத்தை நாவலர் எழுதவேண்டி வந்தது. சிங்கள- பௌத்தத்திற்கெதிரான தமிழ் அடையாளம் இருபதாம் நூற்றாண்டு வரலாறு. ஈழத்தமிழரது தமிழ்த் தேசியமும் தமிழ் இன அடையாளமும் சிங்கள-பௌத்தத்திற் கெதிராகத் தோன்றியமையும் வளர்ந்தமையும் பற்றிச் சில சிறந்த புத்தகங்கள் அண்மைக் காலங்களில் வெளிவந்துள்ளன. ஆனால் இதன் மறுபக்கம் ஈழத்தமிழ் அடையாளம், தமிழ்நாட்டுத் தமிழ் அடையாளத்திலருந்து எப்படி வேறுபட்டதென்பது- இன்னும் சரிவர ஆராயப்படவில்லை.

புவியியற் பிரிவு, பிராமணிய மேலாதிக்கமற்ற சமூகம், நிலவுடைமைக்குச் சமமான கடல்சார் வணிகப் பொருளாதாரப் பாரம்பரியம், அதுதொடர்பான சமூக, சாதி அமைப்பு, மொழிவழக்கு வேறுபாடு, ஐந்நூறு ஆண்டுகாலத் தொடர்ச்சியான பல்காலனித்துவப் பாரம்பரியம்- இவற்றால், ஈழத்தமிழர் இந்தியத் தமிழரிலிருந்து வேறுபட்ட அடையாளமொன்றை உடையவர்கள். பண்பாட்டு அடையாளம் என்ற கருத்தும் பதமும் இதை விளக்குவதற்கு வசதியானது. கடந்த சிலதசாப்த அரசியல் சூழலில் ஈழத்தமிழர் பண்பாட்டு அடையாளத்தின் இந்தத் தனித்துவம் மேலும் வலுவடைந்திருப்பதாகவே தோன்றுகின்றது.

ஈழத்தமிழ் பண்பாட்டு அடையாளம் இன்று எதிர்நோக்கும் பெருஞ்சவாலொன்று உண்டு, ஈழத்தமிழர் தம் தாயகம் விட்டு உலகளாவிப் பரந்திருக்கையில் எவ்விதமாக, எவ்வகையான, பண்பாட்டு அடையாளத்தைப் பேணப்போகிறார்கள் என்பதே அந்தக் கேள்வி. புலம்பெயர்ந்தோரை இழந்துதான் எமக்குப் பழக்கம். அந்தக் காலம் லண்டனுக்குப் போனவர்களை மட்டுமல்ல, கொழும்புக்குப் போனவர்களையும் இழந்திருக்கிறோம். உலகப் போரின் விளைவாக, ஒரு புறநடையாக, மலாயா, சிங்கப்பூர் போனவர்களில் ஒரு பகுதி திரும்பி வந்து இங்கு குறிப்பிடத்தக்க பல சமூக, பண்பாட்டு மாற்றங்களைக் கொண்டுவந்தார்கள். அங்கு தங்கி நின்றோரும் இந்தியத் தமிழருடன் இணை.. விரும்பாது இலங்கையர் என்ற அடையாளத்தைப் பேணி வருவதாகவும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இன்றைய காலம் வேறு. சனத்தொகையில் பெரும்பான்மையை வெளியே அனுப்பிவிட்டுச் சிறுபான்மை உள்ளூரில் இருப்பது முன்னெப்போதும் நடவாத விடயம். முன்போலல்லாது இன்று மாறியுள்ள உலகச் சூழலில் புலம் பெயர்ந்தோரை ஏற்றுக்கொண்ட பெரும்பாலான நாடுகள் அவர்களைத் தம்முடன் கரைந்துபோகும்படி சொல்லவில்லை. மாறாக, தங்கள் தங்கள் பண்பாட்டு அடையாளங்களைப்பேணி, நிறுவிக்கொண்டு வாழும்படி சொல்கிறார்கள். அது அந்த நாடுகளுக்குப் பெருமை என நினைக்கும் மனப்பான்மை இன்று முன்வைக்கப்படுகிறது. நாம் முன்னர் கூறிய பண்பாட்டுப் பன்மைத்துவம் என்பது தாராண்மை ஜனநாயகத்தின் முக்கிய அலகாக அமைந்ததன் வெளிப்பாடு இது.

அவுஸ்திரேலியாவில் இது வேடிக்கையானதொரு நிகழ்வாயிற்று. புலம்பெயர்ந்தோர் கணக்கெடுப்பின் போது வீட்டில் பேசும் மொழி என்ன வென்று கேட்கப்பட்டது. மாறிய சிந்தனைகளை உணராத எம்மவர், ஆங்கிலம் பேசுகின்றோம் என்றனர். இதனால், தாம் அவுஸ்திரேலியத் தேசிய ஓட்டத்தில் இணைவது சுலபம் என்று நினைத்தார்கள். புலம் பெயர்ந்த சீனரும், வியட்நாமியரும், அராபியரும் தத்தம் மொழிகளையே வீட்டில் பேசுவதாகச் சொன்னார்கள். எம்மவரது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அவுஸ்திரேலிய அரசு வீட்டில் சுயமொழி பேசும் புலம்பெயர்ந்தோருக்கு அதிக உதவி அளித்தது. அவரவர் மொழியையும் பண்பாட்டையும் பேணுவதற்கு தாமதமாக விழித்தெழுந்து எம்மவர், அடுத்த கணக்கெடுப்பில் வீட்டில் தமிழ் பேசுவதாக ஒத்துக்கொண்டார்கள்.

புலம்பெயர்ந்தோர், புலம் பெயர்ந்த இடங்களில் தங்கள் பண்பாட்டு அடையாளத்தை நிறுவ வேண்டும், பேணவேண்டும் என்பது இன்று கட்டாயமாகிவிட்டது. பண்பாட்டு வேர்களைத் தேடி தாயகத்தை அண்ணாந்து பார்த்தால், தாயகம் அர்ச்சகர்களையும் மேளதாளத்தையும் புழுக்கொடியல், பனாட்டுப் போன்றவற்றையும் தவிர வேறெதையும் கொடுக்க வக்கில்லாத சமூகமாகி விட்டது. அரசியலிலும் பண உதவியிலும் இருக்கும் பாலம் பண்பாட்டில் இல்லை. மூன்றாவது தலைமுறையை இழந்து விடுவோமோ என்ற அச்சம் எல்லோரிடமும் உள்ளது. பண்பாட்டுப்பாலம் இல்லாவிட்டால் எதுவும் நிலைக்காது. புலம்பெயர்ந்தோரை இழந்துவிடுவது எமக்குக் கட்டுபடியான காரியமல்ல.

பரஸ்பரம் புரிந்துகொள்ள முடியாத புலம் பெயர்ந்தோர் பிள்ளைகளையும் ஊரிலிருப்போரையும் பற்றி எவ்வளவோ எழுதியாகி விட்டது. புலம்பெயர்ந்தோர் இங்கு முன்னர் சொன்ன பண்பாடு தொடர்பான கருத்துமாற்றங்களுக்குப் பழக்கப்பட்டவர்கள். கருத்துமாற்றங்களைப் பார்க்கக் கண் திறக்கவில்லை யானால் பண்பாட்டுப்பாலம் அமையாது. பண்பாடு என்பது நாம் கொடுப்பது மாத்திரம் அல்ல, வாங்கியும் கொள்வது. பண்பாடு ஒருமைத் தன்மையுடையது, அது சாசுவதமாகவும் இருக்கும் என்ற நம்பிக்கைகளுக்குப் பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு பண்பாட்டின் பன்மைத்துவமும் மாறுந்தன்மையும் சிரமமாக இருந்தாலும் அது ஒன்றும் எங்களுக்குப் புதியது அல்ல. தமிழ்மொழியின் பண்பாட்டுப் பன்மைத்துவத்தை ஏற்கனவே பார்த்தோம். எமது சாதியமைப்பே பண்பாட்டுப் பன்மைத்துவம் தான். சாதியமைப்பின் பெருஞ்சிக்கல் அதிலுள்ள ஏற்றத்தாழ்வு, சாதியையொட்டிய வாழ்வியல் விழுமியங்கள் சிக்கல் அல்ல. இன்று இந்தியாவில் இது பெருமைக்குரிய விடயமாக முன்வைக்கப்படுகிறது.

மகாஜனாவின் புகழ்பெற்ற பழைய மாணவரான மறைந்த எழுத்தாளர், அளவெட்டி செல்லக்கண்டு முருகானந்தத்தின் பெயரில் உள்ள செல்லக்கண்டு அவரது தாயின் பெயர் என்பது சிலருக்கே தெரியும். அவர் சார்ந்த சமூகத்தின் பண்பாட்டு மரபு அது. இந்த மரபை நாம் இழந்து விட்டோம்; இகழ்ந்தும் இருக்கிறோம். ஆனால், இன்று பிரான்சில் பாற்சமத்துவம் கோரிப் போராட்டம் நடத்தியவர்கள் தாயின் பெயரைப் பிள்ளையின் முன்பெயராக வைக்கும் உரிமையை வென்றெடுத்துள்ளார்கள். இது, புதிய பண்பாட்டு அலையாக எங்களுக்கு வந்துசேரும் நாள் வெகுதொலைவில் இல்லை. இயல்பாக இருந்ததை இழந்துவிட்டுப் புதிதாகத் தேடவேண்டியிருப்பது பண்பாட்டு அடிமைத்தனம்.

ஈழத்தமிழர் கண்களை அகலத்திறந்து, புலம்பெயர்ந்த நம் சோதரருடன் செம்மையான பண்பாட்டு இடைத்தாக்கமொன்றை நடத்தினால், பல பண்பாட்டு விழுமியங்களை நாம் உள்வாங்கிக் கொள்வதுடன் உலகளாவிய பண்பாட்டு அடையாளமொன்றையும் உருவாக்கலாம் இது அரிய சந்தர்ப்பம். எல்லோரது செழிப்பிற்கும் அவசியம். இதில் பத்திரிகை போன்ற ஊடகங்கள் செய்யக்கூடியது நிறைய உண்டு. ஈழத்தமிழர் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர், பண்பாட்டின் பாதுகாவலர் நாமே என்னும் பெருமையைச் சற்று மறக்க வேண்டியிருக்கலாம். இலங்கையின் பிற சமூகக்கட்டுமானங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விழுமியங்கள் ஏராளம்.

இந்த உலகளாவிய போக்கும் எங்களுக்குப் புதிதல்ல. சற்று மறந்திருக்கிறோம். கிரேக்கரும் உரோமரும் வந்ததும், முஸ்லிம்களாக முன்னர் தொடங்கியே அரபுக்கள்

***தொடர்பு சாதனப்புரட்சி யுகத்தில் நாம் வாழ்கிறோம். வலையும் பின்னலுமாக எதையும் எவரும் கட்டுப்படுத்திவிட முடியாத காலமிது. பிள்ளைகள் எதிர்பார்க்கிறார்கள் என்று பெற்றோர் இங்கும் அஞ்சுகிறார்கள். அங்கும் அஞ்சுகிறார்கள்.***

வந்ததும் சீனரும் தென்கிழக்காசிய நாட்டவர்களும் வந்ததும், நாங்கள் அங்கெல்லாம் போனதும், தென்னாசியாவின் பல பாகங்களுடனும் தொடர்பு கொண்டிருந்ததும், காலனித்துவ காலத்தில் உலகவர்த்தகத்துடன் நெருக்கமாகத் தொடர்புபட்டிருந்ததும், சர்வதேசக் கடற்பாதைகளின் கேந்திரத்தானத்தில் இருந்ததும், எங்களது வரலாறு- தொல்லியற் சான்றுகளைத் தட்டிப்பார்த்தால் தெரியும். அந்த இடைத்தாக்கங்களின் ஊடாகத்தான் எங்கள் பண்பாட்டு அடையாளம் உருவானது. யாழ்ப்பாணத்து அரசர் பாரசீக மொழியில் தன்னுடன் உரையாடினார் என்கிறார் இபின்பத்தூதா. கிறிஸ்தவமும் இஸ்லாமும் அவை எழுந்த ஆரம்ப காலங்களிலிருந்தே எம்முடன் நெருங்கிய தொடர்புடையவையாய் இருந்தன. எங்களது வரலாற்றின் இந்தச் சர்வதேசப் பரிமாணங்கள் இன்னும் சரியாக வெளிக்கொணரப் படவில்லை. சிங்கள-பௌத்த தேசியத்துடன் போட்டி போட்டுக் கொண்டு தொன்மையை மாத்திரம் நிறுவுவதில் முனைப்பாக இருந்ததால் சொல்லாத சேதிகள் இவை. கடந்த காலங்களில் கிடைத்த தொல்லியற்சான்றுகளில் கவனிக்காமல் விட்டவற்றைத் திருப்பியொருக்கால் பார்த்தாலே புதிதாகப் பலவற்றைக் கூறலாம்.

புலம்பெயர்ந்தோர் செய்ய வேண்டிய பண்பாட்டுக் கடமையொன்றுண்டு. கலியாணம், சாமத்தியச் சடங்கு, பிறந்தநாள் கொண்டாட்டம், கோயில் திருவிழா-இனிப்போதும், அல்லது பிறகு பார்க்கலாம். தேவை: உணவு, சுகாதாரம், கல்வி, பாற்சமத்துவம், சூழற் பாதுகாப்பு, தொடர்பு சாதன வளர்ச்சி.

சரியான உணவு என்பது இருப்பின் அடிப்படை. உணவாலும் சுகாதாரத்தாலும் மனப்பான்மையாலும் ஒரு மக்கட் கூட்டத்தின் உடலமைப்பை ஒரு தலைமுறைக்குள்ளேயே மாற்றலாம் என்பதற்கு யப்பானியர் சிறந்த உதாரணம். உலகப் போருக்கு முன் குள்ளர்கள் எனப் பெயர் எடுத்திருந்த யப்பானியர் இன்று ஐரோப்பியருடன் ஒப்பிடக்கூடிய உடலமைப்புடன் இருக்கிறார்கள். புலம்பெயர்ந்தோர் பிள்ளைகளின் வளர்ச்சியை உள்ளூரில் யுத்தகாலத்தில் அகப்பட்டோர், அகதி முகாம்களிலிருப்போர் பிள்ளைகளுடன் ஒப்பிட்டால் உணவின் அருமை தெரியும், உணவாலும் மனஉந்துதலாலும் வளர்ந்த நாடுகளில் பூப்பெய்தும் வயது முன்சென்றதை அனைவரும் அவதானித்திருப்பர். சரியான உணவு கிடைக்காமைக்கு வறுமையும் உணவுத்தட்டுப்பாடும் மாத்திரம் காரணம் அன்று. மனப்பான்மை என்பது இங்கு முக்கியமானது. செலவழிப்பதா அல்லது நகைநட்டு சேகரிப்பதா என்பதைத் தீர்மானிப்பது மனப்பான்மை. அது பண்பாட்டால் வருவது.



பண்பாட்டு நிறுவனங்களுள் முதன்மையானது கல்வி நிறுவனங்கள். 'அன்ன சத்திரம் ஆயிரம் கட்டலும்' என்ற பாரதி பாடல் எல்லோருக்கும் தெரியும். எழுத்தறிவித்தல் மாத்திரம் இன்று கல்வி அல்ல. சர்வதேசச் சமூகத்துடன் போட்டியிட வேண்டிய கல்வி எங்களுக்குத் தேவை. பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட எங்கள் கல்வி நிறுவனங்கள் மெல்லச் செத்துக்கொண்டிருக்கின்றன. எது கல்வி என்று தெரியாததால் வந்த வினை. கல்வி இன்று அரசின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பது ஆறுதல்தரும் விடயம். ஆனால் இந்த நிலையை வியாபார நிறுவனங்களே பயன்படுத்துகின்றன.

புலம் பெயர்ந்தோரது பண்பாடு சார்ந்த கல்வித் தேவையை எங்களால் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் பிற நாட்டுப் பல்கலைக் கழகங்கள் வணிகநோக்குடன் இறங்கியிருக்கின்றன. மகாஜனா போன்ற பள்ளிக்கூடங்களைக் கட்டியவர்களின் மனப்பான்மையுடன் எங்கள் பிள்ளைகளுக்கு இன்று தேவையான கல்வியைக் கொடுக்கும் நிறுவனங்கள் வரவேண்டும். இருக்கின்ற நிறுவனங்களையே புனரமைக்கலாம்.

டியூட்டறிக்கும் குறிப்புகளுக்கும் பழக்கப்பட்டுப்போன எங்கள் பிள்ளைகள் பல்கலைக்கழகம் வந்தாலும் புத்தகத்தைத்தொட அஞ்சுகிறார்கள். ஆங்கிலத்துக்குஅஞ்சுகிறார்கள்.

(22ஆம் பக்கம் பார்க்க)

**முறிஞ்ச இடத்தில நோவெண்ணெய் போட்டு உருவிறதில பயனில்லை. அதேநேரம் பாரம்பரிய மருந்துகளைப் பரவலான பயன்பாட்டிற்கு ஏற்ப குடுக்கிறதுக்கு, அதுகளின்ரை நிவாரணத்தன்மையளை உறுதிசெய்ய வேணும். அதுகளை அடுத்த கட்டத்துக்கு வளர்த்தெடுக்கோணும். கண்ணை மூடின நுகர்வோராக மட்டும் இருக்காமல், ஒவ்வொண்டையும் கொஞ்சம் கவனமாய் எடுத்து நோக்கவேணும், எண்டுதான் நான் சொல்லிறன்.**

உலா 46

# ஏ9–ஏரம்பு

# நாங்கள் கண்ணைமூடின;— நுகர்வோராக இருக்கக்கூடாது...!

வணக்கம் பிள்ளையள் எல்லாருக்கும்! நாட்டு நிலைமையளும் ஏதோ போகுது. அதில்லை எனக்குப் பெரிய கவலை என்னண்டால், வீட்டைச்சுத்தி மரங்கள் நிக்கிதெண்டு சந்தோசப்பட்டனான். ஆனால் இப்பை எங்கட தமிழீழத் தேசியத்தொலைக்காட்சி தென்னாசியாவிலை இழுக்கிற நேரம் பார்த்து, குறுக்கால போற மரம் குறுக்கால நிக்கிது.

சுவாமி தரிசனம் கிடையாத நந்தனார் வெளியால நிண்டு மானசீகமாய் பார்த்த மாதிரித்தான் என்ரை நிலைமையும். எங்களுக்கெண்டு இப்பிடியொண்டை ஆக்கிக்கொள்ள முடிஞ்சது எவ்வளவு பெரிய சந்தோசப்படக்கூடிய விசயம்.

இண்டைக்கு சிவில் சமூகத்தில ஆதிக்கம்மிக்க பலமான ஊடகமாக விளங்கிற தொலைக்காட்சிச்சேவை இதுவரை காலமும் தமிழுக்கு கொள்ளி வைக்கிற கும்பல்களிட்டைதான் இருந்து வந்திது. அவங்கள் 'ரமிலை ரோக் பண்ணியே அழிக்க ட்றை பண்ணிக்கொண்டிருந்த ரைமில' தான் தமிழுக்காக உயிரையும் குடுக்கிற எங்கட மண்ணில இருந்து இப்பிடியான ஒரு சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிது.

சற்றலைற் சனியன்களால தமிழினத்தின்ரை முதுகு கூனலாக்கப்பட்ட காலம்போய், வானம்வரை நிமிரும் இந்த முயற்சி எங்கட விடுதலை மூச்சுக்கு ஆற்றவேண்டிய பணிக்கு எல்லோரும் சேர்ந்து ஆதரவளிக்கோணும். பக்கத்துவீட்டுக் கிணத்தடியில டிஷ்-அன்ரெனாவைக் கட்டியெண்டாலும் வாறகிழமைக்குள்ளை பார்க்கோணுமெண்டு இருக்கிறன். நீங்களும் பாருங்கோ! மற்றாக்களையும் பார்க்கவிடுங்கோ!

ஐயோ! போன கிழமை முழுக்க தும்மித்தும்மியே என்ரை தூக்கம் போயிட்டிது. பெரியதொரு கொறெக்ஸ் போத்திலைக் குடிச்சு முடிச்ச நேரம் தான் எப்பையோ வாங்கின வேப்பெண்ணெய் ஞாபகம்வந்து, எடுத்துக் குடிச்சன். 2வேளை எடுக்கவே மாறிட்டிது. இப்ப கே.ஜே. ஜேசுதாசுக்கும், எனக்கும் தாடி ஒண்டுதான் வித்தியாசமாய் இருக்கிது. அவ்வளவுக்கு தொண்டை சுகமாயிட்டிது.

உந்த கைமருந்து முதலிலையே ஞாபகம் வந்திருந்தால் கொறெக்ஸ் மாதிரியொரு சீனிப்பாணியை வீணாய் வாங்கியிருக்கத் தேவையில்லை. நீங்கள் நினைப்பியள், வேப்பெண்ணையைக் குடிக்கிற நேரத்துக்கு தும்மிக்கொண்டே திரியலாம் பரவாயில்லை எண்டு.

ருசி இல்லாட்டி அதைக் கட்டாயப்படுத்தித் திணிக்கோணும் எண்டு நானும் சொல்லமாட்டன். ஆனால், அதுக்கு ருசி சேர்த்து அல்லாட்டி குளிசையாக்கி சந்தைப்படுத்தலாம் எல்லோ! ஆ.. வந்திட்டார் இவர்! அங்கையிஞ்சை கையை வைச்சு கடைசியில மருந்துகளுக்கும் ஐடியா குடுத்து மனுசரை ஒரேயடியாய் அனுப்பிற திட்டமாக்கும் எண்டு ஏறி விழுந்திடாமல், சொல்லிறதில இருக்கிற நியாயத்தைக் கேளுங்கோ!

இண்டைக்கு உலகத்தில பயன்பாட்டில இருக்கிற மருந்துகளில குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவு மருந்துகள் பாரம்பரிய மருந்துகளின்ரை நவீன வடிவம்தான்! அண்டைக்கு பிபிசியில போன கலந்துரையாடலில தெரிவிக்கப்பட்ட கருத்துகளின்படி, குறிப்பிட்ட ஒரு வருத்தத்துக்கு தேவையான மருந்தைக் கண்டுபிடிக்கிறதெண்டால் பரவலான ஆராய்ச்சியள் அவசியமாய் இருக்கிது. அதுவும் ஆரம்பத்தில இருந்து ஆரம்பிச்சு ஒரு உறுதியான மருந்தைக் கண்டுபிடிக்கிறதெண்டால் 10 வருசத்துக்குக் குறையாமல் தேவைப்படுமாம்.


அவ்வளவுக்குச் செலவழிச்சு மருந்தைக் கண்டுபிடிச்சிட்டு 10 வருசச்செலவையும் எடுக்கிறதுக்காக மருந்தின்ரை விலையை ஏத்தினால், மருந்தை பெரிசாய் சந்தைப்படுத்தேலாமல் போயிடும். அவ்வளவு மினைக்கெட்டுக் கண்டுபிடிச்சாலும் 8-12 வருசத்துக்குப் பிறகு காப்புரிமைக் காலம் கழிஞ்ச பிறகு எல்லாருமே அதைப்பார்த்து கொப்பியடிச்சு விற்கத்தொடங்கிடுவாங்கள்.

அப்பிடி இக்கட்டான நிலைமையைத் தவிர்த்துக்கொள்ளிறதுக்காக ஏற்கெனவே உலகில பாரம்பரிய மருத்துவமாகப் பயன்படுத்தப்பட்டு வாற சமாச்சாரங்களை எடுத்து கொஞ்சம் அப்பிடியிப்பிடி மாற்றங்களைச்செய்து மருந்தெண்டு விற்கினம். இதுக்காக மேலைநாட்டைச் சேர்ந்த பாரிய மருந்து நிறுவனங்கள் இந்தியா, சீனா, ஆபிரிக்கா எண்டு அதிலையும் குறிப்பாய் இந்தியாவில இருக்கிற சித்த மருத்துவ, ஆயுள்வேத மூலிகைகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தி வருகிது.

ஏனெண்டால் பாருங்கோ! 10 வருசமாய் கொட்டிச் செலவழிச்சு மருந்தைக் கண்டுபிடிச்சு நட்டப்படுகிறதைவிட இப்பிடி ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளை வடிவ மாற்றம் செய்து விற்கிறது சுலபமாய் இருக்கிது. இதால காலமும், பணமும் மிச்சம் எண்டது மட்டுமில்லாமல், கொழுத்த லாபம் வேற சம்பாதிக்கிதுகள் அந்த நிறுவனங்கள்.

கண்ணை மூடிக்கொண்டு விழுங்கவேண்டிய கசப்பான உருண்டையளாய் இருக்கிற பாரம்பரிய மருந்துகளை, கண்ணுக்குக் கவர்ச்சியானதும், நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில அந்நியமான பெயரோட (எங்கட மனம் அப்பிடி இருக்கிது) கூட்டுக்குளிசையாகவும், ஊசி மருந்தாகவும் தர்றதில விண்ணன்மாராய் இருக்கிறதாலதான் Bayer, BASF, Monsanto எண்டெல்லாம் பாரிய மருந்து உற்பத்தியாளர்கள் வளரக்கூடியதாய் இருந்திருக்கிது.

நீங்கள் ஒருக்கால் கற்பனை பண்ணிப் பார்க்கிறதுக்காகச் சொல்லிறன் உந்த Bayer நிறுவனம் 2002 ஆம் ஆண்டு மட்டும் சம்பாதிச்ச லாபம் 1.25 . பில்லியன் டொலர். அதிலை வேலை செய்யிற தொழிலாளரின்ரை எண்ணிக்கை 117 000 எண்டேக்கிளை, அவையின்ரை குடும்பங்களையும் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட யாழ்ப்பாணக்குடாநாட்டில வாழிற மக்களின்ரை தொகை முழுக்கலுமே ஒற்றை



மருந்து நிறுவனத்தால மூச்சு விடிற அளவுக்கு அந்த மருந்து நிறுவனம் தன்னை வளர்த்திருக்கு.

இதை மாதிரித்தான் மற்றதுகளும். இப்பிடி அதுகள் வளர்ந்ததுக்கு கடும்முயற்சி மட்டுமில்லை காரணம், கபடத்தனமும்தான். அதுதான் காலாகாலமாய் நாங்கள் பயன்படுத்திற மஞ்சள், வேம்பு, இஞ்சி எல்லாத்தையும் அமெரிக்கா தன்னோட காப்புரிமையாய் ஆக்கிறதுக்கு விண்ணப்பிச்சிருக்கு. இருந்தும் இந்திய மருத்துவர்கள் சிலர் 10 வருசமாய் ஆராய்ஞ்சு திரட்டின 3000 இற்கும் குறையாத பாரம்பரிய மூலிகை மருந்துகள் பற்றின விபரத்தைக் காட்டி நீதிமன்றத்தில அதைத் தடுத்திட்டினம்.

அது சறுக்கி இருந்தால் எங்கட வேம்பை மருந்தாக்கிறதுக்கு அமெரிக்காவுக்கிட்டை அனுமதி கேட்கவேண்டி வருமெண்டிறது மட்டுமில்லாமல், Patent rights (காப்புரிமை) விசயத்தில நாங்கள் அவையளுக்கு காசு கட்டவேண்டியும் வந்திடும். ஏற்கெனவே வேறவேற நாடுகளில உப்பிடி நடந்திருக்கு. உந்த விசயத்தில மனித தர்மம் எல்லாம் மருந்து-நிறுவனங்களுக்கு மண்ணாங்கட்டியாகத்தான் இருக்கும்.

எயிட்ஸ்-நோயின்ரை தீவிரத்தைக் குறைக்கிற சில மருந்துகளைக் கொப்பி அடிச்சதுக்காக தென்னாபிரிக்காவை 45 மருந்து-நிறுவனங்கள் எதிர்த்த சம்பவமும் நடந்திருக்கிது. மேலைநாட்டு நிறுவனங்களிட்டை கொள்வனவு செய்யாமல், தங்கட ஏழை நோயாளியளுக்குக் குடுக்கிறதுக்காக மலிவாய் உள்ளூரிலையே தயாரிச்சது தான் தென்னாபிரிக்கா செய்த பாரிய குற்றமாம்!

என்ரை பிள்ளையள் நீங்கள் அப்பிடி இல்லாட்டியும், சிலர் இருக்கினம். அவையள் நான் சொல்லிறதை நம்ப மாட்டினம். உப்பிடித்தான் அண்டைக்கு பக்கத்துவீட்டுத்தம்பி ஓராள் ஒரு விசயம் பற்றி எனக்குத் தெரிஞ்சால் கேட்டு அறிஞ்சுகொள்ளலாம் எண்டு வந்தவர். அவர் கேட்ட விசயம் நான் விளாவாரியாய் இந்தப் பத்தி யில சில வாரங் களுக்கு முன் னால எழுதினது தான்.

'ஏன் தம்பி! பேப்பர் பார்க்கேல்லையோ ? நான் இதைப் பற்றி மினைக்கெட்டு எழுதினனான்', எண்டு கேட்டன். 'சே! பேச்சுத்தமிழில வற்றதில பெரீசா என்ன இருக்கப்போகுது. நான் அதுகள் ஒண்டும் பார்க்கிறேல்லை', அவர் சொன்னார். நான் என்னத்தைச் சொல்ல! பேச்சுத்தமிழைக் கொச்சை எண்டு நினைச்சுக்கொண்டு, உள்ளடக்கத்தைப் பார்க்காமலேயே 'பல்லுக்காட்டிற கொழுக்கட்டை விருப்பமில்லை, மோதகம்தான் விருப்பம்' எண்டு ஒதுக்கிற எங்கட 'படிச்ச மட்டங்களை' என்ன செய்யலாம்? நீங்களே சொல்லுங்கோ!

இன்னுமொரு விசயம் என்னண்டால் பரிசோதனைக்கூடங்களில கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் ஏதாவது பக்கவிளைவுகளை ஏற்படுத்தி ஏதாவது பிசகிவிட்டால், நோயாளியளுக்கு நட்டஈடு கட்டி மீளேலாது எண்ட பயத்தில, சில நிறுவனங்கள் கஸ்ரப்பட்ட நாடுகளில இருக்கிற வைத்தியர்களை 'நல்ல மாதிரி' கவனிச்சுக்கொண்டு, அவையள் மூலம் தங்கட மருந்துகளைப் பரீட்சித்துப்பார்க்கினம்.

ஏனெண்டால் மூன்றாம் உலக நாடுகளில அப்பாவிச்சனங்கள் நட்டஈடு கோரி வழக்குப்போட்டாலும், பணமுதலையளுக்கு முன்னால அவையின்ரை கதை எடுபடப்போறேல்லை. அல்லாட்டி ஆயிரம், இரண்டாயிரத்தைக் கொடுத்து வாயை அடைச்சிடலாம். இப்பிடி தங்கட கையாட்டி மருத்துவர்கள் மூலம் குறிப்பிட்ட காலத்துக்கு பரீட்சித்துப் பார்த்து, அவதானிக்கப்படிற பக்க விளைவுகளுக்கு ஏற்றமாதிரி மருந்தின்ரை கலப்புகளை மாற்றி, உறுதியான மருந்தைத் தயாரிச்சிட்டு பேந்துதான் வளர்ச்சியடைஞ்ச நாடுகளில விற்பனைக்கு விடிறாங்கள்.

'குந்தில இருந்துகொண்டு உவர் சொல்லிற குறை, குற்றங்களை ஏன் நம்போணும்' எண்டு நீங்கள் கேட்கலாம். இதெல்லாம் நான் கண்டுபிடிக்கேல்லை. கிளௌஸ் வேர்ணர், ஹன்ஸ் வைஸ் எண்டு 2 பேர் விபரமாய் ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கினம்.

சாதாரணமாய் உலகநாடுகளில இருக்கிற சகல டொக்ரர்களும் பின்லாந்தின்ரை தலைநகரமாகிய ஹெல்சிங்கியில 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடந்த 'பன்னாட்டு மருத்துவர் சங்கம்' வெளியிட்ட பிரகடனத்திற்கு ஏற்ப நடக்கோணும். இருந்தாலும் யதார்த்தம் அப்பிடி இல்லை. ஏன் கொழும்பில இருக்கிற இந்தியன்ரை 'அப்பொலோ' மருத்துவமனையைப் பாருங்கோ. புதிசாய் படிச்சு முடிச்ச ஆக்கள் அங்கை குறிப்பிட்ட காலம் நிண்டு அனுபவம் பெற்ற பிறகு, வெள்ளைக்காரர் வாற வேற பெரிய கிளைகளுக்கு மாற்றப்படிகினமாம்.

நீங்கள் கேட்பியள், அப்ப மொத்தத்தில என்ன செய்யிறது? மருந்தெடுக்காமல் வருத்தத்தில உழலிறதோ எண்டு. ஐயோ பிள்ளையள் நீங்கள் எல்லாரும் நூறு வருசம் சந்தோசமாய், திடகாத்திரமாய் வாழோணும் எண்டிறதுதான் என்ரை விருப்பம். ஆனாலும், பாரிய பணமுதலையளின்ரை கபடத்தனத்திற்கு ஆளாகி அழிஞ்சு போகக்கூடாது எண்டதுதான் என்ரை விருப்பம்.

முறிஞ்ச இடத்தில நோவெண்ணெய் போட்டு உருவிறதில பயனில்லை. அதேநேரம் பாரம்பரிய மருந்துகளைப் பரவலான பயன்பாட்டிற்கு ஏற்ப குடுக்கிறதுக்கு, அதுகளின்ரை நிவாரணத்தன்மையளை உறுதிசெய்யவேணும். அதுகளை அடுத்த கட்டத்துக்கு வளர்த்தெடுக்கோணும். கண்ணை மூடின நுகர்வோராக மட்டும் இருக்காமல், ஒவ்வொண்டையும் கொஞ்சம் கவனமாய் எடுத்து நோக்கவேணும், எண்டுதான் நான் சொல்லிறன்.

மற்றது வன்னியில 'தாயகம் மருத்துவமனை'க்கு அடிக்கல்லும் வைச்சு வேலையளும் தொடங்கீட்டிதாம். நாளைக்கு அங்கை கடமையாற்றிறதுக்கு சகல தரப்பிலும் துறைசார் பணியாளர்கள் பெருந்தொகையில தேவைப்படும். அதை நினைச்சுக்கொண்டு மாணவ சமுதாயமும் தங்களை வளர்த்துக்கொள்ள வேணும். தாய்தகப்பனும் தங்கட பிள்ளையளை ஏதோவொரு துறையில (அது என்னவெண்டாலும் பரவாயில்லை, வெட்டிச்சோம்பேறியாய் மட்டும் இருக்கக்கூடாது) ஈடுபடச் செய்து கடமையுணர்வோட கல்வி கற்கப்பண்ணோணும். இதுகள் தான் இந்தத் தாத்தாவின் நியாயமான ஆசையள். நான் சொன்னதுகளை யோசிச்சுப்பாருங்கோ! வாற கிழமை சந்திப்போம்!

# சனநாயகம் என்ற பெயரில் பேரினவாதப் போக்குகள்

**★★★★★ மனித உரிமைகள் பற்றிய எந்தவொரு விவாதத்திலும் இலங்கை குற்றவாளியாக எங்கும் நிறைந்துள்ளது. நேர்மைக்கு அழுத்தம் கொடுத்து மக்களின் அபிலாஷைகளை அனைத்து இனமொழி கடந்த மக்களுக்கும் சுபீட்சமான சுதந்திரமான வாழ்வைப் பெற்றுக்கொடுப்பதில் பின்னோக்கிய திசையில் சென்றிருக்கின்றது. ★★★★★**




இருபத்தியொராம் நூற்றாண்டின் முன்னெடுப்புக்கள் பாகுபடுத்தும் விழுமியங்களுக்கும் ஊன்றிய பொருளாதார அரசியல் நலன்களுக்கும் எதிராகவும் மேற்கொள்ளப்படும் மக்கள் போராட்டங்களின் மூலமே தத்தம் உரிமைகளை வென்றெடுக்கமுடியும் என்பதானது முக்கியத்துவமான தேவையாகிறது.

சகல நாடுகளிலுமுள்ள எல்லா மக்களும் முழு உரிமைகளையும் கொண்டிருக்கவேண்டும் என்பதே இவ் நூற்றாண்டில் உலகளாவிய இலக்காகும். சர்வதேசபிரகடனமானது 50 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய ஒரு தூரப்ே-ாக்கினைக் கொண்டுள்ளது. உலகம் முழுவதையும் உள்ளடக்கிய முறையில் இவ்விலக்கினை அடைந்துகொள்வதற்கான ஆற்றலையும் வளங்களையும் விழிப்புணர்வையும் இன்று உலகம் கொண்டிருக்கிறது.

மனித உரிமைகளில் சமூகக்குழுக்கள் முன்னணியில் நின்று சனநாயக ஆட்சியில்லாத, பெயருக்கு சனநாயகம் என்று சொல்கின்ற உரிமை மீறல்கள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதுடன் சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வலியுறுத்த வேண்டும் என்பது அவசியமாகிறது.

மக்களால் மக்களுக்கான ஆட்சியே சனநாயகமெனின் மனித உரிமைகள் மட்டில் அக்கறையும் பாரபட்சமின்மையும் உடையதான ஆட்சியே வேண்டப்படுகிறது. இன்றைய உலக நாடுகளிடையே உரிமை மீறல்கள் தொடர்பான பொது மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தொழில்நுட்பவியலும், சமூகங்களின் திறந்த தன்மையும் அவ்விதமான வலையமைப்புக்களையும் கூட்டிணைவுகளையும் ஏற்படுத்துவதற்குச் சிறந்த வாய்ப்பினை வழங்குகின்றது.

மனித சுதந்திரங்களை பாதுகாத்துக்கொள்வதற்குச் சட்டவாக்கங்கள் மட்டும் போதுமானவையல்ல. ஒவ்வொரு நாடும் அதற்குத் தனது சமூக ஏற்பாடுகளை வலுப்படுத்திக் கொள்ளுதல் மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் சனநாயக உரிமைகளைப் பெற்றவனாக சுதந்திரமானவனாக, சுபீட்சமானவனாக வாழவேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான நியமங்கள், நிறுவனங்கள், சட்ட அமைப்புக்கள், பொருளாதாரச் சூழல் என்பன முக்கியமானவை. சட்டங்கள் மட்டும் மனித உரிமைகளுக்கான உத்தரவாதத்தைத் தரமாட்டாது. சட்டச் செயன்முறைக்குத் துணையான நிறுவனங்கள் தேவை. சட்ட அமைப்புகளை வலுப்படுத்தக்கூடிய சமூக நியமங்களையும், நீதி நெறிகளையும் கொண்ட கலாசாரம் என்பனவும் அத்துடன் வசதியான பொருளாதாரச் சூழலும் அவசியமானது.

மனித கௌரவம், சுதந்திரம், சமத்துவம் என்பனவற்றுக்கு கௌரவமளிக்கும் பெறுமானங்களை மேம்படுத்தவும் நியமங்களைக் கட்டியெழுப்பவும் சமுதாயத் தலைவர்கள், சமயத்தலைவர்கள், வர்த்தகத் தலைவர்கள், வாண்மைமிகு தொழில் புரிவோர் மட்டுமன்றி, அனைத்து மக்களின் பங்களிப்பும் அவசியமும் தேவையுமாகின்றது.

இன்றைய நிலைமைகளில் எமது தேசத்திலே உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பல்வேறு வழிகளிலும் ஏற்பட்டுவருகின்றது. பொதுஊடகங்கள், வன்செயல், அட்டூழியங்கள், காணாமல் போதல், மக்கள் நலனைப்பேணுவதில் தவறியமை, சமூக, பொருளாதார, அரசியல், பாரபட்சங்கள் போன்ற விடயங்களை ஆவணப்படுத்துவதில், அம்பலப் படுத்துவதில் முன்நின்று உழைக்கின்றன.

தீர்மானமென்றால் பாதிக்கப்படுகின்ற அனைவரும் அத்தீர்மானத்தை எடுப்பதில் பங்குபற்றுகின்ற உரிமையை நேரடியாகவேனும் அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவேனும் கொண்டிருக்க வேண்டுமென்பதே சனநாயகம் என்பதன் அடிப்படைக் கருத்து... இழக்கின்ற தொகுதியினரைத் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்றுவதிலிருந்து விலக்குவதானது சனநாயகத்தின் அடிப்படைக்கருத்தைத் தெளிவாக மீறுவதாகும் என்பார் ஆர்தர்லெவிஸ்கி எனும் அறிஞர்.

சனநாயகம் மட்டும் தான் பொருளாதார், சமூக, அரசியல், சிவில மற்றும் கலாசார உரிமைகளென்ற ஐந்து வகை உரிமைகளும் மதிக்கப் படுவதுடன் ஒத்தியலக்கூடிய ஒரேயோர் அரசியல் ஆட்சிமுறை என்பதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். உலகெங்கும் பரவி வருகின்ற தாராள சனநாயகப் போக்கு மாற்றங்களைக் கூடியளவு சமுதாயத் துக்குரியவையாக்குகின்றன.

சில உரிமைகளுக்கு அரசியலிலிருந்து பாதுகாப்பை உறுதிப் படுத்துகின்ற வழிமுறைகள் தேவைப் படுகின்றன. மக்களால் மக்களுக்கான ஆட்சி என்பதாகக் கூறிக் கொண்டு மக்களின் உரிமைகள், கடமைகளை ஒடுக்குகின்ற ஆட்சியாகப் பித்தலாட்டம் நடத்துவதும் இன்று சனநாயகம் என்பதாக நாமம் சூட்டப்பட்டுகைக்கொள்ளப்படுகிறது. இது இலங்கையில் மிக மோசமாகக் காணப்படுகிறது.

எல்லா இன மக்களைப் பாதுகாப்புடன் எல்லாக் குடி மக்களுக்கும் பேச்சுச் சுதந்திரத்தையும் அவர்களின் பங்கேற்பையும் உறுதிப் படுத்துவதற்குமாக அரசியல் அதிகாரம் பல்வேறு வழிவகைகளில் பரவலாக்கப்பட்டுப் பகிர்ந்துகொள்ளப் படுகின்ற கோட்பாட்டில் கட்டியெழுப் பப்பட்ட உள்ளடங்கலான சனநாயகமொன்றை எண்ணிப்பார்ப்பதும், கருத்துவெளியிடுவதும், கட்டமைப் புக்களை ஏற்படுத்துவதும், கண்துடைப்பதுவுமாய் காலம் கடத்தும் அரசியல் நாடகங்களிடையே சனநாயகம் என்பது விளங்கிக்கொள்ள முடியாதது.

உள்ளடங்கலான சனநாயகப் பெரும்பான்மையின் தேர்தல் ரீதியான ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட முரட்டுப்பலத்தையன்றி, கருத்தொருமைப்பாட்டுக்கும், உட்படுத்தலுக்கும் முயற்சி செய்வதன் மூலமான பிரதிநிதித்துவத்தின் தரம் வலியுறுத்தவேண்டிய அவசியமாகின்றது. உள்ளடங்கலான சனநாயகம் சிவில் சமுதாய நிறுவனங்கள், வெளிப்படையான ஊடகங்கள் உரிமைகளை நோக்காகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை. அதிகாரங்களைப் பிரித்தவை என்பவை ஊக்குவிக்கப் பட வேண்டியதன் அவசியத்தையும் போற்றுகின்றது. அவற்றின்மூலம் மனித உரிமைகளுக்கான வகை சொல்வதற்கான வழிமுறைகளை உருவாக்குகின்றது.

ஒரு சுதந்திர தென்னாபிரிக்காவில் முதலாவது தேர்தல்கள் நடந்த பின்னர் ஆபிரிக்க சனாதிபதி நெல்சன் மண்டேலா அச்சுறுத்தலுக்குள்ளாக்கி தம் உரிமை அவாவி நிற்கும் ஒரு இனத்தை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டமை ஏனைய சனநாயகங்களுக்கு ஒரு முக்கியபாடமாகும். மேலும் கூட்டிணைவுகள் பாரபட்சங்களிடையே ஒவ்வாதனவாக இருக்கலாம். ஆனால் விலக்கி வைத்தலுக்கு கொடுக்கப்படவேண்டிய விலை. அது மக்களின் யுத்தத்துக்கு வழிவகுக்கும் போது கொடுக்கப்படும் விலை மிக மிக அதிகமாகும்.

பகிரங்கமாக விவாதிப்பதற்கும் கொள்கைகளையும் நிறுவனங்களையும் கண்டிப்பதற்கும் தனிப்பட்டவர்களுக்குள்ள சுதந்திரம், மனித உரிமைகள், துஷ்பிரயோகிக்கப்படுவதற்கெதிராக அவற்றைப் பாதுகாப்பதும் அவசியமாகின்றது. ஊடகங்களின் வெளிப்படையான தன்மை சிவில் மற்றும் அரசியல் சுதந்திரங்களை முன்னேற்றுவதுடன் மட்டுமல்லாது அநேக சந்தர்ப்பங்களில் பொருளாதார, சமூக உரிமைகளுக்கும் பங்களிக்கின்றது. பொது மக்களின் மனச்சாட்சியைத் தூண்டுவதும் நடவடிக்கை நெருக்குதலை விளங்க வைத்தலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயனளித்துள்ளது.

சமகால உலகில் நாம் பரவலாக மூன்று வகையான அரசியல் நிலைமைகளை இனங்கண்டு கொள்ளமுடியும். சனநாயகக் கோட்பாடுகளை அடியொற்றி ஆட்சிபுரியும் நாடுகள் ஒருபக்கம் கூடுதலான மனித சுதந்திரம் ஆட்சிக் குழப்பங்களுக்கு வழிவகுக்கும் என்பதற்கு இலக்கணமாகிவருகின்றன.

ச்மதர்மக் கோட்பாடுகளை ஆட்சித் தத்துவங்களாகக் கொண்ட நாடுகள் இன்னொருபுறம் கூடுதலான அடக்குமுறைகள் ஆட்சிக் குழப்பங்களுக்கு வழிவகுக்கும் என்பதற்கு அவை இலக்கணமாகி வருகின்றன.

சமதர்மக் கோட்பாடுகளில் மனுக்குலத்திற்கு நன்மை பயப்பனவற்றையும் சனநாயகக் கோட்பாடுகளில் மனுக்குலத்திற்கு நன்மை பயப்பனவற்றையும் ஒருங்கிணைத்து சனநாயக- சோஷலிச ஆட்சி புரியும் நாடுகள் இன்னொருபுறம். ஆட்சி அதிகாரம் தமக்கேயுரியதென்ற எண்ணம் ஆட்சிக் குழப்பங்களுக்கு வழிவகுக்கும் என்பதற்கு அவை இலக்கணமாகிவருகின்றன.

மனித உரிமைகள் பற்றிய எந்தவொரு விவாதத்திலும் இலங்கை குற்றவாளியாக எங்கும் நிறைந்துள்ளது. நேர்மைக்கு அழுத்தம் கொடுத்து மக்களின் அபிலாஷைகளை அனைத்து இனமொழி கடந்த மக்களுக்கும் சுபீட்சமான சுதந்திரமான வாழ்வைப் பெற்றுக்கொடுப்பதில் பின்னோக்கிய திசையில் சென்றிருக்கின்றது.

சனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு சட்டசபை, சுதந்திரமான ஒரு நீதித்துறை, சட்டங்களையும் கொள்கைகளையும் அமுல் செய்வதில் நியாயமான அளவு தொழில் ரீதியான சுதந்திரத்தைப் பேணக்கூடிய ஒரு நிறைவேற்றுத் துறை என்பவை அதிகாரம் தான்தோன்றித்தனமாகப் பிரயோகிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துகின்ற நிறுவனங்களாகும். ஆனால் இவையாவும் பெயரளவிலேயே தாம் இருப்பதாக் கூறிக்கொண்டும் தம் அதிகாரங்களைத் துஷ்பிரயோகிக்கும் தன்மைகளையுமே வெளிக்காட்டுகின்றன.

அநேக நாடுகள் இலங்கை உட்பட மனித உரிமைகளைப் பாதுகாக்கவோ ஊக்குவிக்கவோ தவறி விடுகின்றன. சனநாயக ஆட்சி முறையின் முக்கிய ஆக்கக் கூறுகளான இவற்றுக்கு அதிகார வேறுபடுத்தல் செயலுருக்கொடுக்கின்றது. இவை ஏனோ தானோ என்பதான நிலைமைகளைவிட சுரண்டல் நிலைமைகளிலே அதிக பங்கேற்புச் செய்கின்றன.

மனித உரிமைகளை மெய்யாக அடைவதற்கு மிக உகந்த அரசியல் சட்டகத்தை சனநாயக ஆட்சிமுறை அளிக்கின்றது. அளிக்கவேண்டியது. ஆனால் அளிக்கப்படவில்லை. இலங்கையில் இது மோசமாகவே காணப் படுகிறது. ஏனெனில் அது குறிப்பாக அரசியல் வாழ்வில் பங்கு பற்றுவதற்கான உரிமை அடங்கலான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் விஸ்தரிப்பை அடிப்படையாகக் கொள்கின்றது. கொள்ளவேண்டியது. மேலும் அது அரசியல் தீர்மானங்களில் குரலெழுப்ப அனுமதிப்பதன் மூலம் ஏனைய உரிமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிறுவனங்களை சனநாயகம் கட்டியெழுப்பவேண்டியது.

## இனியவள்

சில"சனநாயகங்கள்" மனித உரிமைகளுக்கு ஏன்? எவ்வாறு? தீங்கு விளைவிக்கின்றன என்பது உலகளாவிய ரீதியில் சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாட்டாளர்களின் ஆராய்வும் தெரிவும் வகை கூறலும் தீர்வுகளும் முன்மொழிதலில் கருத்தூன்றுகின்றன.

சனநாயக ஆட்சிமுறையை நோக்கிய உலகளாவிய மாற்றம் சந்தேகத்துக்கிடமின்றி முன்னேற்றமென்ற பொழுதிலும் அதிகார ஆட்சிமுறையொன்றைத் தேர்தல் முறையொன்று வெறுமனே பதிலீடு செய்வதன்மூலம் மனித உரிமைப பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. ஒரு புதிய ஒழுங்குமுறைக்கான மாற்றம் மனித உரிமைகளை மேலும் மோசமடையச்செய்துள்ளது. ஏனைய சனநாயக நாடுகளின் கீழ் மனித உரிமை துஷ்பிரயோகங்களை உலக சமூகம் அளவுக்கு மீறிச் சகித்து வந்துள்ளன.

(19ஆம்பக்கம் பார்க்க)



# விளையாட்டு



# வல்லவனுக்கு வல்லவா..?

வல்லவனுக்கோர் வல்லவன் வையத்தில் உள்ளான் என்பதைப் போன்று அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் போட்டித் தொடர் அமைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன், ஆஷஸ் போட்டித் தொடர் குறித்து வெளிவந்த கருத்துக்கள், ரசிகர்கள் மத்தியில் இருந்த எதிர்பார்ப்பு என்பனவற்றை முற்றாகச் சிதைத்துவிட்டதொன்றாகவும் மாறியுள்ளது.

ஆஷஸ் தொடரின் மூன்றாவது போட்டி பெரும் பரபரப்பின் மத்தியில் எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமையே மேற்படி போட்டித் தொடர் குறித்து எண்ணவைத்துள்ளதெனலாம்.

இரு அணிகளுக்கிடையில் ஓல்ட்ராப் பேட் மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்சில் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோகன் சதத்துடன் (166) 444 ஓட்டங்களைக் குவித்தது இங்கிலாந்து அணி. இதற்கு பதிலளித்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி ஷேன் வோர்னின் அரைச் சதத்துடன் (90) 302 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.

ஆனால், இங்கிலாந்து அணியின் 444 ஓட்டங்களைப் பெற்று தனது முதலாவது இனிங்சை முடித்துக் கொண்டவுடன் ரசிகர்கள் மத்தியில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. இங்கிலாந்தின் இந்த ஓட்ட எண்ணிக்கையை விட அதிகமான ஓட்ட எண்ணிக்கையை அவுஸ்திரேலிய அணி குவிக்கும் எனக் கருதப்பட்டது.

அவுஸ்திரேலிய அணி மீது ரசிகர்கள் கொண்டிருந்த நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

இந்நிலையில், தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தியதுடன் அவுஸ்திரேலியாவுக்கான வெற்றி இலக்காக 423 ஓட்டங்களை நிர்ணயித்திருந்தது.

எனவே, இப்போட்டியை அவுஸ்திரேலிய அணி இலகுவாக சமன் செய்யும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால், பிளிண்டொப் மற்றும் ஹொக்காட், ஹர்மிசன் ஆகியோரின் அபாரமான பந்து வீச்சு அவுஸ்திரேலிய அணிக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங்கின் நிதானமான துடுப்பாட்டத்தின் (156) மூலமும் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களின் ஒத்துழைப்புடனும் அவுஸ்திரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றது ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடியக் காரணமாக அமைந்தது.

இதற்கு இங்கிலாந்து அணிக்கு பாதகமாக மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, ஆஷஸ் போட்டித் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு நிலையில் இருந்தது. அதாவது இங்கிலாந்து அணி இம்முறை கடுமையான சவால்களை அவுஸ்திரேலிய அணிக்குக் கொடுப்பார்கள் என்று.

ஆனால், முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் 236 ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அடைந்த படுதோல்வி அவ்வெண்ணத்தை இல்லாதொழித்ததுடன், இத்தோல்வியிலிருந்து இங்கிலாந்து மீள முடியாது எனவும் கருதப்பட்டது.


ஆனால், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் எல்லா எதிர்பார்ப்புகளையும் சிதறடிக்கும் வகையில், பெரும் பரபரப்புக்கு மத்தியில் இரண்டு ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியமை அனைவரையும் ஆச்சரியத்திற்குள் உள்ளாகியதுடன் மீண்டும் இங்கிலாந்து அணி மீது ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதற்கு அமைய மூன்றாவது போட்டி அமைந்திருந்தது.

எனவே, கடந்த எட்டு ஆண்டுகளாக அவுஸ் அணியிடம் அடைந்த தோல்விகளுக்கு. வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி முற்றுப்புள்ளி வைப்பது போன்ற எண்ணத்தை ரசிகர்கள் மத்தியில் தோற்றுவித்ததுடன், கடந்த காலங்களில் ரசிகர்கள் அடைந்த ஏமாற்றத்திற்கு விருந்தளிப்பதாகவே இப்போட்டித் தொடர் அமைந்துள்ளதெனலாம்.

இது இங்கிலாந்து அணிக்குக் கிடைத்த முதல் வெற்றி என்று கூடச் சொல்லலாம் ஏனெனில், ரசிகர்களை திருப்திப்படுத்தும் அளவிற்கு இப்போட்டித் தொடர் அமைந்ததெனில் அது இங்கிலாந்து அணியின் வளர்ச்சியையே சுட்டிக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

எனவே, மீதமுள்ள இரு போட்டிகளிலும் இரு அணிகளும் ரசிகர்களுக்கு தீனி போடும் விதமாக, பெரும் பரபரப்பை இறுதி வரை ஏற்படுத்துவார்களேயானால், உண்மையில் ஆஷஸ் தொடருக்கான முக்கியத்துவத்தைப் புரிய வைப்பதாக அமையும் எனில் மறுப்பதற்கில்லை.

**பூ.சுபானந்**



செல்போன் விளையாட்டுக்களில் தலைகாட்டவுள்ளார் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர்.

நசாரா டெக்னாலஜீஸ் மையம் இதை உருவாக்கியுள்ளது. சச்சினின் அபார ஆட்டம் பற்றிய இணையத்தள விவரங்களையும் செல்போன்களில் தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# செல்போனில் — சச்சின் டெண்டுல்கர்


இதற்கு எஸ்எம்எஸ் அனுப்பினால் போதுமானது.

'எரியா டெண்டுல்கர்' என்ற வொய்ஸ் ஜோன் வசதியும் அறிமுகமாகியுள்ளது. டெண்டுல்கரின் கருத்துகள் பிரத்தியேகப் பேட்டிகளை இதன் மூலம் கேட்கமுடியும்.

இது குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகக் கூறிய சச்சின் டெண்டுல்கர் தாமே செல்போன் விளையாட்டுகளில் மிகத் தீவிரமான ரசிகர் என்றார்.

இது மிகச் சிறந்த பொழுதுபோக்கு எனவும் பிரயாணங்களின்போது தாம் அடிக்கடி விளையாடுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

பாரீஸ், ஆக.18- பிரான்ஸ் நாட்டு டென்னிஸ் வீராங்கனை மேரி பியர்ஸ் முன்னணி ஆட்டக்காரர்களில் ஒருவர் ஆவார். கனடா நாட்டில் உள்ள மான்ட்ரில் நகரில் நடைபெற்று வரும் டென்னிஸ் போட்டியில் இவர் கலந்துகொண்டு விளையாடிவந்தார்.



# காயம் படுத்தும் பாடு

நேற்று அவருக்கு திடீரென முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் அப்போட்டியில் இருந்து விலகுவதாக மேரிபியர்ஸ் அறிவித்துள்ளார். கடந்த வாரத்தில் மட்டும் மேரிபியர்ஸையும் சேர்த்து 6 வீராங்கனைகள் காயம் காரணமாக போட்டிகளில் இருந்து விலகி உள்ளனர். அவர்களில் இந்திய வீராங்கனை சானியாமிர்சா வயிற்றில் ஏற்பட்ட தசைப் பிடிப்பு காயம் காரணமாக ஒரு போட்டியில் ஆட முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

மற்றும் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் அவுஸ்திரேலிய வீராங்கனை எலீசியா மோலிக், ரஷ்ய வீராங்கனைகள் மரிய சரபோவா, எலீனா பொவானா ஆகியோரும் காயம் அடைந்துள்ளனர் என்பது நினைவிருக்கலாம்.

கிரிக்கெட் வீரர்கள் தான் காயம் காரணமாக அவதியுறுகிறார்கள் என்றால் இப்போது டென்னிஸ் வீராங்கனைகளைக் காயம் பெரும் பாடுபடுத்துகிறது.

**(18ஆம் பக்கத் தொடர்ச்சி)**

சனநாயகத்துக்கு மாறி வரும் நாடுகள் மனித உரிமைகளை ஊக்குவிப்பதில் பொதுவாக நான்கு சவால்களை எதிர்நோக்குகின்றன.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எம் தேசத்தில் மனித உரிமைகள், இன, மொழி, பால் எனும் அசமத்துவப் போக்கில் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. சிறுபான்மை எனும் ரீதியில் தமிழ்மக்கள் தண்டிக்கப்பட்ட நியாயங்களும், வன்முறைகளும், கொலைகளும், சமூக, பொருளாதார, அரசியல் சீர்கேடுகளும் கபட நாடக சூழ்ச்சிகளும் தொடர்கின்றன.

மக்களால் மக்களுக்கான ஆட்சி எம் தேசத்தின் விளிம்பில் மனித உரிமை மீறல்களும் அடாவடித்தனங்களும் ஆக்கிரமிப்பிற்குமே துணை போயிருக்கின்றது. எம் தமிழ்மொழி உன்னத இலக்கைத் தொடர்ந்து பயணங்கள் மனித உரிமைகளையும் சனநாயகங்களையும் வெட்கித் தலை குனியச் செய்யுமளவிற்கு முன்னேறியுள்ளன.

உலக அம்பலத்தில் மனித உரிமைகள் எம்மட்டில் எப்படியாய் வாழ்கின்றன என்பதும் சனநாயகம் என்பது இலங்கை நாட்டிற்கு ஏற்புடையதுதானா எனும் கேள்வியும் எழுகின்றன. சகல மக்கள் மத்தியிலும் அரசியல் விழிப்புணர்வு மத்தியில் தமிழ் பேசும் மக்கள் சனநாயகம் பற்றி நன்கு புரிந்தும் புரியவும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சனநாயகம் எனும் பெயரில் கண்மூடித்தனமான பேரினவாதப் போக்குகள் மக்களின் சுதந்திரத்தை உரிமைகளை துஷ்பிரயோகிக்கின்ற வேளையில் தொடர்ந்து வன்மையாகக் கண்டிக்கவேண்டியதவசியமாகின்றது. இதற்கான தீர்வுகளை சனநாயகங்களே மனித உரிமைப் பிரகடனமாக நிலை நிறுத்தவேண்டியது அவசியமாகிறது.




நீர் எங்களது பிரதான வளங்களில் ஒன்றாகும். எனினும் சமகாலச் சூழலில் மிக அருந்தலான பொருண்மியப் பெறுமானம் கொண்ட பொருட்களில் ஒன்றாக நீர் கருதப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் மட்டுமல்ல எங்கள் பிரதேசங்களில் கூட நீர் ஒரு பெறுமதி மிக்க

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

பொருளாக மாறியுள்ளது.

மாரி காலம் முடிந்து வரட்சிகாலம் ஆரம்பித்து அது ஊக்கமடையும் வேளையில் தண்ணீர் வற்றி கிணறுகள் மலடாகும் வேளையிலும் குளங்கள் வற்றி பயிர்ச்செய்கை செய்ய முடியாத நிலையும் எமக்கு புதிதல்ல.

இதன் காரணமாகவே நீரைப் பாதுகாத்தலிலும் நீரைச் சேமிப்பதிலும் நாங்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனச் சொல்லப்படுகிறது.

நீரைச் சேமிப்பதில் நீரை அறுவடை செய்து சேமித்து வைத்தல் என்பது ஒரு முறையாகக் கருதப்படுகிறது. மழைவீழ்ச்சி குறைந்த காலங்களில் நீரைச்



செயற்கை முறையில் அறுவடை செய்து நீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் நீரை உபயோகித்தல் என்ற இம்முறை பல்வேறு நாடுகளில் செயற்படுத்தப்படும் திட்டமாகும்.

மழைவீழ்ச்சி சீரான முறையில் அல்லது வருடம் முழுவதும் பரவலாக பெய்யாத இடங்களில் வீணே வடிந்து போகும் மழை நீரைச் சேமிப்புக் கலங்களில் தேக்கி வைத்து ஓரளவு நீரைப் பாவிக்கலாம்.

இவ்வாறு நீரைச் சேமிக்கும் முறையிலேயே முன்னர் குறிப்பிட்ட நாடுகளில் வீடுகள் அமைக்கப்படுகின்றன.

கூரையில் இருந்து வடிந்து வரும் மழைநீரை பீலிகள் அமைத்து அவற்றின் ஊடாகவே தொட்டிகளுக்கு அனுப்பி நீரைச் சேமிக்க முடியும்.

இவ்வாறு சேமிக்கும் நீரை ஆவியாகாமல் தடுத்து நீண்டகாலம் வைத்திருக்கக் கூடிய நவீன முறைகள் கூட உள்ளன.

இத்துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் இது தொடர்பாக மேலதிக கவனம் செலுத்தி இம் முறைகளை ஊக்குவிக்கலாம்.

அதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நீர் தொடர்பான அச்சுறுத்தலை தவிர்க்கமுடியும்.

# உயிரியல் பீடைக் கட்டுப்பாட்டில் "ரைக்கோ கிராமா" பங்களிப்பு

உயிரியல் பீடைக் கட்டுப்பாடு எனப்படுவது பயிரைத் தாக்கும் பீடைகளை உயிர்வாழ்வன மூலம் கட்டுப்படுத்தும் முறை ஆகும். பீடைகளைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள், இரைகௌவிகள், இயற்கை எதிரிகள், நோய் உயிரிகள் என்பன பயன் படுத்தப் படுகின்றன. புதுமை விரும்பிகளாகிய இன்றைய விவசாயிகள் உடனடியாக பீடைகளைக் கட்டுப்படுத்த இரசாயன பீடைக் கட்டுப்பாட்டை கையாளுகின்றபோதிலும் உயிரியல் பீடைக் கட்டுப்பாட்டின் மூலம் மலிவாகவும் திறமையாகவும் பீடைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

ரைக்கோ கிராமா எனப்படுவது ஒரு முட்டை ஒட்டுண்ணியாகும். இவை ஏனைய பூச்சிகளின் முட்டைகளை உணவாகக் கொண்டு அதில் தமது கருக்களைப் பதிப்பதன் மூலம் இனப்பெருக்கமடைகின்றன. இவை வயல்களில் காணப்படும் போது பயிரைத் தாக்கும் பீடைகள் இடும் முட்டைகளைத் தேடி அவற்றை உண்டு அதில் தமது கருக்களைப் பதிக்கும்.

இதனால் எண்ணிக்கை அடிப்படையில் பீடைகள் குறைந்தும், ஒட்டுண்ணிகள் பெருக்கமடைந்தும் பீடை கட்டுப்படுத்தப் படுகின்றது. பீடைகளின் எண்ணிக்கை பொருளாதார சேதார மட்டத்தின் கீழ் இருக்குமானால் பயிர் பாதிப்படையாது. விளைச்சல் குறைவடையாது. பயிர் பாதுகாக்கப் படும். "ரைக்கோ கிராமா" வானது நெற்பயிரில் சந்து குத்தி, இலை மடிச்சுக்கட்டி, இலை சுருட்டி, அறக் கொட்டியான், கபிலத்தத்தி போன்ற பீடைகளைக் கட்டுப்படுத்துகின்றன. மரக்கறிப் பயிர்களில் காய் துளைப்புழு, தண்டு துளைப் புழுக்களை பூரணமாகக் கட்டுப் படுத்தக்கூடியது. அது தவிர பருப்புப் பயிர்களில் ஏற்படுகின்ற காய்துளைப் புழுவைக் கட்டுப்படுத்துகின்றது.

ரைக்கோக் கிராமா ஒட்டுண்ணியானது எமது பிரதேசங்களில் முன்னர் காணப்பட்டாலும் அளவுக்கதிகமான இரசாயனப் பதார்த்தங்களின் பாவனையால் அழிந்துவிட்டன. ஆனாலும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உயிரியல் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் அவர்களது முயற்சி காரணமாக ரைக்கோ கிராமா ஒட்டுண்ணி ஆனது இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

**பராமரிக்கும் முறை:-**

இவ்வொட்டுண்ணி பூச்சிகளின் முட்டைகளையே தமது உணவாகக் கொள்வதால் அந்துப் பூச்சிகள் ஒட்டுண்ணியின் உணவிற்காக வளர்க்கப்படுகின்றன. 0.5 Cm அளவிலான சாம்பல் நிற அந்துப்பூச்சிகள் நுளம்பு வலையின் கீழ் வளர்க்கப்படுகின்றன.

இவற்றிற்கு உணவாக அரிசித் தவிடு போன்றவை வழங்கப்படுகின்றன. நிறையுடலி அந்துப்பூச்சிகள் மிகச் சிறிய வெண்ணிற முட்டைகளை இடுகின்றன. இம் முட்டைகளில் ஒரு பகுதி நிறையுடலி அந்துப் பூச்சிகளை பெறுவதற்கு, மறுபகுதி அந்து வளர்க்கப்படும். வலையினுள் இருந்து வேறாக எடுக்கப்படுகின்றது. இவ்வாறு எடுக்கப்படும் முட்டைகளானது பசை பூசிய தடித்த மட்டையின் மீது பரவிக் காயவிடப்படுகின்றன. அந்தின் முட்டைகள் மட்டையில் நன்கு ஒட்டிக் கொண்டபின்னர் இவை ஒட்டுண்ணி உள்ள சிறிய கொள்கலன்களினுள் இடப்படுகின்றன. 5-7 நாட்களுக்குள் இம்முட்டைகள் ஒட்டுண்ணியால் உணவாக்கப்பட்டு அதில் தமது கருக்களைப் பதித்து விடுகின்றன. இவ்வாறு ஒட்டுண்ணியின் பதித்த அந்துப்பூச்சிகளின் முட்டை கபிலம் கலந்த கரு அடங்கிய முட்டைகள் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன.

அட்டையானது ரூபா 100.00 இற்கு வழங்கப்பட்டது. இதிலிருந்து 160.00 இற்கு மேற்பட்ட ஒட்டுண்ணிகள் பெறப்படுகின்றன.

**உபயோகிக்கும் முறை:-**

இவ்வட்டை ஒன்றை நான்காகப் பிரித்து வயலின்/ தோட்டத்தின் நான்கு பக்கங்களிலும் காற்றின் திசைக்கேற்ப வெயில், மழைபடாமல் இலைகளின் கீழ்ப் பக்கமாக காலையில் அல்லது மாலையில் கட்டப்படுதல் நல்லது. இவ்வட்டைகள் கட்டுப்படுவதற்கு முன் பின்னாக 15 நாட்களுக்கு பூச்சிநாசினிகள் எதுவும் விசுறுதல் கூடாது.

கருக்கட்டி முட்டைகளிலிருந்து ஓரிரு நாட்களிற்குள் ஒட்டுண்ணிகள் வெளிவரும். ஒட்டுண்ணிகள் ஒவ்வொன்றும் ஆகக்குறைந்தது நாலு பீடைகளின் முட்டைகளைச் சாப்பிட்டு அதனூடாக தனது இனத்தைப் பெருக்கும். ஒரு வாரத்தில் நான்கு மடங்கு ஒட்டுண்ணிகள் பயிரைப் பாதுகாக்கின்றன. ஒட்டுண்ணியின் கருக்கள் பதிந்த முட்டைகள் அனைத்தும் ஓரிரு நாட்களில் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் ஒட்டுண்ணிகள் வெளியேறி விடும். இவ்வட்டைகள் குளிரூட்டியினுள் வைத்து 15-20 நாட்கள் பாதுகாக்கலாம். அதன் பின்னர் இவை செயலிழந்து விடுகின்றன.

2002ஆம் ஆண்டிற்கு முன்னர் பொருளாதாரத்தடை காரணமாக கிருமிநாசினிகளிற்கு பெரும் தட்டுப்பாடு வன்னி நிலப்பரப்பில் ஏற்பட்டிருந்தது. அவ்வேளையில் விவசாயிகளுக்கு உற்ற நேரத்தில் உதவும் தோழனாக இருந்தது உயிரியல் பீடைக் கட்டுப்பாடே என்பது என்றும் மறுக்கமுடியாத மறைக்கமுடியாத உண்மை. அதில் ரைக்கோ கிராமாவின் பங்களிப்பு மிக மிக வியத்தற்குரியதாகவே இருந்திருக்கிறது. எனினும் இன்றைய சூழ்நிலையில் ஏ-9 பிரதான வீதி பாவனைக்கு வந்த பிற்பாடு விவசாயிகள் பெருமளவில் இரசாயனக் கட்டுப்பாட்டை கையாளத்தொடங்கி விட்டனர் என்பது கவலைக்குரிய விடயமாகும்.


ஏனெனில் ரைக்கோ கிராமா போன்ற நன்மைபயக்கும் இன்னும் எத்தனையோ உயிரினங்களின் காலனாக விவசாயி மாறி வருகின்றான்.

அது மட்டுமல்லாது இரசாயன பதார்த்தங்கள் நிலத்தையும், நீரையும், சூழலையும், உண்ணும் உணவையும் ஏன் எங்கள் உடம்பையும் நஞ்சாக்குகின்றன. இரசாயன பீடைக் கட்டுப்பாட்டை நிறுத்தி மீண்டும் உயிரியல் பீடைக் கட்டுப்பாட்டிற்கு விவசாயிகள் முக்கியமளிப்பார்களேயானால் நஞ்சற்ற உணவுற்பத்திக்கு படிக்கல்லாக அமையும். அத்துடன் விவசாயத்திணைக்களங்கள், விவசாய சம்மேளனங்கள், கமநல சேவைகள் திணைக்களம் போன்றன உயிரியல் பீடைக்கட்டுப் பாட்டுமுறையை கையாள்வதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல் கட்டாய கடமையாகும்.

**த.யாழினி**

# நெற்பயிரைத் தாக்கும் நெல் மூட்டுப்பூச்சி

(a) நிறையுடலி
(b) முட்டைக் கூட்டம்
(C) அணங்கு




கபிலத்தாவரத் தத்தியின் வாழ்க்கை வட்டம்.

இலங்கையின் நெல் பயிரிடப்படும் சகலபிரதேசங்களிலும் இப்பீடையின் பாதிப்பு காணப்படுகின்றது. விளைச்சலில் 10%-40% நஷ்டத்தை இது ஏற்படுத்துகின்றது.

**தாக்கத்தை அடையாளம் காணல்:-**

1. இளம் நெல்மணிகளில் இருந்து பால்/திரவ வித்தகவிழையம் முழுமையாக உறிஞ்சப்படுவதன் மூலம் வெற்றுமணிகள்/சப்பிகள் உருவாக்கப்படுதல்.

2. இவை பகுதியாக உறிஞ்சப் படுவதன் மூலம் குறைவிருத்தியடைந்த நெல்மணிகள் உருவாக்கபடுதல்.

3.பாதிக்கப்பட்ட நெல்மணிகளில் கடும் மண்ணிறப்புள்ளிகள் காணப்படுதல்.

**நிறையுடலிகள் (தாய்ப்பூச்சி)**

மெலிந்த நீண்ட உடலமைப்பைக்கொண்டவை. உடல் 15 மில்லி மீற்றர் நீளம் உடையவை. பச்சைநிற உடலையும், மண்ணிறச் சிறகுகளையும் கொண்டவை. எனவே முதுகுப்புறம் மண்ணிறமாகவும் வயிற்றுப்புறம் பச்சை நிறமாகவும் தோற்றமளிக்கின்றன. நீண்டகால்களையும், நீண்ட உணர்கொம்புகளையும் கொண்டவை. உடல் வெறுப்பான மணம் உடையவை.

**முட்டைகள் (Eggs)**

நிறையுடலிப் பெண் மூட்டுப் பூச்சிகள் நெல் இலைகளின் மேற்பரப்பில் தனி ஒரு வரிசையில் அல்லது இரண்டு வரிசைகளில் முட்டைகளை இடுகின்றன. ஒரு தட்வையில் நூற்றுக்கணக்கான முட்டைகள் இடப்படுகின்றன.

முட்டைகள் செந்நிறம் கலந்த மண்ணிறமானவை. குரக்கன் மணி போன்றவை, தட்டையானவை. முட்டைகளில் இருந்து ஒரு வாரத்தினுள் (5-8 நாட்களினுள்) இளம் அணங்குகள் வெளியேறுகின்றன.

**அணங்குகள் (குஞ்சுகள்)**

இளம் அணங்குகள் பச்சை நிறமானவை. இவை 5 தடவைகள் தோல்கழற்றி வளர்ச் சியடைகின்றன. இவையும் வெறுப்பானமணம் உடையவை ஆகும். அணங்குக்காலம் 17-27 நாட்கள் நீடிக்கும். இவற்றின் வாழ்க் கைவட்டம் நிறை வடைய 4 வாரங்கள் தேவைப்படுகின்றன.

**கட்டுப்படுத்தல்:-**

I. இரசாயனக் கட்டுப்பாட்டு முறை.

பின்வரும் பூச்சிநாசினிகளில் ஒன்றை சிபார்சின் படி பாவிக்கவும்.

1.பென்தோயேற் 5%தூ.தூ.
2.காபறில்5%க.தூ.
3.குயினல்பொஸ் 250கி.லீ செ.கு
4.பென்தியோன் 500கி.லீசெ.கு
5.காபோசல்பான் 200கி.லீ செ.கு.

கட்டுப்படுத்தல்

II. இரசாயன மற்றமுறை

1. 3% வேப்பெண்ணெய் கரைசல் மற்றும் 5% வேப்பம் விதைச்சாறு கரைசல் தெளிக்கலாம்.

2. ஒரு ஏக்கருக்கு பயன்படுத்த 3-5 கிலோ புகையிலை தேவை. புகையிலை இலைகளை தண்ணீரில் ஊறவைத்து 45 நிமிடங்கள் கொதிக்கவைக்கவேண்டும். பிறகு வடிகட்டி 60 லீற்றர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவேண்டும். வடிகட்டிய பிறகு எஞ்சி யுள்ள இலைகளை வெயிலில் காயவைத்துப் பொடிசெய்து இரண்டு முறை பயன்படுத்தலாம்.

3. 05கிலோ புகையிலைப் பொடியை ஒரு கிலோ மிளகாய் பொடியுடன் கலந்து கொள்ள வேண்டும். இதனுடன் 10 கிலோ மணல் கலந்து செடிகளின் மேல் தூவவேண்டும். புகையிலை, மிளகாய்க் கலவை பூச்சி விரட்டியாகச் செயல்படுகிறது.

**நா.குகானந்தன்,**
**விவசாயப் போதனாசிரியர்.**

**இளைஞர்களை கிராம ரீதியாக சந்தித்து இசைநாடகம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கருத்தமர்வுகள் பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களைக் கொண்டே ஆற்றுகைகளையும் போட வேண்டும்.**

# இசைநாடகம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

## ஆர்மோனியக் கலைஞர் பிலிப் ஜோண்கவாஸ்

நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்தில் வழிவந்த கலைஞராகவுள்ள ஆர்மோனியக் கலைஞர் பிலிப் ஜோண்கவாஸ் ஆர்மோனியத்தால் அரங்கை அலங்கரித்து ஆட்சி செய்துவரும் மூத்த இசைக் கலைஞர். இசைநாடக மாமேதை கலாநிதி வி.வி.வைரமுத்து குழுவினர் முதல் இன்றைய இளம் கலைஞர்கள் வரை பல ஆயிரம் மேடைகளில் ஆர்மோனியக் கலைஞராக பங்கேற்ற பெருமைக்குரியவர். 25 இற்கு மேற்பட்ட ஆர்மோனியக் கச்சேரிகளை நடத்தியுள்ள கலைஞர் மேலைத்தேச இசைக்கருவிகளையும் மிகத் திறமையாகக் கையாளும் வல்லமையுள்ளவர்.

அண்ணாவியார் அந்தோனி. பிலிப் (ஆர்மோனியம், நாட்டுக் கூத்து) வழிவந்து இன்றைய நான்காவது தலைமுறை இசைப் பாரம்பரிமுள்ள கலைக் குடும்பத்திலுள்ளவர். 53 வயதான கலைஞர் 16 வயதில் அரங்க நிகழ்விற்கு ஆர்மோனியம் வாசித்தவர். அச்சுவேலி வளலாயில் இருந்து இடம் பெயர்ந்து உரும்பிராயில் மிக நீண்டகாலமாக வசித்து வரும் கலைஞர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஆஸ்தான ஆர்மோனிய கலைஞராகவுள்ளார்.

தன் கலைத்துறைப் பிரவேசம் இசைக்கருவிகளின் லாவகமான கையாளுகை தொடர்பாகப் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை வாசகர்களிற்கு,

நாம்:- கலைத்துறைப் பிரவேசம் தொடர்பாக....

ஜோண்கவாஸ்:- நாம் பரம்பரையான பாரம்பரியக் கலைஞர்கள். எனது அப்பாவின் அப்பா நாட்டுக் கூத்து அண்ணாவியார். இவரது சகோதரர்களும் பெரும் கலைஞர்கள். இவர்களது வழிவந்தே 16 வயதில் ஆர்மோனியம் வாசிக்கத் தொடங்கினேன். இன்றுவரை பல மூத்த இளைய கலைஞர்களிற்காக ஆர்மோனியம் வாசித்து வருகின்றேன். சினிமாப் பாடல்கள், ஆர்மோனியக் கச்சேரி, நாட்டுக்கூத்து, சிந்துநடைக் கூத்தென பல வடிவங்களில் ஆர்மோனியப் பங்களிப்புச் செய்தாலும், இசை நாடகங்களிற்கே அதிகளவில் வாசித்துள்ளேன். அநேகமான இசை நாடகப் பாடல்கள் எனக்குப் பாடமாகவுள்ளன. இவை சில வேளைகளில் கலைஞர்களிற்கு மேடையில் கை கொடுத்த சம்பவங்களும் உண்டென அரங்கில் நடந்த சுவாரஷ்யமான சம்பவமொன்றை கூறியவரிடம்.

நாம்:- பாரம்பரிய கலை வடிவங்களிற்கு ஆர்மோனியம்....

ஜோண்கவாஸ்:- இசைநாடகத்திற்கே ஆர்மோனியத்தின் தேவை அதிகமாக இருந்தது. ஆர்மோனியம் இல்லையென்றால் இசைநாடகம் போடமுடியாது. கூத்திற்கு மத்தளமும் தாளமும் பயன்படுத்தினர். சிந்துநடைக் கூத்திற்கு உடுக்கும் தாளமும் பயன்படுத்தினர். இன்று இவற்றிற்கு ஆர்மோனியம் வாசிக்கின்றனர். இசை நாடகத்தில் இருந்தே இவற்றிற்கும் ஆர்மோனியம் வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டது. இப்பொழுது ஒரு சிலர் ஓகனையும் இசைநாடகம், கூத்துகளில் வாசிக்கின்றனர். ஆனால் அன்றில் இருந்து இன்றுவரை கடந்த அரைநூற்றாண்டிற்கு மேலாக தன் தனித்துவத்தை இழக்காது ஆர்மோனியம் பெரும் பங்காற்றி வருகின்றது என சற்றுப் பெருமிதமாகக் கூறியவரிடம்.

நாம்:- இசை நாடகத்தின் இன்றைய நிலை....

ஜோண்கவாஸ்:- நடிகமணி வி.வி.வைரமுத்துவின் காலம் இசை நாடகத்திற்கு கிடைத்த பொற்காலமெனலாம். இவரது காலத்திலேயே இசை நாடகம் பரவலாக்கப்பட்டது மட்டுமன்றி மக்கள் மயப் படுத்தப்பட்டது. இவரது இழப்பு இசை நாடக உலகிற்கே பேரிழப்பாகும். இவரிற்குப் பின்னர் இவருடன் இணைந்து நடித்த கலைஞர்கள் இசைநாடகங்கள் பலவற்றை மேடையேற்றினர். இப்பவும் ஒருசில நாடகங்களை மேடையேற்றியும் வருகின்றனர். கிராமப்புறங்களில் இப்பவும் இசைநாடகத்திற்கு பெருமளவு வரவேற்புண்டு. இன்றும் இசை நாடகத்திற்கென ரசிகர் கூட்டமுள்ளது. கடந்த சில வருடங்களிற்கு முன் இராணுவ ஆக்கிரமிப்பு போர்ச் சூழலினால் தளர்வு ஏற்பட்டது.

கலை நிறுவனங்கள், வேறு அமைப்புக்கள் தொடர்ந்து பங்காற்றி வருகின்றனர். இவர்களது செயற்பாடுகள் இசைநாடகத் துறைக்கு ஆறுதலாகவுள்ளதாகக் கருத முடியுமென பதிலளித்தவரிடம்.

நாம்:- மேலைத்தேச இசைக்கருவிகளில் உங்களிற்கு ஏதும் ஈடுபாடு....

ஜோண்கவாஸ்:- கர்நாடக சங்கீதத்தை முறையாகக் கற்றவர்கள் மிகத்திறமையாக ஆர்மோனியத்தை வாசிப்பார்கள். இராக தாளத்தை மிக நுணுக்கமாக அறிந்து வைத்திருக்க வேண்டும். நான் மேலைத் தேச இசைக்கருவிகளையும் வாசிக்கிறனான். ஆனால் குறைவு. மலோடிக்காவைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக திருப்புகழ், தில்லானா, கீர்த்தனைகளை வாசித்துக் காட்டியவன். இவ் இசைக்கருவியினுள் கர்நாடக சங்கீதத்தை உட்புகுத்திய பெருமை என்னையே சாரும். இதனால் பலரது பாராட்டுதல்களையும் பெற்றனான் என சிறு புன்னகையுடன் பதிலளித்தவரிடம்.

நாம்:-உங்களது இசைப் பாரம்பரியத்தின் பரம்பரையை நிலை நிறுத்த யாரையாவது.....

ஜோண்கவாஸ்:- என் பிள்ளைகள் இசைக் கலைஞராகவும் பாடகர்களாகவுமுள்ளனர். போராளி செயல்வீரன், மக்லேன் பிலிப் இருவரும் இசைக் கலைஞர்கள். மகள் சேனி இசைக்குழுக்களில் பாடிவருகிறா. இசைமணி த.றொபேட் என்னுடைய மாணவன். இன்றுள்ள மிகத் திறமையான ஆர்மோனியக் கலைஞர்களில் றொபேட்டும் ஒருவர் என பதிலளித்தவரிடம்.

நாம்:- கலைஞர்களிற்கு என்ன சொல்லப்போகிறீர்கள்....

ஜோண்கவாஸ்:- கலைஞர்கள் தூய்மையானவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக, நேர்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்போதே மிகத் திறமையான கலைப் படைப்புக்களை வெளிக் கொணர முடியும். இவற்றிக்கு அப்பால் நல்ல கலைஞர்களாக வளரும்போதே சமூகத்தில் நல்ல மனிதனாக வாழ முடியும்.

கலையை மதித்து அதற்கென உரிய மரியாதையைச் செலுத்த வேண்டும். குருபக்தியும் கலை விசுவாசமும் இதயத்தில் ஊடுருவ வேண்டும். அப்போதே கலை வளரும். அதன் ஊடாகக் கலைஞர்கள் வளர்வார்கள்.

இளைஞர்களை கிராம ரீதியாக சந்தித்து இசைநாடகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கருத்தமர்வுகள், பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களைக் கொண்டே ஆற்றுகைகளையும் போட வேண்டுமெனப் பதிலளித்தவரிடம்.

நாம்:- இசைத்துறை சார்பான வெளியீடுகள் தொடர்பாக....

ஜோண்கவாஸ்:- அண்மைக் காலமாக ஒலிநாடா இறுவெட்டுக்களின் வருகை அதிகரித்துள்ளது. இவற்றிலே ஆன்மீகக் கீதங்கள் அதிகளவாகும். இவை எந்தளவிற்கு மக்களிடம் சென்றுள்ளன. இசையமைப்பாளர், பாடலாசிரியர்கள் குறித்த இலக்கை அடைந்தார்களா என்பது நாம் எம்மையே கேட்க வேண்டியதாகவுள்ளது. தமிழீழ தேசியப் பாடல்களின் வருகை அதிகம்/ குறைவிற்கு அப்பால் அதனை கேட்கின்ற வேண்டுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதென்றே என்னால் கூறமுடியும். கருத்துக்களற்ற சினிமா மசாலாவிற்குள் தோய்ந்துள்ள எமது சமூகம் வெளிவரும்போதே எம்மவர்களின் படைப்புக்கள் புத்துயிர் பெறும்.



இவ்வாறு தன் கருத்துக்களை நிறைவு செய்தார் ஆர்மோனியக் கலைஞர் பிலிப் ஜோண்கவாஸ்.


இசை நாடகத்துறைக்கு மிக நீண்ட காலமாக ஆர்மோனியக் கலைஞராக பங்காற்றி வரும் கலைஞரிற்கு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் மரபுக் கலைச்சுடர் விருதினை வழங்கிக் கௌரவித்தது. இசைவேந்தன் ஆர்மோனியச் சக்கரவர்த்தி போன்ற விருதுகளுடன் பல இடங்களில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இவற்றிற்கெல்லாம் அப்பால் போரிடும் வல்லமை சேர்ப்போம் ஒலிப்பேழை வெளியீட்டில் உழைத்தமைக்காக தேசியத் தலைவர் பிரபாகரன் நினைவுப் பரிசினை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.


புலிகளின் குரல் இலங்கை வானொலி, ரூபவாகினி போன்ற ஊடகங்களில் வானலை வாயிலாக பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்.


பாரம்பரிய கலைத்துறைக்கு பரம்பரையாக் கலைப் பணியாற்றி வரும் கலைஞர் சார்ந்த குடும்பம், பாரம்பரிய கலைக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். ஆர்மோனியக் கலைஞரிற்குப் பின்னால் ஒரு இசைப் பாரம் பரியம் இருப்பதை கலைஞருடன் உரையாடியதன் மூலம் அறிந்து கொள்ளமுடிந்தது.

**இரா-வின்**

# ஒடுக்குமுறைக்குள்ளும் சிரிக்கும் கலைஞர்







இங்கிலாந்தில் உள்ள பிறிஸ்ரல் நகரில் பிறந்தவர் பலஸ்தீன கலைஞர் பாங்ஸ்ஸி. சித்திரக் கலைஞர். ஆனால் கொஞ்சம் விவகாரமான ஆள்.

நீதி தேவதை, முழங்கால் உயர பூட்சும் இராணுவ இடுப்புப்பட்டியும் அணிந்திருப்பது போல் அவர் உருவாக்கிய வெண்கல சிற்பம் "குறுக்குவழியில் புகழ்தேடும் வேலை'' என கலைத்துறை விமர்சகர்களால் கண்டனம் செய்யப்பட்டுள்ளது. புகழ்பெற்ற சித்திரக் காட்சிச்சாலைகளிலே அதிரடியாக நுழைந்து தன் சித்திரங்களை தொங்க விடுவதில் வல்லவர்.

பிரித்தானிய தொல்பொருள் காட்சிச்சாலையில் சுப்பமார்க்கட் தள்ளுவண்டியொன்றை தள்ளிச்செல்லும் குகை மனிதன் ஒருவனின் போலி ஓவியத்தை அவர் தொங்கவிட்டது ஒரு வாரம். வரை கவனிக்கப்படவே இல்லை.


அண்மையில், அவர் இஸ்ரேலின் ஒடுக்குமுறையை நோக்கி சிரித்திருக்கிறார். பலஸ்தீன போராளிகள் ஊடுருவாமல் தடுப்பதற்கு என்று கூறி 425மைல் (680 கிலோமீற்றர்) நீளத்துக்கு உயரமான சுவர் ஒன்றை அமைத்து கூர் அலகுகள் கொண்ட முட்கம்பி வேலியையும் அதன் மேல் அமைத்துவருகிறது இஸ்ரேல். சர்வதேசச் சட்டங்களுக்கு முரணானது என்று இச் சுவரை சர்வதேச நீதிமன்றம் கண்டனம் செய்துள்ளது.

இந்தச் சுவரின் பலஸ்தீன பக்கத்துக்கு ஓடிச்சென்ற பாங்ஸ்ஸி அதில் ஒன்பது ஓவியங்களை வரைந்து தள்ளியிருக்கிறார். அதில் மூன்று ஓவியங்களை இங்கே காண்கிறீர்கள். இந்த ஒன்பது ஓவியங்களில் ஒன்றில் சுவரின் அப்பால் நிகழும் வாழ்க்கையை எள்ளலாகக் காட்டுவது போன்ற துவாரம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. இன்னொன்றில் மலைப் பிரதேச இயற்கை வனப்பு தெரிவது போல் வரையப்பட்டிருக்கிறது. இன்னொன்றில் வெள்ளைக் குதிரையொன்று எட்டிப்பார்ப்பது போல் உள்ளது. இன்னொன்றில் சுவரின் மேலால் செல்வது போன்ற ஏணியொன்றை வரைந்திருக்கிறார்.

இவற்றை வரையும்போது இஸ்ரேலியப் படையினர் வானத்தை நோக்கி சுட்டதாகவும் தம்மை அச்சுறுத்தியதாகவும் பாங்ஸ்ஸி கூறியிருக்கிறார்.

ஒடுக்குமுறைக்கு நடுவிலும் சிரிக்கத் தெரிந்த இக்கலைஞர் எமக்கெல்லாம் ஒரு முன்மாதிரி என்பதில் எந்தக் கேள்விக்கும் இடமில்லை.

*தமிழில்:– வின்சென்ற் புளோறன்ஸ்*
*நன்றி. பி.பி.சி*



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 14**

**பகுதி -60**

அடுத்தவாரம் டிப்ஸ்ஸும் தாயாரும் வந்தபொழுது நான் வரவேற்பறையில் இருந்தேன். பூக்கள் அச்சிட்ட பட்டு ஆடையொன்றை நான் அணிந்திருந்தேன்.

"ஓ! இஞ்ச பாருங்கோ அம்மா!" என்று உரக்கவே குரல் கொடுத்த டிப்ஸ், "நல்ல வடிவான நிற உடுப்பு. இந்தப் பூக்கள் நல்ல வடிவாயிருக்கெல்லோ? நல்ல வடிவான உடுப்புத்தான்... என்ன அம்மா?" என்றான்.

"ஓம்" என்ற அவனது தாயார், "அது ஒரு வடிவான உடுப்புத்தான்" என்றாள்.

" நிறங்கள்... வடிவான நிறங்கள்" என்றான் டிப்ஸ்.

வழமையாக அமைதியாக நிகழும் அவனது வருகைகளிலிருந்து வேறுபட்டதாக இன்றைய வருகை இருந்தது. அவனுடைய தாயாரின் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது. "தனக்குக் கிடைத்த பிறந்த நாள் பரிசுகளில ஒன்றை உங்களுக்கு




காட்டுறதுக்கெண்டு கொண்டுவரவேணும் எண்டு டிப்ஸ் வற்புறுத்தினவன். அப்படிக் கொண்டு வந்தது உங்களுக்குப் பிரச்சினையில்லைத் தானே?" என்று அவள் கேட்டாள்.

"ஓ! ஒரு பிரச்சினையுமில்லை. அவன் அதைத் தன்னோட எடுத்துவர வேணும் என்று விரும்பினா அதில ஒரு பிரச்சினையுமில்லை" என்றேன்.

விளையாட்டறைக்குப் போவதற்கு டிப்ஸ் அவசரப்பட்டான். அவன் ஒரு பெரிய பெட்டியைக் கொண்டுவந்திருந்தான். அதற்குள்ளேதான் அந்தப் பரிசு இருக்கிறதென்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

"அவனால அதை உங்களுக்கு விளக்க முடியும்" என்று அவனது தாயார் சொன்னாள். "உண்மையைச் சொல்லப் போனால், அவனுக்கு எல்லாப் பதில்களும் தெரியும் என்ற உணர்வு எனக்கு ஏற்படத் தொடங்கியிருக்கிறது" என்று தொடர்ந்து சொன்னவளின் குரலில் பெருமை தொனிப்பது தெளிவாகவே தெரிந்தது.

டிப்ஸ் ஏற்கெனவே விளையாட்டறைக்குள் போய்விட்டிருந்தான். அவனைத் தொடர்ந்து நானும் சென்றேன். அவன் மணல் பெட்டியின் விளிம்பில் அமர்ந்துகொண்டு பரிசுப் பெட்டியைப் பிரித்தான். "நான் வந்திட்டன். நான் வந்திட்டன்" அறிவிப்பாக ஒலித்தது டிப்ஸின் குரல்.

"எனக்குத் தெரிகிறது. பிறகென்ன! வீட்டில் இருப்பது போல இருங்கள்" என்றேன்.

"வீட்டில இல்லை! விளையாட்டறையில!" டிப்ஸ் பதில் சொன்னான்.

"நல்லது. அப்ப விளையாட்டறையில வசதியா இருந்து கொள்ளுங்கோ!" என்றேன். டிப்ஸ் மகிழ்ச்சியுடன் விளையாட்டறைக்குள் சுற்றிவந்தான்.

"எனக்குப் பிறந்தநாள் கொண்டாடினவை" என்றான்.

"எப்பிடி, பிறந்தநாள் சந்தோசமாப் போச்சுதா?" என்று கேட்டேன்.

"ஓம்" என்று பதில் சொன்னான் டிப்ஸ். பரிசுப் பொட்டலத்தை நோக்கிச் சென்றான்.

"இதப் பாத்தீங்களா.... இது ஒரு சர்வதேச சமிக்கைத் தொகுதி. மின்கலங்களும் மற்றச் சாமான்களும் இருக்குது. இது புள்ளிகள். இது கீற்றுகள். இது செய்திகளச் சங்கேத மொழியிலதான் அனுப்பும்."

எழுத்துகள் ஒண்டுமில்லை தனியச் சங்கேதக் குறியீடுகளிலதான் செய்திய அனுப்பும்.

அவன் அப்பெட்டியை நகர்த்திய பொழுது மின்கலங்கள் வெளியே விழுந்து விட்டன. அவன் அவற்றை வேகமாக மீண்டும் பொருத்திவிட்டான்.

"இதுகள் கழண்டு வந்திடுங்கள்" என்று விளக்கினான். "இதுகள் இறுக்கமாப் பொருந்தாதுகள். நான் இந்த ஆளிய அமத்தும் பொழுது வாற சின்னச் சத்தத்தக் கேளுங்க. அதுதான் செய்தி. அற்புதமான பரிசு இல்லையா?"

"ஓம் டிப்ஸ் நல்ல பரிசுதான்"

"இது நல்ல ஆர்வமூட்டுற சாமான்" என்றுவிட்டு ஆளிகளை அழுத்தி செய்தியை "கிளிக்" செய்தான். எப்பிடி வேலை செய்யுதெண்டு கண்டீங்களா? இது ஒரு சர்வதேச சங்கேத மொழி. சங்கேத மொழி தெரிஞ்சா இந்த செய்தியை அறிஞ்சுகொள்ளலாம்.

"எனக்கு விளங்குது" என்றேன்.

ஜன்னலுக்கு வெளியே ஒரு ட்றக் வந்து நிற்பது கேட்டது.

"நீ ட்றக்கைப் பார் டிப்ஸ்" என்ற டிப்ஸின் குரல் அவனது முந்திய கதைக்கும் பாணிக்குத் திரும்பியிருந்தது. "நீ ஜன்னல திற டிப்ஸ்" என்று விட்டு ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தான்.

"ஓ ட்றக் போயிற்றுது" என்றான்.

"ட்றக் போயிற்றுதா?"

"ஓம் இந்தா இன்னொரு ட்றக் வருகுது" இன்னொரு ட்றக் வந்து தரித்துக் கொண்டது. டிப்ஸ் என்னைத் திரும்பிப் பார்த்து பெரிதாக இளித்தான். குழந்தைத் தனமான இந்தப் பேச்சு வழக்கிற்கு திரும்புவது என்பது பிறந்த நாளுக்குக் கிடைத்த பரிசுகள். குறிப்பாலுணர்த்திய எதிர்பார்ப்புகள் தந்த அழுத்தங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியாகவும் இருந்திருக்கக் கூடும்.

"இந்தா ட்றக் வந்திட்டுது" என்றான் டிப்ஸ். "அது நிண்டிட்டுது. அது இப்ப நகருது. பின்வளமா வருகுது. ஒரு ஆள் வெளியால வாறார். அவர் எதையோ சுமந்துகொண்டு வாறார். நாலு பெட்டிகள அடுக்கித் தூக்கிப் போறார். அவர் எதையோ உள்ளுக்கு எடுத்துப் போறார். இப்ப வெளியில வாறார். நாலு பெரிய பெட்டிகள எடுக்கிறார். அவர் உள்ளுக்குப் போறார்."

ஜன்னல் விளிம்பில் உடலைச் சாய்த்து வெளியே எட்டிப்பார்த்து ட்றக்கை ஆராய்ந்தான். பிறகு தன் தோளுக்கு மேலாக என்னைப் பார்த்தான்.

"இது ஒரு பெரிய ட்றக். அழுக்கான சிவப்பு நிறம். அது நிறையப் பெட்டிகள் இருக்குது. அந்தப் பெட்டிகளில அவர் என்னத்த வைச்சிருக்கிறார் எண்டு எனக்குத் தெரியாது. ஆனா ட்றக் நிறைய பெட்டிகள் இருக்குது. அந்த ஆள் ட்றக்குக்குள்ள போய்ப் போய் வாறார். அங்க எடுக்கிறதுகளக் கட்டடத்துக்குள்ள கொண்டு போறார். முன்னுக்கும் பின்னுக்கும்... உள்ளயும் வெளியிலயும்.. சாமான்களத் தூக்கிப் போறார்."

பொத்தகங்களைச் சுமந்துகொண்டு கல்லூரி மாணவிகள் இருவர் ஜன்னலைக் கடந்து போனார்கள். ஜன்னலுக்கு வெளியால் எட்டிப் பார்க்கும் டிப்ஸை நிமிர்ந்து பார்த்தார்கள்.

அவர்களில் ஒருத்தி, டிப்ஸைப் பார்த்து "ஹெலோ" என்றாள்.

டிப்ஸ் அவளைக் கண்டுகொள்ளவில்லை.

"நான் ஹெலோ எண்டு சொன்னேன்"



என்றாள். அப்போதும் டிப்ஸ் அவளைக்கண்டுகொள்ளவில்லை.

"உங்களுக்கு ஹெலோ சொல்ல ஏலாதா?" என்று கேட்ட அந்தப் பெண், தொடர்ந்து, "உங்களுக்குக் கதைக்க ஏலாதா? உங்களுக்கு என்ன பிரச்சினை? நாக்கப் பூனை கொண்டு போயிற்றுதா?" என்றாள்.

டிப்ஸ் ஒரு சொல்லைத்தானும் கூறவில்லை. தொடர்ந்து ஜன்னலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தி எதுவுமே பேசாமல் அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவர்கள் பார்வையை விட்டு மறைந்ததும் பேசத் தொடங்கினான்.

அவர்கள் போறத நான் பார்த்துக் கொண்டிருப்பன். அவங்களோட கதைக்க மாட்டன். அவையளுக்கு மறுமொழி சொல்லவும் மாட்டன். அந்தா... ட்றக்கில அந்த ஆள் போறார். அவ ரோடயும் கதைக்கமாட்டன். அந்தா... தெருவில ஒரு மனிசி நடந்து போறா... அவவோடயும் கதைக்க மாட்டன்... அவர்களில யாருக்கும் ஒரு வார்த்தை கூடச் சொல்ல மாட்டன்.... இந்தா ட்றக் போகுது. போயிற்று வா ட்றக்!"

அந்த ட்றக் பெருத்த இரைச்சலுடன் புறப்பட்டுப் போனது.

"உங்களுக்குக் ஹெலோ சொல்ல ஏலாதா? உங்களுக்குக் கதைக்க ஏலாதா?" என்று அந்தப் பெண்ணின் குரலை அப்படியே அபிநயித்துச் சொன்னான். ஜன்னலைப் படாரென்று அடித்துச் சாத்திவிட்டு, திரும்பி என்னைப் பார்த்த அவன் கண்களில் கோபம் பொங்கிக்கொண்டிருந்தது.

"ஹெலோ சொல்ல விரும்பயில்ல. அவங்களோட கதைக்கமாட்டன்" கத்திச் சொன்னான். "நான் கதைக்க மாட்டன்"

(தொடரும்)

---

(16ஆம் பக்கம் பார்க்க)

கணனிக்கும் இணையத்துக்குமாவது அஞ்சாமல் இருக்கட்டும். பிறந்தநாள், சாமத்தியச்சடங்கு செலவுக்குப் பதிலாக கணனி வாங்கிக் கொடுங்கள். இணையத் தொடர்பைக் கொடுங்கள். ஆங்கிலம் மட்டுமல்ல இன்னுமுள்ள உலக மொழிகளெல்லாம் இங்கு கற்பிக்கப்படவேண்டும். அடுத்த தலைமுறையில் நெருங்கிய உறவினருடன் உரையாடுவதற்கே இந்த உலக மொழிகள் தேவைப்படும் நிலையில் இருக்கிறோம். ஒரு காலத்தில் வேறு நாடுகளில் இருந்து, ஆபிரிக்காவில் இருந்து கூட, மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து கல்வி கற்றார்கள். சர்வதேசத் தரம் வாய்ந்த கல்வியால் எம்மவர் உலகெங்கும் சென்று தொழில் பார்த்தார்கள். அந்த நிலை வரவேண்டும். இன்று பண்பாட்டுக்காரணங்களுக்காக இந்தியாவின் சர்வதேசப் பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதுபோல புலம்பெயர்ந்த எமது பிள்ளைகள் இங்குவந்து சர்வதேசக் கல்வி கற்கும் நாள் வரவேண்டும். இன்றைய போர்ச்சூழலில் இதற்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். ஆனால் நாளைய அந்நிலை வரக்கூடிய அடித்தளம் இப்போதே இடப்படவேண்டும்.

பள்ளிக்கூடங்களுக்கூடாக வரவேண்டிய மற்றொரு முக்கிய பண்பாட்டிற்கு அடித்தளம் பாற்சமத்துவம். இது இல்லாத பண்பாட்டிற்கு இன்றைய உலகில் இடமில்லை. உலகளாவிய ஈழத்தமிழ் பண்பாட்டு அடையாளத்தைக்காட்டவும் முடியாது. பாற்சமத்துவம் என்பது சம வேலைவாய்ப்பு, கல்விவாய்ப்பு, சொத்து, பொருளாதார உரிமை போன்றவை மட்டுமன்று; இவை இன்று பெரிய சிக்கல்களும் அல்ல. பால் வேற்றுமை, பாராட்டாத மனப்பான்மை, உருவாவதே பாற்சமத்துவம். இது பண்பாட்டால் வருவது. பள்ளிக்கூடங்களிலிருந்து தொடங்கப்படவேண்டியது.

எங்கள் கல்வி நிறுவனங்களை ஆண், பெண் கல்வி நிறுவனங்கள் என்று பாகுபடுத்தியதில் காலனித்துவ மத நிறுவனங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. ஆரம்பத்தில் பெண் கல்விக்கு வித்திடுவதற்கு அது தேவைப்பட்டிருந்தாலும் காலப்போக்கில் கல்வி நிறுவனங்களில் பால் பிரித்துப் படிப்பிப்பதும் தான் எங்கள் பண்பாடு என்பது நாங்களே வரித்துக்கொண்டதுண்டு. கிராமங்களில் சைவப்பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டபொழுது இப்பிரிப்பு இடம்பெறவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். பால் பேதம் பாராட்டாத மனப்பான்மைக்கும் பால்களுக்கிடையிலான புரிந்துணர்வுக்கும் உலகளாவிய வேண்டியதொரு சமூகத்தின் தேவைகளுக்கும் கல்விக்கூடங்களிலிருக்கும் இந்தப் பாகுபாடு இன்று அவசியமற்றது;

சிதம்பரத்திற்கு காணிகள் எழுதி மடங்கள் கட்டிவிட்ட எங்கள் சமூகத்தில் இருந்து இன்று எவரும் சிதம்பரம் போவதாகத் தெரியவில்லை. தமிழ் முருகனிடம் போவதும் அருகிவிட்டது. சாயிபாபா, ஐயப்பனாவதற்கு இணங்கிவிட்ட ஐயனார், ஆஞ்சநேயர், துர்க்கை, சமயபுரம் மாரியம்மன், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி-இவை சமயத்தின் புதிய போக்குகள். இந்தியாவிற்கு யாத்திரைவரும் புலம்பெயர்ந்தோரில் ஒரு பகுதி சாய்பாவாவிடமும், மற்றவர்கள் சமயபுரம் மேல்மருத்தூர் சபரி மலைக்கும் போகிறார்கள். இவற்றுக்கூடாக புதிய வர்த்தக பேதங்கள் புதிய ஆதர் சங்கங்கள் பாரம்பரிய நிறுவனங்களில் நம்பிக்கையின்மை போன்றவை வெளிப்பட்டாலும் இந்த செயல்நெறிகளை அமைப்பியல் (structuralism) ரீதியாக ஆராய்ந்தவர்கள் இவற்றிற்கூடாகச் சமூகத்தில் புரையோடிப்போன பால்சார்ந்த சிக்கலொன்றும் வெளிப்படுவதாகச் சொல்கிறார்கள்.

தொடர்புசாதனப்புரட்சி யுகத்தில் நாம் வாழ்கிறோம். வலையும் பின்னலுமாக எதையும் எவரும் கட்டுப்படுத்திவிட முடியாத காலமிது. பிள்ளைகள் எதிர்பார்க்கிறார்கள் என்று பெற்றோர் இங்கும் அஞ்சுகிறார்கள். அங்கும் அஞ்சுகிறார்கள்.

எதையும் எப்படிப் பார்ப்பது என்று பெற்றோரும் பள்ளிக்கூடங்களும் சொல்லிக்கொடுக்க முடிந்தால் பண்பாட்டைப்பற்றி அஞ்சவேண்டியதில்லை. நீலப்படம் பார்ப்பதென்பதை விட நீலப்படம் பார்த்துத்தான் தங்களைத் திருப்திப்படுத்திக்கொள்ள வேண்டிய நிலையில் இளைஞர்களையும் யுவதிகளையும் வைத்திருக்கும் பண்பாட்டுக் வக்கிரம் கூடிய சிக்கல்கள் தரக்கூடியது.

பண்பாட்டு பாரம்பரியம் உள்ள கல்வி நிறுவனங்கள் எம்மிடம் மிகக்குறைவு. மஹாஜனாவின் புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள் நினைத்தால் இதை மீளவும் கட்டலாம். உலகளாவிய ஈழத்தமிழர் பண்பாட்டு அடையாளத்திற்கு அடித்தளமிடும் வகையில் கட்டலாம். கல்வி தனியார் மயப்பட்டு வரும் காலத்தில் அரசின் கற்கை நெறிகளுக்கு அப்பாலும் சிலவற்றைச் செய்யக்கூடிய சுதந்திரம் அரசகல்வி நிறுவனங்களுக்கும் இன்று உண்டு. இதைப் பயன்படுத்தி சில வசதிகளையும் இன்று யாழ்ப்பாணத்தில் கிடைக்காத, ஆனால் தேவையான கற்கைநெறிகளையும், அறிமுகப்படுத்தினால் மஹாஜனா அந்தக்காலத்தைவிட சிறப்பாக வரவழியுண்டு.

ஈழத்தமிழரது பண்பாட்டு அடையாளத்தின் விரிவான பரிமாணங்களை தருவது இவ்வுரையின் நோக்கமல்ல. அடிக்குறிப்புக்கள் இட்ட ஆய்வுக்கட்டுரையாகவும் இதைத் தயாரிக்கவில்லை. பண்பாட்டு அடையாளம் பற்றிய விழிப்புணர்வை இது தருமானால் அது இவ்வுரையின் பயன் என்று தேசத்தை வைத்துக் கொண்டோ அல்லது தேசம் கடந்தோ பண்பாட்டு அடையாளத்தின் அடிப்படையில் உலகம் தழுவிய சமூகத்தை எந்த மக்கள் குழுவினரும் கட்டலாம். பொருத்தமான பண்பாட்டு அடிப்படைகளுக்கூடாக அதைச் செழிப்புள்ளதாகவும் ஆக்கலாம். புதிய உலகின் சித்தாந்தச் சூழலும் தொடர்பு1சாதனப் புரட்சியும் இதற்கு வாய்ப் பானவை. உண்மையில் தேவைப்படு வது ஒன்றுதான். அது மனப்பான்மை மாற்றம்.

# பாவலன் பதில்கள்

பாவலன் பதில்கள் என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

*பாவலனே!*
*எந்த நினைவு உன்னை அதிகமாக துன்புறுத்துகிறதோ அதற்கு பெயர்தான் பசுமையான நினைவு என்கிறார்கள் உண்மையா?*

*ஆ.லூசியா மேரி,*
*முழங்காவில்.*

பசுமை எதுவாக இருந்தாலும் அதற்குத் தண்ணீர் அல்லது கண்ணீர் தேவைதான்... அதிகமான சிரிப்பும், ஆழமான அழுகையும் கண்ணீரால்தானே அடையாளப்படுத்தப்படும்.

*பாவலனே!*
*புலியும் சிங்கமும் காட்டில் ஒற்றுமையாக வாழ்வதில்லை. இலங்கையில் எப்படி சாத்தியப்படுமா?*

*ஆ.சுதர்சிகா,*
*உழவனூர்.*

இரண்டு மன்னர்கள் ஒரே நாட்டிற்கு அரசராக இருக்கமுடியாது. இரண்டு 'வாள்'கள் ஒரே உறைகுள் இருத்தல் சாத்தியமா?

*என்னும் தமிழர் ஒருவரை சேர்த்துள்ளனர். அணியில் நீடித்து வைத்திருப்பார்களா?*

*சாந்தன்,*
*இலுப்பைக்கடவை.*

முரளிதரன் மாதிரி தவிர்க்க முடியாத ஒருவராக மிளிர்ந்தால் மட்டுமே.

*பாவலனே!*
*பெண் புத்தி பின் புத்தி என்கிறார்கள் அப்படியாயின் ஆண் புத்தி முன் புத்தியா?*

*பிரபா,*
*திருவையாறு.*

இல்லைப் பெண்ணின் "பின்"னால் திரியும் புத்தி.

*பாவலனே!*
*நல்லூர் திருவிழாவில் இம்முறை இராணுவத்தினர் ஏதேனும் கடை நடத்தவில்லையா?*

*மதி,*
*மானிப்பாய்.*

விரதகாரர்கள் மத்தியில் அப்பக்கடை எடுபடாதே!

*என்ன பாவலனே!*
*நாட்டு நிலைமை எப்படிப் போகுது?*

*சுதா,*
*புதுக்குடியிருப்பு.*


சரியில்லாத நிலைமையால்-நிலையில்லா வாழ்க்கை... அவ்வளவுதான்.

*பாவலனே!*
*அணுவாயுத தயாரிப்பை நிறுத்தாவிடின் ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தப் போகிறதாமே?*

*அனுசா,*
*கொடிகாமம்.*

அமெரிக்கா தனது சனத்தொகையைக் குறைக்க இப்போது இந்த வழியைத்தான் பயன்படுத்துகிறது போலும்.

*பாவலனே!*
*கதிர்காமரின் இரங்கல் உரையின் போது பிரதமர் உணர்ச்சிவசப்பட்டு விட்டா*




*பாவலனே!*
*எங்களிடம் ஒரு பொருளை பெற்றவர்களிடம் நாம் அதனை தருமாறு திருப்பிக் கேட்டால் விதண்டா வாதம் பேசுவார்கள் இவர்களை என்ன செய்யலாம்?*

*திரிசா,*
*உதயநகர்.*

அதுதான்... வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாமல் இருக்கவேண்டும் என்பது.

*பாவலனே!*
*எனக்கு அரசியல் பிடிக்கும் உமக்கு எப்படி?*

*ஆ.ஆனந்தி,*
*ஆயப்பகுதி.*

அரசியலைப்பிடிக்கும்-ஆனால் அரசுகளைப்பிடிக்காது.

*பாவலனே!*
*சிறிலங்கா கிரிக்கெட் அணியில் கோண்டாவிலைச் சேர்ந்த பிரதீப் ஜெயப்பிரகாஷ்*

*பாவலனே!*
*ஆனந்த சங்கரி அடுத்த வெளியுறவு அமைச்சராக வந்தால் நிலைமை எப்படியிருக்கும்?*

*த.நிவேதா,*
*புதுக்குடியிருப்பு.*

ஆனந்த சங்கதியாக இருக்காது.

*பாவலனே!*
*கொலையா...! விடுதலைப்புலிகள் தான் செய்திருப்பார்கள் என எதற்கெடுத்தாலும் திருவாய் மலரும் சிறிலங்காவின் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் கூறுவது பற்றி நீர் என்ன கூறுகின்றீர்?*

*தர்சி,*
*திருவையாறு.*

அப்படிச்சொல்வது அவர்களுக்கொரு 'கலை' அதனால் தான் நாட்டிற்கு இந்த நிலை.

*போலிருக்கிறதே?*

*சுமன்,*
*வவுனியா.*

கதிர்காமருக்குக் கிடைக்க இருந்த கதிரையில் அல்லவா அவர் இப்போது இருக்கிறார். உணர்ச்சி வசப்படத்தான் செய்வார்.

*பாவலனே!*
*எங்காவது ஆட்டோவில் உமக்குப்பிடித்த வாசகம் வாசித்ததுண்டா?*

*விந்துஜா,*
*நல்லூர்.*

வேகம் சொர்க்கத்துக்கு வழிகாட்டும், விவேகம் போகும் இடத்திற்கு வழிகாட்டும்!

*பாவலனே!*
*உமக்கு போதனைகள் பிடிக்குமா?*

*நிசாந்தி,*
*கோணாவில்.*

சாதனைகள் பிடிக்கும்..!




கொழும்பில்

"வணக்கம் சேர்... நீங்கள்..?"

-நான் சீ.ரீ.பீ நேரக்காப்பாளர்.

-ஓ உங்களத்தான் சந்திக்க வந்தநான். எங்கட ரூட்டில போற பஸ் கொண்டக்டர் தன்ர வீட்டடியில நெடுக பஸ்ஸ நிப்பாட்டிப்போட்டு சாப்பிட்டுட்டு வாறார்.

-அப்பிடியே...

-அவர் குறுந் தூரப் பயணிகளுக்கு ரிற்கற்போடாம காசு வாங்கிறார். சரியான இடங்கள்ள நிப்பாட்டமாட்டார்-

-அ... எப்ப நடந்தது?

-நெடுகத்தான் நடக்குது? எட்டுரூபாப் பயணத் தூரத்துக்கு பத்துரூபா எடுக்கிறார்...

-நீங்கள் மிச்சக்காசு கேக்கயில்லையே.?

-கேட்டா அங்கால நகர்ந்திடுவார். நீங்கள் இதுகளுக்கெல்லாம் நடவடிக்கை எடுக்க வேணும். இதுக்கெல்லாம் சாரதியும் உடந்தை. கை காட்டினா பஸ் நிக்கிறதில்லை.

-மன்னிக்கவேணும் என்னால நடவடிக்கை எடுக்கேலாது...


-அப்ப நாங்கள் சாலைப் பொறுப்பாளரட்டப் போக வேண்டி வரும்.

- போங்கோ ஆனா அவரும் ஒண்டுஞ் செய்யேலாது.

-என்னையா எவ்வளவு சட்ட மீறல் நடக்குது நீங்கள் ஒண்டுஞ் செய்யேலாதெண்டா உதுக்கென்ன முடிவு.

-லெச்சனில சரியான ஆளுக்கு வோட்டுப் போடுங்கோ-உவங்களெல்லாம் மந்திரியின்ர ஆக்கள். எம்பி மார் சப்போட். நாங்கள் ஒண்டுஞ் செய்யேலாது...

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–133



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை சீர் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்–133

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –132



**சு.சி.தமிழினி,**
**த.பு.வா. கழகம்,**
**மாவட்டச் செயலகம்,**
**கைவேலி.**

### பரிசுக்குரிய வரிகள்

*பெண்ணே சமையற்கலை தான் உனக்கு*
*கைவந்த கலை என எண்ணி–சாதனைகளை சாகடிக்காதே*
*உனக்குள்ளும் பல திறமைகள் புதைந்து கிடக்கின்றன*
*புரிந்து கொண்டு முயன்றிடு புதுமைப் பெண்ணாகலாம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*தன் இனத்தின் (விஞ்)ஞானமதை இச்சிறுமி வென்றிடுவாள்*
*புதுப் பரணி எழுதுகின்ற தமிழீழப் புலிமகளின் பிறப்பாவாள்*
*வந்த கதி எத்தனையோ எரிமலையாய் இவள் மனதில்-இன்று*
*நிலந்தரமாய் போயழிய சிரிப்புடனே இவள் உயர்வாள்.*

ம.அஜந்தா,
விசுவமடு.

*வயிற்றுப் பசிக்குக் கிடைக்காத உணவை*
*விளையாட்டாகச் செய்து மனதை*
*நிரப்புகிறாயா? மகளே கலங்காதே!*
*விடியலில் வாடிய முகங்கள் நிமிரும்.*

எஸ்.ஆர்.செல்வி,
மாங்குளம்.

*சின்னப் பெண்ணே!-நீ*
*சிரிப்புடன் அகமகிழ்ந்து*
*விளையாட்டாக சமையல் செய்து-நாளை*
*உன் வீ(நா)ட்டினை அலங்கரிக்க திடமாகிறாயோ?*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.


*மனம் பேதலித்து வாழ்வு சிதறாமல்*
*விளையாட்டில் கண்ணாயிரு மகளே!*
*உனது வீடும் அழகான குசினியும்,முற்றமும்*
*மீளும் நாளை பொறுத்திரு மகளே!*

எஸ்.ராஜி,
வட்டக்கச்சி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு



# இன்று நல்லைக்கந்தன் மஞ்சத்திருவிழா!

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக்கந்தன்
மஞ்சத்திருவிழாவில் விசேட திருவருட்காட்சியைக்
கண்டுகளிக்கவும் முருகன் அருள் பெறவும்
வாழ்த்துகின்றோம்.

## கிறீன் பலஸ் எம்போரியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி, திருநெல்வேலி.



(சி-12711)



அசல் 22 கரட் தரம் குன்றா தங்க நகைகள் விற்பனையாளர்

## திருவருள் நகைமாடம்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்.

## பெருமருகன் நகைப்பூங்கா

கனகபுரம் தெரு, கிளிநொச்சி.



(சி-12712)

பற்பல பதவிகள் பெற்று பவனியில் உலாவர

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் மனிதநேயமும் ஒருங்கே பெற்ற

மாண்புமிகு திருவாளர்

## துரைசிங்கம் ரகு

அவர்களுக்கு

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர்



பதவியை வாரி வழங்கிய இறைவனுக்கு
நன்றி கூறுவதுடன்
எமது வளர்ச்சிக்கும் பாலம் போன்று வடிகால்
அமைத்துக்கொடுத்த பரிசுத்தமானவருக்கு
எம்முடைய மனமார்ந்த வாழ்த்துக்களுடன்
மனதாரப் பாராட்டுக்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
மேன்மேலும் பல பல பதவிகள் பெற
மீண்டும் மீண்டும் இறைஞ்சுகின்றோம்.
வாழ்க! வாழ்க!! வளமுடன்
பல பேரினதும் ஆசிகள் பெற்று
பல பல பதவிகள் பெற்று பவணியில்
உலாவர வாழ்த்துகின்றோம்.



உரிமையாளர்:
திரு. திருமதி. சுகுமாரன்

மிலேனியம் றெஸ்ரோரன்ற் &
உல்லாசப்பயணிகள் விடுதி
76/60 இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 2810, 0773 031680

(சி-12713)

## EXPOAIR

your friend in the skies...

## எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com





(C-11725)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.